Registered with the Registrar
of Newspapers for India under
No. 10410

Registered No.
PY/44/2018-20
WPP No. TN/PMG(CCR)/
WPP-88/2018-20
Dated : 7-8-2018
Price : ₹ 60-00

# புதுச்சேரி மாநில அரசிதழ்

## La Gazette de L' État de Poudouchéry

## The Gazette of Puducherry

**PART - II**

| | | |
|---|---|---|
| **சிறப்பு வெளியீடு** | **EXTRAORDINAIRE** | **EXTRAORDINARY** |
| *அதிகாரம் பெற்ற வெளியீடு* | Publiée par Autorité | Published by Authority |
| *விலை :* ₹ 60-00 | Prix : ₹ 60-00 | Price : ₹ 60-00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **எண்** | | **புதுச்சேரி** | **செவ்வாய்க்கிழமை** | **2018 ஆம்** | **ஆகஸ்ட் மீ** | **7 வ** |
| **No.** | **38** | **Poudouchéry** | **Mardi** | **7** | **Août** | **2018** |
| **No.** | | **Puducherry** | **Tuesday** | **7th** | **August** | **2018** |

**(16 Sravana 1940)**

புதுச்சேரி அரசு

**தலைமைச் செயலகம் (வீட்டுவசதி)**

*[அரசு ஆணை பலவகை எண் 13/2017-Hg, புதுச்சேரி, நாள் 2017 ஆம் சூலை மீ 18 வ.]*

அறிவிக்கை

2016-ஆம் ஆண்டு அசையாச்சொத்து வணிகம் (ஒழுங்குமுறைவிதி மற்றும் வளர்மானம்) சட்டத்தின் (16/2016) 84-ஆம் பிரிவினாலும், 2-ஆம் பிரிவின் (g) பிரிவுக்கூறின் (ii)-ஆம் உட்பிரிவுக்கூறை அடியொற்றியும் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துகையில், புதுச்சேரித் துணைநிலை ஆளுநர் பின்வரும் விதிகளை ஈங்கிதனால் செய்கிறார், அவையாவன:—

## இயல்-I

## முகவுரை

**1.** *குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்* .— (1) இந்த விதிகள் 2017-ஆம் ஆண்டு புதுச்சேரி அசையாச்சொத்து வணிகம் (ஒழுங்குமுறைவிதி மற்றும் வளர்மானம்) (பொது) விதிகள் [The Puducherry Real Estate (Regulation and Development) (General) Rules, 2017] என அழைக்கப்பெறும்.

(2) அவை புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு முழுவதையும் அளாவிநிற்கும்.

(3) அவை அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் தேதி அன்றும் அது முதற்கொண்டும் செயலாற்றலுக்கு வரும்.

**2.** *பொருள்வரையறைகள்*.—(1) இத்தகைய விதிகளில் தறுவாய் பிறவாறாக வேண்டுறுத்தினால் அன்றி,–

(a) "சட்டம்" என்பது, 2016 ஆம் ஆண்டு அசையாச்சொத்து வணிகம் (ஒழுங்குமுறை மற்றும் வளர்மானம்) சட்டம் எனப் பொருள்படும்;

(b) "உரிய அரசு" என்பது புதுச்சேரி அரசு எனப் பொருள்படும்;

(c) "ஒப்புதலளிக்கப்பட்ட திட்டம்" (Approved Plan) என்பது, அடுக்கு வீடு/கட்டிடம் எனும் நேர்வில், ஒப்பளிக்கப்பட்ட கட்டிடத் திட்டத்துடன் சேர்த்துத் திட்டமிடும் அதிகாரஅமைப்பால் வழங்கப்பட்ட ஒப்பளிப்பு (sanction) என்றும், மனைக்கட்டு வளர்மானம் எனும் நேர்வில் திட்டமிடும் அதிகாரஅமைப்பால் வழங்கப்பட்ட அறுதி ஒப்புதலளிப்பு மனைஅமைப்பு விவரத்திட்டம் (Layout Plan) என்றும் பொருள்படும்;

(d) "ஒதுக்கீடுபெறுபவர்களின் சங்கம்" (association of allottees) என்பது, எந்தப்பெயரில் அழைக்கப்பட்டாலும், அதன் உறுப்பினர்களின் நோக்கத்திற்குப் பயன்படும் வகையில் ஒரு குழுவாகச் (group) செயலாற்றுகிற, அப்போதைக்குச் செயலாற்றலில் உள்ள சட்டம் எதன் கீழும் பதிவுசெய்யப்பட்டுள்ள, அசையாச் சொத்து வணிகச் செயல்திட்டத்தின்படி ஒதுக்கீடுபெறுபவர்களின் ஒரு கூட்டமைப்பு எனப் பொருள்படும்; மற்றும் ஒதுக்கீடு பெறுபவர்களின் அதிகாரம் பெற்ற சார்பாளர்களை உள்ளடக்கும்.

(e) "உறுதிச்சான்றிட்ட படியம்" (authenticated copy) என்பது, இத்தகைய விதிகளின் கீழ் ஆள் ஒருவரால் அளிக்கப்படவேண்டுமென வேண்டுறுத்தப்பட்ட ஏதேனும் ஆவணத்தின் தற்சான்றொப்பிட்ட ஒரு படியம் எனப் பொருள்படும்;

(f) "அதிகாரஅமைப்பு" (Authority) என்பது, சட்டத்தின் 20-ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவின் கீழ்ப் புதுச்சேரி அரசால் நிறுவப்பட்ட அசையாச்சொத்து வணிக ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பு எனப் பொருள்படும்;

(g) "படிவம்" (Form) என்பது, இத்தகைய விதிகளுக்குப் பின்னிணைப்பாகவுள்ள ஒரு படிவம் எனப்பொருள்படும்;

(h) "முன்னேறிவரும் செயல்திட்டம்" (ongoing project) என்பது, வளர்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிற மற்றும் அதற்கான கையுடைமைச் சான்றிதழ் (Occupancy Certificate) வழங்கப்பட்டிருக்காத ஒரு செயல்திட்டம் எனப் பொருள்படும்; ஆனால் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவு செயலாற்றலுக்கு வரும் தேதியன்று பின்வரும் வகையினங்களில் எதையும் நிறைவுசெய்கிற அத்தகை செயல்திட்டங்களை விலக்குகிறது:—

(i) நிலஅமைப்புவிவரச் செயல்திட்டங்களில், அதாவது, நிலமானது மனைக்கட்டுகளாக (plots) மேம்படுத்தப்பட்டிருக்கிறவிடத்து, தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புக்குக் கொடையாக அளிக்கப்பட்ட சாலைகள் மற்றும் திறந்தவெளிகள்:-

(ii) செயல்திட்டங்களிலுள்ள கட்டிடங்கள் அனைத்தும் கட்டமைப்பு வகையில், அதாவது தூண்கள், உத்தரங்கள் மற்றும் பாளங்கள் அனைத்தும் கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு ஆதாரமாகவுள்ள நிழற்படங்களுடன், அச்செயல்திட்டத்துடன் இணைந்து செயல்பட்ட கட்டிடக்கலைஞர்/உரிமம்பெற்ற பொறியாளர்/ கட்டமைப்புப் பொறியாளரிடமிருந்து சான்றிதழ் அளிக்கப்படுவதற்கு உட்பட்டு, தொடர்புடைய திட்டமிடும் அதிகாரஅமைப்பிடம் கையுடைமைச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிற செயல்திட்டங்கள். திட்டமிடும் அதிகாரஅமைப்பு, வகுத்துரைக்கப்பட்ட கையுடைமைச் சான்றிதழ்க் கட்டளைநெறியங்களுக்கு (norms) இணங்கியவாறுள்ள அத்தகைய செயல்திட்டங்களுக்கு கையுடைமைச் சான்றிதழை வழங்கும். கையுடைமைச் சான்றிதழ் வேண்டி தாக்கல்செய்யப்பட்டுள்ள நேர்வுகளில், கட்டளைநெறிகளை மீறியதற்காகக் கையுடைமைச் சான்றிதழவழங்குவது திட்டமிடும் அதிகாரஅமைப்பால் மறுத்துத்தள்ளப்படுகிறது என்றால், அத்தகைய செயல்திட்டங்கள் குறித்து அசையாச்சொத்து வணிக ஒழுங்குமுறை அதிகார அமைப்புக்குத் தெரிவிக்கப்படும் மற்றும் அசையாச்சொத்து

வணிக ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பிடம் பதிவுசெய்தலுக்குக் கட்டுப்பட்டதாகும். இத்தகைய விதிகளின் அறிவிக்கைக்கு முன்னரே திட்டமிடும் அதிகார அமைப்பிடம் கையுடைமைச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பம் பதிவுசெய்யப்பட்டிருக்கிற விடத்து, அத்தகைய அனைத்துச் செயல்திட்டங்களின் விவரங்களும், இத்தகைய விதிகளின் அறிவிக்கையை அடுத்துப் பின்பு, நகர மற்றும் கிராமத் திட்டமிடும் துறையின் மற்றும் அசையாச்சொத்து வணிக ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பின் இணையதளத்தில் அத்தகைய அனைத்துச் செயல்திட்டங்களின் பட்டியலை வெளியிடுவதன் வாயிலாகப் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும்;

(i) "திட்டமிடும் அதிகாரஅமைப்பு" (Planning Authority) என்பது, 1969 ஆம் ஆண்டு புதுச்சேரி நகர மற்றும் கிராமத் திட்டமிடும் சட்டத்தின் (13/1970) 11 ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட திட்டமிடும் அதிகாரஅமைப்பு எனப் பொருள்படும்;

(j) "அடித்தளப் பரப்பிடம்" (plinth area) என்பது, அடித்தளத்தின் அல்லது ஏதேனும் மாடியின் தரைமட்டத்தில் அளக்கப்பட்டுக் கட்டுமானத்தில் அடங்கியுள்ள பரப்பளவு எனப் பொருள்படும் ; மற்றும் மொத்த அடித்தளப் பரப்பிடம் என்பது, அனைத்துத் தளங்களின் தரைமட்டத்தில் அளக்கப்பட்டுக் கட்டுமானத்தில் அடங்கியுள்ள மொத்த பரப்பளவு எனப் பொருள்படும் ;

(k) "ஒழுங்குமுறைவிதிகள்" (regulations) என்பது 2016-ஆம் ஆண்டு அசையாச்சொத்து வணிகம் (ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் வளர்மானம்) சட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட ஒழுங்குமுறைவிதிகள் எனப்பொருள்படும்.

(l) "செயலாளர்" (Secretary) என்பது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கல்வித் தகுதிகளுடன் அதிகாரஅமைப்பால் பணியமர்த்தப்பட்ட அதிகாரி எனப் பொருள்படும் ; மற்றும்

(m) "பிரிவு" (section) என்பது, இச்சட்டத்தின் ஒரு பிரிவு எனப் பொருள்படும்.

2. இத்தகையை விதிகளில் பயன்படுத்தப்பட்டுப் பொருள் வரையறுக்கப்படாத, ஆனால் சட்டத்தின் கீழ் பொருள்வரையறுக்கப்பட்டுள்ள சொற்களும் சொல்லமைப்புகளும், சட்டத்தில் அவற்றிற்கு முறையே குறித்தளிக்கப்பட்ட பொருளைக் கொண்டிருக்கும்.

இயல்-II

**அசையாச்சொத்து வணிகச் செயல்திட்டங்கள்**

3. *செயல்திட்டத்தைப் பதிவுசெய்தலுக்காக அசையாச்சொத்து வணிகரால் (Promoter) அளிக்கப்பட வேண்டிய தகவல் மற்றும் ஆவணங்கள்.*— *(1)* ஓர் அசையாச்சொத்துவணிகர், அதிகாரஅமைப்பிடம் செயல்திட்டத்தைப் பதிவு செய்தலுக்காக, சட்டத்தின் 4-ஆம் பிரிவின் கீழ் குறித்துரைத்தவையோடு சேர்த்துப் பின்வரும் தகவலையும் ஆவணங்களையும் அளிக்க வேண்டும், அவையாவன:-

(a) அசையாச்சொத்துவணிகரின் பான் (PAN) அட்டை மற்றும் ஆதார் (Aadhaar) அட்டையின் உறுதிச்சான்றிட்ட படியம்.

(b) அடுத்து முற்போந்த (immediately preceding) மூன்று நிதி ஆண்டுகளுக்கான அசையாச்சொத்துவணிகரின் தணிக்கைசெய்த ஆதாய - இழப்புக் கணக்கு, இருப்புநிலை ஏடு, பணப்பொழிவு விவரவுரை, இயக்குநர்களின் அறிக்கை மற்றும் தணிக்கையாளர் அறிக்கை உள்ளிட்ட ஆண்டறிக்கை; மற்றும் ஆண்டறிக்கை கிடைக்கத்தக்கதாக இல்லை எனுமிடத்து, அடுத்து முற்போந்த மூன்று நிதி ஆண்டுகளுக்கான அசையாச்சொத்து வணிகரின் தணிக்கைசெய்த ஆதாய-இழப்புக் கணக்கு, இருப்புநிலை ஏடு, பணப்பொழிவு விவரவுரை மற்றும் தணிக்கையாளர் அறிக்கை;

(c) அசையாச்சொத்து வணிகச் செயல்திட்டத்தில் கிடைக்கத்தக்க வாகனம் நிறுத்துவதற்கான திறந்தவெளிப் பரப்பிடத்தின் எண்ணிக்கை மற்றும் வாகனம் நிறுத்துவதற்கான மேல்மூடிய பரப்பிடத்தின் எண்ணிக்கை;

(d) வளர்மானம் கருதுகை செய்யப்படுகிற நிலத்திற்குரிய அசையாச்சொத்து வணிகரின் (promoter) உரிமைமூலத்தின் உறுதிச்சான்றளிப்புடன் உரிமைமூலத்தின் தொடர்ச்சி குறித்துச் சட்டமுறைப்படிச் செல்லுநிலை ஆவணங்களையும் சேர்த்து, அந்த அசையாச்சொத்து வணிகரின் உரிமைமூலத்தை எதிரொளிக்கும் சட்டப்படியான உரிமைமூல ஒப்பாவணத்தின் உறுதிச்சான்றிட்ட படியம்;

(e) குறைந்தது பத்து ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்கும் ஒரு வழக்குரைஞர் அல்லது நேர்வுக்கேற்ப வட்டாட்சியர் படிநிலைக்குக் குறையாத வருவாய் அதிகாரியிடமிருந்து வில்லங்கமின்மைச் சான்றிதழ் வாயிலாக, ஒரு நிலத்தில் அல்லது அதன் மீதுள்ள எவையேனும் உரிமைகள், உரிமைமூலம், நலன், கொடுபடவேண்டியவை, வழக்கீடு மற்றும் சார்பினரின்

பெயர் உள்ளடங்கலாக எந்த நிலத்தின் மீது வளர்மானம் கருதுகை செய்யப்படுகிறதோ அந்த நிலத்தின் மீதுள்ள வில்லங்கங்களின் விவரங்கள்;

(f) வளர்மானம் கருதுகைசெய்யப்பட்ட நிலத்தின் சொந்தக்காரராக அசையாச்சொத்துவணிகர் இல்லை எனுமிடத்து, அசையாச்சொத்து வணிகருக்கும் அத்தகைய சொந்தக்காரருக்கும் இடையே செய்துகொண்ட ஒருங்குழைப்பு உடன்பாடு, வளர்மான உடன்பாடு, கூட்டு வளர்மான உடன்பாடு அல்லது நேர்வுக்கேற்ப வேறு ஏதேனும் உடன்பாட்டின் படியம் ஒன்றுடன் சேர்த்து, மற்றும் செயல்திட்டம் வளர்மானம்செய்யக் கருதுகை செய்யப்பட்ட நிலத்தினுடைய சொந்தக்காரரின் உரிமைமூலத்தை எதிரொளிக்கிற உரிமைமூலம் மற்றும் வேறு ஆவணங்களின் படியங்களையும் சேர்த்து, நிலச் சொந்தக்காரரிடமிருந்து இசைவு பெற்றது பற்றிய விவரங்கள்;

(g) தனிப்பட்ட ஒருவர் என்றால் அசையாச்சொத்துவணிகரின் பெயர், நிழற்படம், தொடர்பு விவரங்கள் மற்றும் முகவரி, மற்றும் பிற இனங்கள் எனும் நேர்வில் தலைவர், கூட்டாளிகள் நேர்வுக்கேற்ப இயக்குநர்கள் மற்றும் அதிகாரம்பெற்ற ஆளின் முகவரி, நிழற்படம், தொடர்பு விவரங்கள் மற்றும் முகவரி;

(h) ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய வேறு தகவல் மற்றும் ஆவணங்கள்;

(2) விண்ணப்பத்தைத் தாக்கல்செய்யும் நடைமுறையானது இணைய வழி (online) செய்யப்படும் வரையில், அத்தகைய செயல்திட்டத்தின் பதிவுக்காக அதிகார அமைப்புக்கான விண்ணப்பம் A படிவத்தில் மூன்று படியங்களில் எழுத்து வழிச் செய்யப்பட வேண்டும்;

(3) அசையாச்சொத்துவணிகர் பதிவுக்காக விண்ணப்பிக்கும் நேரத்தில் பட்டியல் வங்கியின் பேரில் வரையப்பட்ட ஒரு கேட்பு வரைவோலை அல்லது வங்கியர் காசோலை வழியே, அல்லது நேர்வுக்கேற்ப இணைய வழியே செலுத்துவதன் மூலம், பின்வரும் வீதங்களில் கணக்கிடப்பட்ட ஒரு தொகையைப் பதிவுக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்:-

(a) குடியிருப்புத் தொகுப்பு வீட்டுவசதிச் செயல்திட்டம் எனும் நேர்வில், வளர்மானம் செய்யக் கருதிய நிலத்தின் பரப்பிடம் ஓராயிரம் சதுர மீட்டர்களுக்கு மேற்படாதவிடத்து, செயல்திட்டங்களுக்கான மொத்த அடித்தளப் பரப்பிடத்திற்கு, ஒரு சதுர மீட்டருக்கு ஐந்து ரூபாய், அல்லது வளர்மானம் செய்யக் கருதிய நிலத்தின் பரப்பிடம் ஓராயிரம் சதுர மீட்டருக்கு

மேற்படுகிறவிடத்து, செயல்திட்டங்களுக்கான மொத்த அடித்தளப் பரப்பிடத்திற்கு, ஒரு சதுர மீட்டருக்குப் பத்து ரூபாய், ஆனால் ஐந்து இலட்ச ரூபாய்களுக்கு மேற்படுதல் கூடாது;

(b) (குடியிருப்பு மற்றும் வர்த்தக)க் கலப்புச் செயல்திட்டம் எனும் நேர்வில்,- வளர்மானம்செய்யக் கருதிய நிலத்தின் பரப்பிடம் ஓராயிரம் சதுர மீட்டருக்கு மேற்படாதவிடத்து, செயல்திட்டங்களுக்கான மொத்த அடித்தளப் பரப்பிடத்திற்கு, ஒரு சதுர மீட்டருக்குப் பத்து ரூபாய்; அல்லது வளர்மானம் செய்யக்கருதிய நிலத்தின் பரப்பிடம் ஓராயிரம் சதுர மீட்டருக்கு மேற்படுகிறவிடத்து, செயல்திட்டங்களுக்கான மொத்த அடித்தளப் பரப்பிடத்திற்கு, ஒரு சதுர மீட்டருக்குப் பதினைந்து ரூபாய், ஆனால் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேற்படுதல் கூடாது.

(c) வர்த்தகச் செயல்திட்டம் அல்லது வேறு ஏதேனும் செயல்திட்டங்கள் எனும் நேர்வில், - வளர்மானம் செய்யக் கருதிய நிலத்தின் பரப்பிடம் ஓராயிரம் சதுர மீட்டருக்கு மேற்படாதவிடத்து, செயல்திட்டங்களுக்கான மொத்த அடித்தளப் பரப்பிடத்திற்கு ஒரு சதுர மீட்டருக்கு இருபது ரூபாய்; அல்லது வளர்மானம் செய்யக் கருதிய நிலத்தின் பரப்பிடம் ஓராயிரம் சதுர மீட்டருக்கு மேற்படுகிறவிடத்து, செயல்திட்டங்களுக்கான மொத்த அடித்தளப்-பரப்பிடத்திற்கு, ஒரு சதுர மீட்டருக்கு இருபத்தைந்து ரூபாய், ஆனால், பன்னிரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேற்படக்கூடாது, மற்றும்

(d) மனைக்கட்டுப்பிரிப்பு வளர்மானச் செயல்திட்டங்கள் எனும் நேர்வில், ஒரு சதுர மீட்டருக்கு ஐந்து ரூபாய்; ஆனால் இரண்டு இலட்ச ரூபாய்க்கு மேற்படுதல் கூடாது.

(4) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (2)-ஆம் உட்பிரிவின் (1) ஆம் பிரிவுக்கூறின் கீழ், பணிந்தனுப்பப்பட வேண்டிய விளம்புகை (declaration) ‘B’ படிவத்தில் இருக்க வேண்டும். அது அடுக்குவீடு, மனைக்கட்டு அல்லது நேர்வுக்கேற்ப கட்டிடம் எதையும் ஒதுக்கீடுசெய்யும் நேரத்தில் ஒதுக்கீடுபெறுபவர் எவருக்கும் எதிராக அசையாச்சொத்து வணிகர் வேற்றுமைபாராட்டவில்லை என்பதை எடுத்துரைக்கும் விளம்புகை ஒன்றையும் உள்ளடக்குதல் வேண்டும்.

4. (1) சட்டத்தின் 3-ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவுத் தொடக்கத்திற்கான அறிவிக்கையின் பேரில், முடிப்புச் சான்றிதழ் (Completion Certificate) பெற்றிராத முன்னேறிவரும் ஒரு செயல்திட்டத்தின் அசையாச்சொத்துவணிகர், மேற்சொன்ன உட்பிரிவில் குறித்துரைத்த நேரத்திற்குள் 3-ஆம் விதியில் வகைசெய்தவாறு அதிகாரஅமைப்புக்கு ஒரு விண்ணப்பம் செய்ய வேண்டும்.

(2) அசையாச்சொத்துவணிகர் 3-ஆம் விதியில் வகைசெய்யப்பட்ட வெளிப்பாடுகளுக்கும் கூடுதலாக, பின்வரும் தகவலையும் வெளிப்படுத்த வேண்டும், அதாவது:-

(a) முதன்முதலாக ஒப்பளித்த திட்டம், அமைப்புவிவரத் திட்டம் மற்றும் தனிக்குறிப்பீடுகள் (specifications) மற்றும் பிந்தியநிலையில் இப்போதிருந்துவரும் ஒப்பளித்த திட்டம், அமைப்புவிவரத் திட்டம் மற்றும் தனிக்குறிப்பீடுகள் உள்ளடங்கலாக, நிறைவேற்றப்பட்ட மாற்றமைப்புகள் எவையுமிருப்பின் அவை;

(b) ஒதுக்கீடுபெற்றவர்களிடமிருந்து திரட்டப்பட்ட மொத்தப் பணத்தொகை, மற்றும் அசையாச்சொத்துவணிகரிடம் எஞ்சியிருக்கும் மொத்த மீதிப் பணத்தொகை உள்ளடங்கலாக அச்செயல்திட்டத்தின் வளர்மானத்திற்காகப் பயன்படுத்திய மொத்தப் பணத்தொகை;

(c) காலதாமதம் உட்பட விற்பனை நேரத்தில் செயல்திட்டத்தை முடிப்பது பற்றி ஒதுக்கீடுபெறுபவருக்கு வெளிப்படுத்திய முதன்முதலான காலஅளவு மற்றும் முடியாமலுள்ள செயல்திட்டத்தை முடிப்பதற்காக அவர் பொறுப்பேற்கிற காலஅளவு இது ஏற்கனவே முடிக்கப்பட்ட வளர்மானப் பரப்புடன் அளவொத்திருக்க வேண்டும் என்பது உள்ளடங்கலாக (நாளிது வரையில் நிறைவேற்றிய வளர்மானப் பரப்பளவு மற்றும் முடியாமலுள்ள வளர்மானப் பரப்பளவு) செயல்திட்டத்தின் நிலை; இந்தத் தகவல் முறையாகத் தொழிலாற்றும் ஒரு பொறியாளர், ஒரு கட்டிடக்கலைஞர் மற்றும் ஒரு பட்டயக்கணக்கரால் உறுதிச்சான்றளிக்கப்பட வேண்டும்;

(d) மனையிடத்தின் நிறைவேற்றத்திற்கு ஏற்ப, உறுதிச்சான்று பெற்ற திட்டங்கள் மற்றும் மனைஅமைப்புவிவரம்;

(e) ஏற்கனவே செய்த முன்பதிவுகளுக்கு ஏற்ப உறுதிச்சான்றுபெற்ற திட்டங்கள் மற்றும் மனைஅமைப்புவிவரம் ;

(f) அசையாச்சொத்துவணிகருக்கும் ஒதுக்கீடுபெற்றவருக்கும் இடையே ஏற்கனவே செய்துகொண்ட உடன்பாட்டின் உறுதிச்சான்றுபெற்ற படியம், மற்றும்

(g) ஒப்பளித்த திட்டத்தில் சேர்மானங்கள் மற்றும் மாற்றுகைக்காக, ஒதுக்கீடு பெற்றவரிடமிருந்து பெறப்பட்ட இசைவுக் கடிதத்தின் உறுதிச்சான்றுபெற்ற படியம்.

(3) அசையாச்சொத்துவணிகருக்கும் ஒதுக்கீடுபெற்றவருக்கும் இடையே செய்துகொண்ட உடன்பாட்டின் செல்லும்தன்மையைப் பாதிக்காத அளவுக்கு உயர்தரப் பரப்பிடம், உயர்தரக் கட்டுமானப் பரப்பிடம், கட்டுமானப்

பரப்பிடம் முதலானவை (super area, super built up area, built up area etc.,) போன்ற வேறு ஏதேனும் அடிப்படையின் பேரில் முன்னதாகவே விற்கப்பட்டிருந்தாலும் கூட, அசையாச்சொத்து வணிகர் தரைத்தளப் பரப்பிடம் (carpet area) அடிப்படையில் அடுக்குவீட்டின் (apartment) அளவை வெளிப்படுத்த வேண்டும்:

(4) மனைக்கட்டுப்பிரிப்பு வளர்மானச் செயல்திட்டம் எனும் நேர்வில், அசையாச்சொத்துவணிகர், மனைஅமைப்புவிவரத் திட்டத்திற்கு ஏற்ப ஒதுக்கீடு பெற்றவருக்கு விற்கப்பட்டு வருகிற மனைக்கட்டுப் பரப்பிடத்தை வெளிப்படுத்த வேண்டும்.

(5) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று முன்னேறிவரும் மற்றும் முடிப்புச் சான்றிதழ் பெற்றிராத செயல்திட்டங்களின் பொருட்டு, அசையாச்சொத்து வணிகர், அதிகாரஅமைப்பிடம் அச்செயல்திட்டத்தின் பதிவுக்காக விண்ணப்பம் செய்த மூன்று மாத காலஅளவுக்குள், சட்டத்தின் 4-ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (1)-ஆம் பிரிவுக்கூறின் (D) உட்பிரிவுக்கூறின் கீழ் வேண்டுறுத்தியவாறு செயல்திட்டத்தின் கட்டுமானத்திற்காக அல்லது செயல்திட்ட நிலத்தின் விலைக்காகப் பயன்படுத்தப்பட்டிராதவையும், ஆனால் அதில் குறித்துரைத்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டியவையும், ஒதுக்கீடுபெற்றவர்களிடமிருந்து ஏற்கனவே வசூலிக்கப்பட்டவையுமான தொகைகளில் எழுபது விழுக்காட்டைத் தனியொரு வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்ய வேண்டும்.

5. *செயல்திட்டப் பதிவை வழங்குதல் அல்லது மறுத்தல்*.—(1) விதி (3) மற்றும் நேர்வுக்கேற்ப விதி (4) உடன் படித்துப் பொருள்கொள்ள வேண்டிய, சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கு ஏற்ப ஒரு செயல்திட்டத்தைப் பதிவுசெய்தலின் பேரில், அதிகாரஅமைப்பு 'C' படிவத்தில் ஒரு பதிவு எண்ணுடன் பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்க வேண்டும்.

(2) பிரிவு 5 இன்படி விண்ணப்பத்தை மறுத்தல் எனும் நேர்வில், அதிகார அமைப்பு 'D' படிவத்தில் விண்ணப்பதாரருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.

ஆனால், அதிகாரஅமைப்பு, அதனால் குறித்துரைக்கப்படலாகும். அத்தகைய காலஅளவுக்குள் விண்ணப்பத்திலுள்ள குறைபாடுகளைத் திருத்தியமைக்க விண்ணப்பத்தாருக்கு ஒரு வாய்ப்பை வழங்கலாம்.

*6. செயல்திட்டத்தின் பதிவுசெய்தலை நீட்டித்தல்*.— (1) இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிவானது, அசையாச்சொத்து வணிகரால் மூன்று படிகளில் (in triplicate) "E" படிவத்தில் செய்து கொண்ட ஒரு விண்ணப்பத்தின் பேரில்,

வழங்கப்பட்ட பதிவுக்காலம் முடிவுறுவதற்கு முன்பாக மூன்று மாதங்களுக்குள், விண்ணப்ப நடைமுறை இணையவழி செய்யப்படும் வரையில், அதிகாரஅமைப்பால் நீட்டிக்கப்படலாம்.

(2) பதிவு நீட்டிப்புக்கான விண்ணப்பம், செயல்திட்டத்தை செய்துமுடிப்பதிலான காலதாமதம் பற்றிய காரணங்களையும், அத்தகைய காரணங்களுக்கு ஆதரவாகும் ஆவணங்களுடன் சேர்த்துச் செயல்திட்டத்திற்குப் பதிவு நீட்டிப்பற்கான தேவையையும் எடுத்துரைக்கும் விளக்கக்குறிப்பு ஒன்றுடன் சேர்த்து, 3 ஆம் விதியின் (3)-ஆம் உள்விதியின் கீழ் வகுத்துரைத்தவாறான பதிவுக் கட்டணத்தில் சரிபாதிக்குச் சமமானதொரு தொகை, ஏதேனும் பட்டியல் வங்கியின் பேரில் வரையப்பட்ட ஒரு கேட்பு வரைவோலை அல்லது வங்கியர் காசோலையுடன் அல்லது நேர்வுக்கேற்ப இணையவழிச் செலுத்தம் வாயிலாகச் சேர்ந்துபோதல் வேண்டும்:

ஆனால், அசையாச்சொத்துவணிகர் வலிய மிகப்பெரிய (force majeure) காரணம் பொருட்டுச் செயல்திட்டப் பதிவு நீட்டிப்புக்கு விண்ணப்பிக்கிறவிடத்து, அவர் கட்டணம் எதையும் செலுத்தக் கடப்பாடுடையவர் ஆகார்.

(3) செயல்திட்டப் பதிவு நீட்டிப்பு, செயல்திட்டம் அல்லது நேர்வுக்கேற்ப அதனுடைய பகுதியைச் செய்துமுடிப்பதற்கு உள்ளூர்ச் சட்டங்களின்படி வகை செய்யப்பட்ட காலஅளவுக்கு அப்பால் இருத்தல் ஆகாது.

(4) பதிவு நீட்டிப்பு எனும் நேர்வில், அதிகாரஅமைப்பு “F” படிவத்தில் அத்தகைய நீட்டிப்புப் பற்றி அசையாச்சொத்து வணிகருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் மற்றும் பதிவு நீட்டிப்புக்கான விண்ணப்பத்தை மறுத்தல் எனும் நேர்வில், அதிகாரஅமைப்பு ‘D’ படிவத்தில் அத்தகைய மறுப்புப் பற்றி அசையாச்சொத்து வணிகருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்:

ஆனால், அதிகாரஅமைப்பானது அதனால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய காலஅளவுக்குள் விண்ணப்பத்திலுள்ள குறைபாடுகளைத் திருத்தியமைக்க விண்ணப்பத்தாருக்கு ஒரு வாய்ப்பை வழங்கலாம்.

7. *செயல்திட்டத்தின் பதிவைப் பின்னறவுச்செய்தல் (Revocation)*.—சட்டத்தின் 7-ஆம் பிரிவின்படி ஒரு செயல்திட்டத்தின் பதிவைப் பின்னறவுச் செய்வதன் பேரில், அதிகாரஅமைப்பு “D” படிவத்தில் அத்தகையை பின்னறவு பற்றி அசையாச்சொத்து வணிகருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.

இயல் - III

**அசையாச்சொத்துவணிக முகவர்**

8. *அசையாச்சொத்துவணிக முகவர் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்.*—(1) சட்டத்தின் 9-ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்படி பதிவுசெய்தல் வேண்டப்படுகிற அசையாச்சொத்துவணிக முகவர் ஒவ்வொருவரும், விண்ணப்ப நடைமுறை இணையதளமாக்கப்படும் வரையில், மூன்று படிகளில் "G" படிவத்தில் அதிகாரஅமைப்புக்கு எழுத்து வழி விண்ணப்பம் ஒன்றைப் பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்துச் செய்ய வேண்டும். அதாவது:-

(a) தொழில்முனைவின் (enterprise) பெயர், பதிவு முகவரி, தொழில்முனைவு வகை (உரிமையாளர்நிலை, சங்கங்கள், கூட்டாண்மை நிறுமங்கள் முதலியன) உள்ளடங்கலாக அவரது தொழில்முனைவு பற்றிச் சுருக்கமான விவரங்கள்;

(b) துணைவிதிகள், சங்க அமைப்புவிதிகள் (Articles of Association) நேர்வுக்கேற்ப, சங்க அமைப்புக் குறிப்பேடு (Memorandum of Association) முதலானவை உள்ளடங்கலாக (உரிமையாளர் நிலை, சங்கங்கள், கூட்டாண்மை, நிறுமங்கள் முதலானவையாக) பதிவு செய்யப்பட்ட விவரங்கள்;

(c) அசையாச்சொத்துவணிகர் தனிப்பட்ட ஆள் ஒருவர் என்றால் அவரது பெயர், முகவரி, தொடர்பு விவரங்கள் மற்றும் நிழற்படம், பிற வகையினம் என்றால் அதன் கூட்டாளிகள், இயக்குநர்கள் முதலியவர்களின் பெயர், முகவரி, தொடர்பு விவரங்கள் மற்றும் நிழற்படம்;

(d) அசையாச்சொத்து வணிக முகவரின் பான் அட்டை ஆதார் அட்டையின் உறுதிச்சான்றிட்ட படியம்;

(e) அலுவல்தொழில் இடத்தின் முகவரிச் சான்றுதி பற்றி உறுதிச்சான்றிட்ட படியம்: மற்றும்

(f) ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய வேறு ஏதேனும் தகவல் மற்றும் ஆவணங்கள்.

(2) பதிவுக்காக விண்ணப்பம் செய்யும் நேரத்தில், விண்ணப்பதாரர் தனிப்பட்ட ஒருவர் எனும் நேர்வில் பத்தாயிரம் ரூபாய் அல்லது விண்ணப்பதாரர் தனிப்பட்ட ஒருவராக இல்லாமல் வேறு எவரொருவராகவும் இருக்கும் நேர்வில் ஐம்பதாயிரம் ரூபாய்த் தொகைக்கு, ஏதேனும் பட்டியல் வங்கியின் பேரில்

வரையப்பட்ட ஒரு வரைவோலை அல்லது வங்கியர் காசோலை வழியே அல்லது நேர்வுக்கேற்ப, இணையவழி வாயிலாக, அசையாச்சொத்துவணிக முகவர் பதிவுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

9. *அசையாச்சொத்துவணிக முகவருக்குப் பதிவு வழங்குதல்.*—(1) விதி 8-இன் கீழ் விண்ணப்பத்தைப் பெற்றதன் பேரில், அதிகாரஅமைப்பு 30 நாள் காலஅளவுக்குள் அசையாச்சொத்துவணிக முகவருக்குப் பதிவு வழங்கலாம் அல்லது நேர்வுக் கேற்ப, விண்ணப்பத்தை மறுக்கலாம்.

ஆனால், அதிகாரஅமைப்பானது அதனால் குறித்துரைக்கப்படலாகும். அத்தகைய காலஅளவுக்குள் விண்ணப்பத்திலுள்ள குறைபாடுகளைத் திருத்தியமைக்க விண்ணப்பத்தாரருக்கு ஒரு வாய்ப்பை வழங்கலாம்.

(2) ஒரு அசையாச்சொத்துவணிக முகவர் பதிவு செய்தலின் பேரில், அதிகாரஅமைப்பு "H" படிவத்தில் ஒரு பதிவு எண்ணுடன் ஒரு பதிவுச் சான்றிதழை அந்த அசையாச்சொத்து வணிக முகவருக்கு வழங்க வேண்டும்.

(3) விண்ணப்பத்தை மறுக்கும் நேர்வில், அதிகாரஅமைப்பு படிவம் 'I' இல் விண்ணப்பதாரருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.

(4) இந்த விதியின் கீழ் வழங்கிய பதிவு ஓர் ஐந்தாண்டுக் கால அளவுக்குச் செல்லுபடியாகும்.

10. *அசையாச்சொத்துவணிக முகவரின் பதிவைப் புதுப்பித்தல்.*— (1) சட்டத்தின் கீழ் அசையாச்சொத்துவணிக முகவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பதிவு முடிவுறுவதற்கு முன்பாக மூன்று மாதங்களுக்குக் குறையாமலிருக்கையில், விண்ணப்ப நடைமுறை இணையவழி செய்யப்படும் வரையில், அசையாச்சொத்துவணிக முகவரால் மூன்று படிகளில் "J" படிவத்தில் செய்துகொண்ட ஒரு விண்ணப்பத்தின் பேரில், புதுப்பிக்கப்படலாம்.

(2) பதிவு புதுப்பித்தலுக்கான விண்ணப்பமானது, அசையாச்சொத்துவணிக முகவர் தனிப்பட்ட ஒருவராக இருக்கும் நேர்வில் ஐந்தாயிரம் ரூபாய் அல்லது அசையாச்சொத்துவணிக முகவர் தனிப்பட்டவராக இல்லாமல் வேறு ஒருவர் எனும் நேர்வில் இருபத்தைந்தாயிரம் ரூபாய்த்தொகை, ஏதேனும் பட்டியல் வங்கியின் பேரில் வரையப்பட்ட கேட்பு வரைவோலை அல்லது வங்கியர் காசேலையுடன் அல்லது நேர்வுக்கேற்ப இணையவழிச் செலுத்தம் வாயிலாகச் சேர்ந்துபோதல் வேண்டும்.

(3) அசையாச்சொத்துவணிக முகவர் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் செய்யும் போது 8ஆம் விதியின் (1)-ஆம் உள்விதியின் (a) முதல் (f) வரையுள்ள பிரிவுக்கூறுகளில் எடுத்துரைத்த நாளிதுவரையான அனைத்து ஆவணங்களையும் பணிந்தனுப்ப வேண்டும்.

(4) பதிவு புதுப்பித்தல் எனும் நேர்வில், அதிகாரஅமைப்பு "K" படிவத்தில் அதைப்பற்றி அசையாச்சொத்து வணிக முகவருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் மற்றும் புதுப்பித்தலுக்கான விண்ணப்பத்தை மறுத்தல் எனும் நேர்வில், அதிகாரஅமைப்பு "I" படிவத்தில் அசையாச்சொத்துவணிக முகவருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்:

ஆனால் பதிவு புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் எதுவும், அந்தப் பொருட்பாட்டில் விண்ணப்பதாரர் கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, மறுக்கப்படுதல் கூடாது:

மேலும், அதிகாரஅமைப்பு அதனால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய காலஅளவுக்குள் விண்ணப்பத்திலுள்ள குறைபாடுகளைத் திருத்தியமைக்க அசையாச்சொத்துவணிக முகவருக்கு ஒரு வாய்ப்பை வழங்கலாம்.

(5) இந்த விதியின் கீழ் வழங்கப்பட்ட புதுப்பித்தலானது ஓர் ஐந்தாண்டுக் கால அளவுக்குச் செல்லுபடியாகும்.

11. *அசையாச்சொத்துவணிக முகவரின் பதிவைப் பின்னறவுச்செய்தல்.*— சட்டத்தின் 9-ஆம் பிரிவின் (7)-ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைத்த காரணங்களுக்காக, அதிகாரஅமைப்பு, அசையாச்சொத்துவணிக முகவருக்கு வழங்கிய பதிவை அல்லது நேர்வுக்கேற்ப அதன் புதுப்பித்தலைப் பின்னறவுசெய்யலாம், மற்றும் I படிவத்தில் அத்தகைய பின்னறவுப் பற்றி அசையாச் சொத்து வணிக முகவருக்குத் தெரிவிக்கலாம்.

12. *கணக்கேடுகள், ஆவணயேடுகள் மற்றும் ஆவணங்கள்.*— அசையாச்சொத்துவணிக முகவர், அவ்வப்போது திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் (43/1961) மற்றும் அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கியவாறு அவருடைய கணக்கேடுகள், ஆவணயேடுகள், ஆவணங்கள் ஆகியவற்றைப் பேணிவரலும் பாதுகாத்தலும் வேண்டும்.

13. *அசையாச்சொத்துவணிக முகவர் ஒருவரின் பிற அலுவற்பணிகள்.*— ஏதேனும் மனைக்கட்டு, அடுக்கு வீடு அல்லது நேர்வுக்கேற்ப கட்டிடத்தை முன்பதிவு மற்றும் விற்பனை செய்யும் நேரத்தில், ஒதுக்கீடுபெற்றவரும் அசையாச்சொத்துவணிகரும் அவரவர்களுக்குரிய உரிமைகளைச் செலுத்தவும், அவரவர்களுக்குரிய கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றவும் இயல்விக்கிற உதவியை அசையாச்சொத்துவணிக முகவர் வழங்க வேண்டும்.

இயல் - IV

## அதிகாரஅமைப்பின் அதிகாரமுறை இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டிய விவரங்கள்

**14.** *அதிகாரமுறை இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டிய விவரங்கள்.*—(1) அதிகாரஅமைப்பு, இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட செயல்திட்டம் ஒவ்வொன்றைப் பொறுத்தமட்டிலும், பின்வரும் பொருந்தத்தக்க விவரங்களை அதன் இணைய தளத்தில் கிடைக்கும்படி செய்ய வேண்டும். அதாவது :-

(a) பின்வருவன உள்ளடங்கலாக அசையாச்சொத்துவணிகரின் விவரங்கள், அதாவது :–

(i) அசையாச்சொத்துவணிகர் அல்லது குழுமத்தின் சுருக்கவிவர அறிக்கை (Group Profile),–

(A) பெயர், பதிவு முகவரி, தொழில்முனைவின் (enterprise) வகை (உரிமையாளர்நிலை, வரையறுத்த கடப்பாட்டுக் கூட்டாண்மை, சங்கம், கூட்டாண்மை, நிறுமம், தகுதிதிறமுள்ள அதிகாரஅமைப்பு) உள்ளடங்கலாக அவரது தொழில்முனைவு பற்றி ஒரு சுருக்க விவரம் மற்றும் அத்தகைய தொழில்முனைவின் பதிவு விவரங்கள்; மேலும், ஒரு புதிய கூட்டிணையமாக்கிய அல்லது பதிவுசெய்த நிறுவனம் (entity) எனும் நேர்வில் அதன் பெயர், பதிவு முகவரி, தொழில்முனைவின் வகை (உரிமையாளர்நிலை, சங்கங்கள், வரையறுத்த கடப்பாட்டுக் கூட்டாண்மை, கூட்டாண்மை, நிறுமங்கள், தகுதிறமுள்ள அதிகார அமைப்பு) உள்ளடங்கலாக தாய்நிறுவனம் (parent entity) பற்றிய சுருக்க விவரங்கள்;

(B) **அசையாசொத்துவணிகரின் பின்புலம் (back ground):–** அசையாச்சொத்து வணிகரின் கல்வித்தகுதி, பணி அனுபவம் மற்றும் ஒரு புதிய கூட்டிணையமாக்கிய அல்லது பதிவுசெய்த நிறுவனம் எனும் நேர்வில் அதன் தலைவர், இயக்குநர்கள், நேர்வுக்கேற்ப, கூட்டாளிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பெற்ற ஆட்களின் பணி அனுபவம் ; மற்றும்

(C) தனிப்பட்ட ஒருவர் எனும் நேர்வில், அந்த அசையாச்சொத்துவணிகரின் பெயர், முகவரி, தொடர்பு விவரங்கள் மற்றும் நிழற்படம் மற்றும் தலைவர், இயக்குநர்கள் நேர்வுக்கேற்ப கூட்டாளிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பெற்ற ஆட்களின் பெயர், முகவரி, தொடர்பு விவரங்கள் மற்றும் நிழற்படம்.

(ii) அசையாச்சொத்துவணிகரின் கடந்தகாலச் செயல்பாடு (Track Record),–

(A) புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில், அசையாச்சொத்துவணிக வளர்மானத்திலுள்ள அசையாச்சொத்து வணிகர் அல்லது நேர்வுக்கேற்ப தாய்நிறுவனத்தின் அனுபவம் குறித்த ஆண்டுகளின் எண்ணிக்கை;

(B) பிற மாநிலங்கள் அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகளில் அசையாச்சொத்துவணிக வளர்மானத்திலுள்ள அசையாச்சொத்து வணிகர் அல்லது நேர்வுக்கேற்ப தாய்நிறுவனத்தின் அனுபவம் குறித்த ஆண்டுகளின் எண்ணிக்கை;

(C) செயல்திட்டங்களின் தகுநிலை, அதை முடிப்பதில் காலதாமதம், நில வகை குறித்த விவரங்கள், நிலுவையிலுள்ள பணச்செலுத்தங்கள் ஆகியவை உள்ளடங்கலாக, கடந்த ஐந்தாண்டுகளில் நாளிதுவரை முடிக்கப்பட்ட செயல்திட்டங்கள் மற்றும் கட்டப்பட்ட பரப்பிடங்களின் எண்ணிக்கை;

(D) கூறப்பட்ட செயல்திட்டங்களின் தகுநிலை, அதை முடிப்பதில் காலதாமதம், நில வகை குறித்த விவரங்கள், நிலுவையிலுள்ள பணச்செலுத்தங்கள் ஆகியவை உள்ளடங்கலாக, கடந்த ஐந்தாண்டுகளில் முன்னேறிவரும் செயல்திட்டங்கள் மற்றும் கட்டப்படுவதற்காக் கருதுகைசெய்யப்பட்டுத் தொடங்கிய பரப்பிடம்; மற்றும்

(E) சட்டத்தின் 4-ஆம் பிரிவின் (2)-ஆம் உட்பிரிவின் (b) பிரிவுக்கூறின் கீழ் வகைசெய்தவாறு, கடந்த ஐந்தாண்டுகளில் முன்னேறிவரும் மற்றும் முடிக்கப்பட்ட செயல்திட்டங்களின் விவரங்களும் சுருக்க விவர அறிக்கையும்.

(iii) **வழக்கீடுகள் (litigations),–** அசையாச்சொத்துவணிகரால் வளர்மானம்செய்த அல்லது வளர்மானம்செய்யப்படுகிற அசையாச்சொத்து வணிகச் செயல்திட்டங்கள் தொடர்பாக, கடந்த ஐந்தாண்டுகளில் முடிவுறாநிலையிலுள்ள மற்றும் தொடர்புடைய நீதிமன்றத்தால் தீர்வுமுறை செய்யப்பட்டிராத வழக்கீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றின் விவரங்கள்.

(iv) *இணையதளம்*,–

(A) அசையாச்சொத்துவணிகர் அல்லது நேர்வுக்கேற்ப தாய்நிறுவனத்தின் இணைய இணைப்பு; மற்றும்

(B) செயல்திட்டத்தின் இணையதள இணைப்பு.

(b) பின்வருபவை உள்ளடங்கலாக அசையாச்சொத்து வாணிகச் செயல்திட்ட விவரங்கள், அவையாவன:-

(i) செயல்திட்டங்கள் வகையில் வழங்கப்பட்ட விளம்பரம் மற்றும் விவரக்கையேடு;

(ii) இணங்கிநடத்தல் மற்றும் பதிவு செய்தல்,

(A) சட்டத்தின் 4-ஆம் பிரிவின் (2)-ஆம் உட்பிரிவின் (C) பிரிவுக்கூறின் கீழ் வகைசெய்தவாறு, திட்டமிடும் அதிகாரஅமைப்பிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதலளிப்புகளின் உறுதிச்சான்றிட்ட படியம்.

(B) சட்டத்தின் 4-ஆம் பிரிவின் (2)-ஆம் உட்பிரிவின் (d) பிரிவுக்கூறின் கீழ் வகை செய்தவாறு திட்டமிடும் அதிகாரஅமைப்பால் ஒப்பளிக்கப்பட்ட செயல்திட்டத்தின் அல்லது அதனுடைய கட்டத்தின் (Phase) மற்றும் அதன் முழுமையான செயல்திட்டத்தின் ஒப்பளித்த திட்டம், அமைப்புவிவரத் திட்டம் மற்றும் தனிக்குறிப்பீடுகள்;

(C) சட்டத்தின் கீழ் அதிகாரஅமைப்பால் வழங்கப்பட்ட பதிவு விவரங்கள்.

(iii) அடுக்குவீடு, மனைக்கட்டு, திறந்தவெளிப்பரப்பிடம், ஊர்திக் கொட்டில் தொடர்பான விவரங்கள்,-

(A) தனியுரிமையுள்ள மேன்மாடப் பரப்பிடம் அல்லது தாழ்வாரப் பரப்பிடங்கள் மற்றும் அடுக்குவீட்டுடன் தனியுரிமையுள்ள திறந்த மொட்டைமாடிப் பரப்பிடங்கள் எவையேனும் இருப்பின் அவற்றுடன் சேர்த்துச் செயல்திட்டத்தில் விற்பனைக்கான அடுக்குவீடுகளின் எண்ணிக்கை, வகை, விரிப்புமூடிய பரப்பிடம் (Carpet area) ஆகியவற்றின் விவரங்கள், அல்லது செயல்திட்டத்தில் விற்பனைக்கான மனைக்கட்டுகளின் எண்ணிக்கை, வகை, பரப்பிடம் ஆகியவை அல்லது நேர்வுக்கேற்ப இரண்டும் பற்றிய விவரங்கள்;

(B) செயல்திட்டத்தில் விற்பனைக்கான ஊர்திக்கொட்டிலின் எண்ணிக்கை மற்றும் பரப்பிடங்கள் பற்றிய விவரங்கள்;

(C) அசையாச்சொத்துவணிகச் செயல்திட்டத்தில் கிடைக்கத்தக்க வாகனம் நிறுத்தும் திறந்தவெளி பரப்பிடங்கள் மற்றும் வாகனம் நிறுத்தும் மேல்மூடிய பரப்பிடங்கள்; மற்றும்

(D) செயல்திட்டத்தில் கிடைக்கத்தக்க திறந்தவெளிகள், பொதுப் பரப்பிடங்கள் மற்றும் பிற பொதுத் திறந்தவெளிகள்.

(iv) **பதிவு (பெற்ற) முகவர்கள்,–** செயல்திட்டத்தின் அசையாச்சொத்து வணிக முகவர்களின் பெயர்களும் முகவரிகளும்;

(v) **கலந்தாய்வர்கள் (consultants),–** ஒப்பந்தக்காரர்கள், கட்டிடக்கலைஞர் மற்றும் கட்டமைப்புப் பொறியாளர்களின் பெயர்களும் முகவரிகளும், மற்றும் அசையாச்சொத்துவணிகச் செயல்திட்டத்தின் வளர்மானத்துடன் தொடர்புடைய வேறு ஆட்களின் பின்வரும் விவரங்கள் :

(A) ஆளின் பெயரும் முகவரியும்,

(B) அசையாச்சொத்துவணிகர்களின் பெயர்கள்,

(C) நிறுவிய ஆண்டு; மற்றும்

(D) செய்து முடிக்கப்பட்ட முக்கிய செயல்திட்டங்களின் பெயர்களும் சுருக்க விவர அறிக்கையும் போன்ற விவரங்கள்.

(vi) **அமைவிடம் (location),–** செயல்திட்ட முடிவுப் புள்ளியின் நிலநேர்கோடு (Latitude) மற்றும் நிலவரைக்கோடு (Longitude) உள்ளடங்கலாக அதன் எல்லைகளுடன் சேர்த்துச் செயல்திட்டத்திற்காக நேர்ந்தளிக்கப்பட்ட நிலத்தின் தெளிவான எல்லைக்குறியுடன், செயல்திட்ட அமைவிட விவரங்கள்;

(vii) **வளர்மானத் திட்டம்,-**

(A) கருதப்பட்ட செயல்திட்டத்தில் நிறைவேற்றப்படவேண்டிய வளர்மான வேலைகளின் திட்டம் மற்றும் தீயணைப்புக் கருவிகள், குடிநீர் வசதிகள், அவசரக்கால வெளியேற்றப் பணிச்சேவைகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பயன்பாடு முதலியவை உள்ளடங்கலாக அதில் அளிக்கப்பட வேண்டி உத்தேசிக்கப்பட்ட வசதிகள்;

(B) வசதிநலங்கள் (amenities), - செயல்திட்டங்களுக்கு அணுகுகை (access), தெரு விளக்குவசதி உட்பட மின் வழங்கீடு, குடிநீர் வழங்கும் ஏற்பாடு, தீர்வுமுறை மற்றும் புயலையும் சாக்கடை நீரையும் கையாளுமுறைக்கான மனையிடம் உள்ளடங்கலாக, கருதப்பட்ட செயல்திட்டத்தின் முனைப்பான ஆக்கக்கூறுகளை விளக்கும் விரிவான குறிப்பு மற்றும் வேறு ஏதேனும் வசதி வாய்ப்புகள் (Facilities) மற்றும் வசதிநலங்கள் செயல்திட்டத்தில் வழங்கப்பட வேண்டிக் கருதுகைசெய்த பொது நலப்பணிகள்;

(C) செயல்திட்ட மேலாண்மை விளக்கப்படம் (gantt chart) அல்லது வழித்தொலைவுக்கல் (mile stone) விளக்கப்படம், செயல்திட்டக் கால அட்டவணை, - செயல்திட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய வளர்மான வேலைத் திட்டம், அதில் வகைசெய்யப்பட வேண்டிக் கருதப்படும் வசதிநலன்களின் விவரங்கள், மற்றும் அதை எய்துவதற்கான நேர வரம்பு (timeline); மற்றும்

(D) நீர், துப்புரவு, மின்சாரம் முதலியவை போன்ற குடிமை உள்கட்டமைப்புக்கான வகைமுறைகள் உள்ளடங்கிய செயல்திட்டத்தினைச் செய்துமுடிப்பதற்கான கட்டம்-வாரியான (stage- wise) கால அட்டவணை;

(E) அசையாச்சொத்துவணிகரின் நிதிநிலை விவரங்கள்,–

(i) அசையாச்சொத்து வணிகரின் பான் அட்டை மற்றும் ஆதார் அட்டையின் உறுதிச்சான்றிட்ட படியம்;

(ii) முன்சென்ற மூன்று நிதியாண்டுகளுக்கான அசையாச்சொத்துவணிகரின் தணிக்கை செய்த ஆதாய - இழப்புக் கணக்கு, இருப்புநிலை ஏடு, பணப்பொழிவு விவரவுரை, இயக்குநர்கள் அறிக்கை மற்றும் தணிக்கையாளர் அறிக்கை உள்ளடங்கலாக ஆண்டறிக்கை; மற்றும் ஆண்டறிக்கை கிடைக்கத்தக்கதாக இல்லை எனுமிடத்து, முன்சென்ற மூன்று நிதி ஆண்டுகளுக்கான அசையாச்சொத்து வணிகரின் தணிக்கை செய்த ஆதாய இழப்புக் கணக்கு, இருப்புநிலை ஏடு பணப்பொழிவு விவரவுரை மற்றும் தணிக்கையாளர் அறிக்கை; மேலும் புதிதாகக் கூட்டிணையமாக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் எனும் நேர்வில், நிறுவனத்திற்கான அத்தகைய தகவல் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

(d) ஒவ்வொரு காலாண்டும் முடிவுறுவதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அசையாச்சொத்து வணிகர் செயல்திட்டத்திற்கான இணையளத்தில் நாளிதுவரையிலான பின்வரும் பதிவேற்றங்களைச் செய்ய வேண்டும், அதாவது:–

(i) பதிவுசெய்யப்பட்ட அடுக்குவீடுகள் அல்லது மனைக்கட்டுகளின் எண்ணிக்கையும் வகையும் பற்றிய பட்டியல்;

(ii) பதிவுசெய்யப்பட்ட ஊர்திக்கொட்டிலின் எண்ணிக்கைப் பட்டியல்;

(iii) செயல்திட்டத்தின் தகுநிலை,–

(A) நிழற்படங்களுடன், கட்டிடம் ஒவ்வொன்றின் கட்டுமானத் தகுநிலை;

(B) நிழற்படங்களுடன், தளம் ஒவ்வொன்றின் கட்டுமானத் தகுநிலை; மற்றும்

(C) நிழற்படங்களுடன், உள்கட்டமைப்பும் பொதுவான பரப்பிடங்களும் பற்றிய கட்டுமானத் தகுநிலை;

(iv) ஒப்புதலளிப்புகளின் தகுநிலை,-

(A) பெற்ற ஒப்புதலளிப்புகள்;

(B) விண்ணப்பித்த ஒப்புதலளிப்புகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் பெறுகைத் தேதி;

(C) பயன்படுத்தவேண்டிய ஒப்புதலளிப்புகள் மற்றும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்ட தேதி; மற்றும்

(D) ஏதேனும் ஒப்புதலளித்த செயல்திட்டங்கள், அமைப்புவிவரத் திட்டங்கள், தனிகுறிப்பீடுகள், உரிமம், இசைவாணைச்சீட்டு அல்லது செயல்திட்ட ஒப்புதலளிப்பு பற்றிய வகையில் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பால் செய்யப்பட்ட மாற்றமைப்புகள், திருத்தம் அல்லது சீராய்வுகள் எவையேனுமிருப்பின் அவை;

(e) ஒப்புதலளிப்புகள், இசைவளிப்புகள், தடையின்மைகள், சட்ட ஆவணங்கள் பற்றிய விவரங்கள்:-

(i) ஒப்புதலளிப்புகள்,-

(A) செயல்திட்டத்திற்குப் பொருந்தத்தக்க சட்டங்களுக்கு இணங்கியவாறு திட்டமிடும் அதிகாரஅமைப்பிடமிருந்து பெறப்பட்ட, அடுக்குவீடுகள் பொறுத்தமட்டிலான உரிமம் அல்லது நிலப்பயன் இசைவளிப்பு மற்றும் கட்டிட ஒப்பளிப்புத் திட்டம் அல்லது மனைஅமைப்புகள் எனும் நேர்வில் அறுதி ஒப்புதலளிக்கப்பட்ட மனைஅமைப்பு விவரத்திட்டத்தின் உறுதிச்சான்றிட்ட படியம், மற்றும் செயல்திட்டம் பல கட்டங்களாக வளர்மானம்செய்யக் கருதப்படுகிறவிடத்து, அடுக்குவீடுகளைப் பொறுத்தமட்டிலான உரிமம் அல்லது நிலப்பயன் இசைவளிப்பு, மற்றும் கட்டிட ஒப்பளிப்புத் திட்டம், அல்லது மனை அமைப்புவிவரங்கள் எனும் நேர்வில் அத்தகைய கட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் அறுதி ஒப்பளிக்கப்பட்ட மனைஅமைப்பு விவரத்திட்டத்தின் உறுதிச்சான்றிட்ட படியம் ஒன்று;

(B) செயல்திட்ட நிலத்தின் வருவாய்க் கிராமத்தின் பெயர்கள், மறு அளவை எண்கள் அல்லது நகர அளவை எண்கள், ஆவணச் சொத்து விவரிப்பு ஒவ்வென்றின் பரப்பிடம் ஆகியவற்றுடன் சேர்த்துச் செயல்திட்ட மனையிடத்தின் அல்லது அமைவிடத்தைக் காட்டும் மனையிடப் படத்தின் உறுதிச்சான்றிட்ட படியம்.

(C) செயல்திட்டத்தின் அமைப்புவிவரத் திட்டம் அல்லது அதனுடைய கட்டத்தின் மனைஅமைப்பு விவரத்திட்டம், மற்றும் திட்டமிடும் அதிகாரஅமைப்பு ஒப்பளித்தவாறு முழுமையான செயல்திட்டத்தின் மனைஅமைப்புவிவரத் திட்டம், செயல்திட்டத்தின் பிற தனி குறிப்பீடுகள் ஆகியவற்றின் உறுதிச்சான்றிட்ட படியம்.

(D) பொழுதுபோக்குச் சிற்றகம் (club house), வசதிநலங்கள், பொதுப் பரப்பிடங்கள் உள்ளிட்டு, கோபுரம் மற்றும் தொகுப்பு ஒவ்வொன்றுக்கும் தளத் திட்டங்கள் (floor plans);

(E) தீயணைப்புப் பணித்துறையிடமிருந்து தடையின்மைச் சான்றிதழ், குடிநீர் மற்றும் கழிவுநீர்த் துறை முதலானவற்றிடமிருந்து இசைவளிப்பு முதலியவை உள்ளடங்கலாகப் பொருந்தத்தக்க சட்டத்தின் கீழ் வேண்டுறுத்தப்படலாகும் வேறு ஏதேனும் இசைவளிப்பு, ஒப்புதலளிப்பு அல்லது உரிமம்; மற்றும்

(F) கையுடைமைச் சான்றிதழின் பயன்பாடு உள்ளடங்கலாக அதனுடைய உறுதிச்சான்றிட்ட படியம்.

(ii) சட்ட ஆவணங்கள்,

(A) விண்ணப்பப் முறைபடிவம் (Proforma), ஒதுக்கீட்டுக் கடிதம் விற்பனை உடன்பாடு மாற்றளிப்பு ஒப்பாவணம் ஆகியவை உள்ளடங்கலாக விவரங்கள்;

(B) உரிமைமூலத் தொடர்ச்சிக்கான உறுதிச்சான்றளிப்புடன் அத்தகைய உரிமைமூலத்தின் சட்டச் செல்லுநிலை ஆவணங்களுடன் சேர்த்து, செயல்திட்ட வளர்மானம்செய்யக் கருதப்படுகிற நிலத்தினுடைய அசையாச்சொத்து வணிகரின் உரிமைமூலத்தை எடுத்துரைக்கும் சட்டமுறை உரிமைமூல ஒப்பாவணத்தின் உறுதிச்சான்றிட்ட படியம்;

(C) பத்தாண்டுகள் பட்டறிவு கொண்டிருக்கும் வழக்குரைஞர் ஒருவரிடமிருந்துபெற்ற நில உரிமைமூலம் தேடுதல் அறிக்கை;

(D) குறைந்தது பத்தாண்டுகள் பட்டறிவு கொண்டிருக்கும் வழக்குரைஞர் வாயிலாக அத்தகைய நிலத்தில் அல்லது அதன் மீதான உரிமைகள், உரிமைமூலம், நலன், கொடுபடவேண்டியவை, வழக்கீடு, எவரேனும் சார்பினரின் பெயர் ஆகியவற்றின் விவரங்கள் உள்ளடங்கலாகச் செயல்திட்ட வளர்மானம் கருதப்படுகிற நிலத்தின் மீதான வில்லங்கங்கள், அல்லது நேர்வுக்கேற்ப, வட்டாட்சியர் படிநிலைக்குக் குறையாத வருவாய் அதிகாரியிடமிருந்து வில்லங்கமின்மைச் சான்றிதழ் பற்றிய விவரங்கள்;

(E) அசையாச்சொத்துவணிகர் செயல்திட்ட வளர்மானம்செய்யக் கருதப்படுகிற நிலத்தின் சொந்தக்காரராக இல்லை எனுமிடத்து, அசையாச்சொத்து வணிகருக்கும் அத்தகைய சொந்தக்காரருக்கும் இடையே செய்துகொண்ட ஒருங்குழைப்பு உடன்பாடு, வளர்மான உடன்பாடு, கூட்டு வளர்மான உடன்பாடு அல்லது நேர்வுக்கேற்ப வேறு ஏதேனும் உடன்பாட்டின் படியம் ஒன்றுடனும், மற்றும் வளர்மானம்செய்யக் கருதப்பட்ட நிலத்தின் அத்தகைய சொந்தக்காரரின் உரிமைமூலத்தை எடுத்துரைக்கும் உரிமைமூலம், பிற ஆவணங்கள் ஆகியவற்றின் படியங்களுடனும் சேர்த்து, நிலச்சொந்தக்காரரின் இசைவளிப்புப் பற்றிய விவரங்கள்;

(F) நிலம் மற்றும் செயல்திட்டத்தின் மீது உருவாக்கப்பட்ட ஏதேனும் அடைமானம் அல்லது பொருட்பிணைப்பொறுப்பு (charge) ஏதேனும் இருப்பின், அது பற்றிய விவரங்கள்; மற்றும்

(G) கட்டுமான நிதிக்காக வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட ஒப்பளிப்புக் கடிதம் பற்றிய விவரங்கள்.

(f) **தொடர்பு விவரங்கள்,–** செயல்திட்டத்துடன் தொடர்புடைய அசையாச் சொத்து வணிகர், அதிகாரம்பெற்ற ஆள் மற்றும் பிற அலுவலர்களின் தொடர்பு முகவரி, தொடர்பு எண்கள், அடையாள மின்னஞ்சல் ஆகியவை; மற்றும்

(g) சட்டம் அல்லது அதன் கீழ் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் வாயிலாகக் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய வேறு ஆவணங்கள் அல்லது தகவல்.

(2) அதிகாரஅமைப்பு, தரவுதளம் (database) ஒன்றைப் பேணி வர வேண்டும் மற்றும் அதில் குறித்துரைத்த தகவல், பின்னறவுசெய்த அல்லது நேர்வுக்கேற்ப, தண்டத்திற்குள்ளாக்கப்பட்ட செயல்திட்டம் ஒவ்வொன்றைப் பொறுத்த மட்டிலும், அதன் இணைய தளத்தில் கிடைக்கத்தக்கதாகச் செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

(3) அதிகாரஅமைப்பு, அதனிடம் பதிவுசெய்துள்ள அல்லது பதிவு விண்ணப்பம் மறுத்தொதுக்கப்பட்ட அல்லது பின்னறவுச்செய்யப்பட்டுள்ள நிலச்சொத்துவணிக முகவரைப் பொறுத்தமட்டிலும், பின்வரும் தகவல் அதனுடைய இணையதளத்தில் கிடைக்கத்தக்கதாகச் செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டும், அதாவது:-

(a) அதிகாரஅமைப்பிடம் பதிவுசெய்துள்ள அசையாச்சொத்து வணிகர்களின் பொருட்டு:-

(i) அதிகாரஅமைப்பிடம் பதிவுசெய்துள்ள அசையாச்சொத்துவணிகரின் பதிவு எண் மற்றும் பதிவின் செல்லுநிலைக் காலஅளவு:

(ii) தொழில்முனைவின் பெயர், பதிவு முகவரி, தொழில்முனைவு வகை (உரிமையாளர்நிலை, சங்கங்கள், கூட்டாண்மை, நிறுமம் முதலியன) உள்ளடங்கலாக, அவரது தொழில்முனைவு பற்றிய சுருக்க விவரங்கள்;

(iii) துணைவிதிகள், சங்க அமைப்புவிதிகள், நேர்வுக்கேற்ப, சங்கச் செயல்நோக்கு ஆவணம் உள்ளடங்கலாக, (உரிமையாளர்நிலை, சங்கங்கள், கூட்டாண்மை, நிறுமங்கள் முதலியனவற்றின்) பதிவு விவரங்கள்;

(iv) அசையாச்சொத்துவணிகர் தனிப்பட்ட ஒருவர் என்றால் அவரது பெயர், முகவரி, தொடர்பு விவரங்கள், நிழற்படம், ஆகியவை, மற்றும் பிற இனங்கள் எனும் நேர்வில் அதன் கூட்டாளிகள், இயக்குநர்கள் முதலியோரின் பெயர், முகவரி, தொடர்பு விவரங்கள், நிழற்படம் ஆகியவை;

(v) அசையாச்சொத்துவணிக முகவரின் பான் அட்டை மற்றும் ஆதார் அட்டையின் உறுதிச்சான்றிட்ட படியம்; மற்றும்

(vi) அலுவல்தொழில் இடத்தின் முகவரிச் சான்றுறுதி மற்றும் அசையாச் சொத்துவணிகர் மற்றும் அதன் வேறு அலுவலாளர்களின் தொடர்பு முகவரி, தொடர்பு எண்கள் மற்றும் அடையாள மின்னஞ்சல்.

(b) அசையாச்சொத்துவணிகராகப் பதிவுசெய்வதற்காக எவருடைய விண்ணப்பம் அதிகாரஅமைப்பால் மறுத்தொதுக்கப்பட்டிருக்கிறதோ அந்த விண்ணப்பத்தாரர்கள் அல்லது அதிகாரஅமைப்பால் எவருடைய பதிவு பின்னறவு/இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த அசையாச்சொத்துவணிகர் எனும் நேர்வில்,–

(i) அதிகாரஅமைப்பிடம் பதிவுசெய்துள்ள அசையாச்சொத்து வணிகரின் பதிவு எண் மற்றும் பதிவின் செல்லுநிலைக் காலஅளவு;

(ii) தொழில்முனைவின் பெயர், பதிவு முகவரி, தொழில்முனைவு வகை (உரிமையாளர்நிலை, சங்கங்கள், கூட்டாண்மை, நிறுமங்கள் முதலியன) உள்ளடங்கலாக, அவரது தொழில்முனைவு மற்றும் சுருக்க விவரங்கள்;

(iii) ஓர் அசையாச்சொத்துவணிக முகவராகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் மறுத்தொதுக்கியது பற்றிச் சுருக்கமான காரணம், அல்லது அதிகாரஅமைப்பின் பின்னறவு / இடைநீக்கம் செய்ததற்கான சுருக்கமான காரணம் மற்றும் அத்தகைய பின்னறவு / இடைநீக்கம் எந்தக் காலஅளவு முதல் செயல் விளைவுகொள்கிறதோ அந்தக் காலஅளவு;

(iv) அசையாச்சொத்துவணிகர் தனிப்பட்ட ஒருவர் என்றால், அவரது பெயர் முகவரி, தொடர்பு விவரங்கள், நிழற்படம், ஆகியவை, மற்றும் வேறு ஆட்கள் எனும் நேர்வில், அதன் கூட்டாளிகள், இயக்குநர்கள் முதலியோரின் பெயர், முகவரி, தொடர்பு விவரங்கள், நிழற்படம், ஆகியவை.

(c) சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய வேறு ஆவணங்கள் அல்லது தகவல்கள்.

(4) அதிகாரஅமைப்பு, இந்த விதிகளுக்கு ஏற்ப அதன் இணைய தளத்தின் உள்ளடக்கத்தை எண்மான வடிவிலான (digitial form) சேமவைப்புப்படியம் (back - up) ஒன்றைப் பேணிவர வேண்டும் மற்றும் அத்தகைய சேமவைப்புப் படியமானது ஒவ்வொரு மாதத்தின் கடைசி நாளன்று நாளிதுவரை ஆக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

## இயல் - V

## அசையாச்சொத்துவணிகர் மற்றும் ஒதுக்கீடுபெறுபவர் செலுத்தத்தக்க வட்டி மற்றும் திருப்பிக்கொடுக்கும் நேர வரம்பீடுகள்

15. *அசையாச்சொத்துவணிகர் மற்றும் ஒதுக்கீடு பெறுபவரால் செலுத்தத்தக்க வட்டி*.— ஒதுக்கீடுபெறுபவருக்கு அசையாச்சொத்துவணிகரால் அல்லது நேர்வுக்கேற்ப அசையாச்சொத்துவணிகருக்கு ஒதுக்கீடுபெறுபவரால் செலுத்தத்தக்க வட்டி வீதம், இந்திய அரசு வங்கிக் கடன்கொடுப்பு வீத அடிப்படை நிதியங்களின் உச்சஅளவு விளிம்புநிலை விலையுடன் இரண்டு விழுக்காடு சேர்ந்திருக்கும்:

ஆனால், இந்திய அரசு வங்கி கடன் கொடுப்பு வீதத்தின் விளிம்பு விலை பயன்பாட்டில் இல்லை எனும் நேர்வில், பொதுமக்களுக்குக் கடன் வழங்குவதற்காக இந்திய அரசு வங்கி அவ்வப்போது நிலையுறுதி செய்யலாகும் அத்தகைய நிலைமட்டக் குறி (bench mark) யால் மாற்றீடு செய்யப்படும்.

16. *திருப்பிக்கொடுத்தலுக்கான நேர வரம்பீடு.*— சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதி பொறுத்து அசையாச்சொத்துவணிகரால் செலுத்தத்தக்க எவையேனும் வட்டி மற்றும் சரியீடு இருப்பின் அவற்றுடன் சேர்த்துப் பணத்தைத் திருப்பிக்கொடுத்தல் எதுவும், பொருந்தத்தக்க வட்டி அல்லது நேர்வுக்கேற்ப சரியீட்டுடன் சேர்த்து அத்தகைய திருப்பிக்கொடுத்தல் கொடுபட வேண்டியதாகிற தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குள் அசையாச் சொத்துவணிகரால் ஒதுக்கீடுபெறுபவருக்குச் செலுத்தத்தக்கதாகும்.

இயல் - VI

**அசையாச்சொத்துவணிக ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பு**

17. ***அதிகாரஅமைப்பின் தலைவரையும் உறுப்பினர்களையும் தெரிந்தெடுத்தல்.***— (1) அதிகாரஅமைப்பில் தலைவர் அல்லது எவரேனும் உறுப்பினரின் ஒழிவிடங்கள் (vacancies) இருக்கின்றன அல்லது எழுகின்றன அல்லது பெரும்பாலும் எழக்கூடும் எனும் நிலையிலும் எனும் போதும், உரிய அரசு, நிரப்பப்படவேண்டிய ஒழிவிடங்கள் பொறுத்தமட்டில் தெரிவுக் குழுவிற்கு ஒரு சுட்டுக்குறிப்பைச் செய்யலாம்.

(2) தெரிவுக் குழுவானது, அதிகாரஅமைப்பின் தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவரைத் தெரிவுசெய்யும் நோக்கத்திற்காக, அதிகாரஅமைப்பின் தலைவர் அல்லது ஓர் உறுப்பினராகப் பணியமர்த்தலின் பொருட்டுப் பெயர்களின் பட்டியல் ஒன்றைக் குறிப்பாகத் தெரிவிப்பது பொருத்தமானது எனத் தெரிவுக் குழு கருதுகிறவாறு, அத்தகைய ஆட்களைக் கொண்டிருக்கும் ஒரு தெரிவுக் குழுவைப் பணியமர்த்துவது உள்ளடங்கலாக தாம் பொருத்தமானது எனக் கருதுகிற அத்தகைய நடைமுறையைப் பின்பற்றலாம்.

(3) தெரிவுக் குழுவானது, ஒழிவிடம் ஒவ்வொன்றுக்கும் இரண்டு ஆட்களைத் தெரிவுசெய்யவும் அதை உரிய அரசுக்குப் பரிந்துரை செய்யவும் வேண்டும்.

(4) தெரிவுக் குழுவானது, (1)-ஆம் உள்விதியில் செய்த சுட்டுக்குறிப்புத் தேதியிலிருந்து அறுபது நாள் காலஅளவுக்குள் உரிய அரசுக்கு அதன் பரிந்துரையைச் செய்ய வேண்டும்

(5) உரிய அரசானது, தெரிவுக் குழுவின் பரிந்துரையைப் பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், தலைவர் மற்றும் நேர்வுக்கேற்ப உறுப்பினர்களின் ஒழிவிடத்திற்குத் தெரிவுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட இரண்டு ஆட்களில் ஒருவரைப் பணியமர்த்த வேண்டும்.

18. *அதிகாரஅமைப்புத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தத்தக்க வரையூதியம் (salary) மற்றும் படித்தொகைகள் மற்றும் பணி வரையீடுகளும் வரைகட்டுகளும் (terms and conditions of service).*— (1) அதிகாரஅமைப்பின் தலைவருக்கும் முழுநேர உறுப்பினர்களுக்கும் உரிய அரசு அவ்வப்போது நிலையுறுதி செய்யலாகும் அத்தகைய வரையூதியமும் படித்தொகைகளும் செலுத்தப்பட வேண்டும்; ஆனால், அவ்வாறு பணியமர்த்தப்பட்ட தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவர் மாநில அரசு அல்லது மைய அரசு அல்லது அதன் கீழ் ஏதேனும் அதிகாரஅமைப்பின் பணியில் இருக்கிறார் அல்லது இருந்தார் என்றால், அதிகாரஅமைப்பின் தலைவர் அல்லது நேர்வுக்கேற்ப ஓர் உறுப்பினராக அவர் பணியமர்த்தப்படும் முன்பு அத்தகைய ஆள் தாம் வகித்த பதவியில் கடைசியாகப் பெற்ற வரையூதியத்திற்குச் சமமான ஒரு வரையூதியம் மாதந்தோறும் அவருக்குச் செலுத்தப்பட வேண்டும்:

ஆனால், அதிகாரஅமைப்பின் தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவர் அதன்தலைவராக அல்லது நேர்வுக்கேற்ப, உறுப்பினராகப் பதவி ஏற்கும் தேதிக்கு முன்பு, மைய அரசு அல்லது மாநில அரசு அல்லது அதன் கீழ் ஏதேனும் அதிகாரஅமைப்பின் கீழ் செய்த முந்தைய பணி எதையும் பொறுத்த மட்டில் ஓய்வூதியம் எதையும் பெற்றிருந்தார் அல்லது பெற உரிமைப்பாடுள்ளவர் என்றால், அத்தலைவர் அல்லது நேர்வுக்கேற்ப ஓர் உறுப்பினர் நிலையில் அவரது பணி பொறுத்தமட்டில் அவரது வரையூதியமானது, மாற்றீடு செய்யப்பட்டிருக்கலாகும் ஓய்வூதியத்தின் பகுதி எதுவும் உள்ளடங்கலாக அந்த ஓய்வூதியம் மற்றும் அதன் மீதான அகவிலைக் குறைதீருதவிப் படித்தொகையளவுக்கு குறைக்கப்பட வேண்டும்.

(2) உரிய அரசுப் பணியாளராக இல்லாதிருக்கிற, மற்றும் உரிய அரசால் பணியமர்த்தப்பட்ட பகுதிநேர உறுப்பினர் ஒவ்வொருவரும், அதிகாரஅமைப்புக் கூட்டத்திற்கு அவர் வருகைதருகிற நாள் ஒவ்வொன்றுக்கும், உரிய அரசால் அவ்வப்போது தீர்மானிக்கப்படலாகும் ஓர் அமர்வுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். மேலும் அவர் வீடு மற்றும் ஊர்தி தொடர்பான படித்தொகை எதற்கும் உரிமைப்பாடு உடையவர் ஆகார்.

(3) தலைவரும் உறுப்பினர்களும் பணிமுடித்த ஒவ்வோர் ஆண்டுக்கும் முப்பது நாள் ஈட்டிய விடுப்புக்கு உரிமைப்பாடுடையவர் ஆவர்.

19. *அதிகாரஅமைப்பின் தலைவருடைய ஆட்சிய அதிகாரங்கள்.*— (1) அதிகாரஅமைப்புத் தலைவர் பின்வருவன பொறுத்து ஆட்சிய அதிகாரங்களைச் செலுத்துவார் :-

(a) பணியாளர்குழாம் எண்ணிக்கை, உழைப்பூதியங்கள் (wages) மற்றும் வரையூதியக் கட்டமைப்புகள், பதவியூதியங்கள் (emolumnets) மிகைஆதாயத் தொகைகள் (perquisites), பணியாளர் கொள்கைகள் தொடர்பான பொருட்பாடுகள்;

(b) பணியிடங்களின் உருவாக்கமும் ஒழிப்பும் தொடர்பான பொருட்பாடுகள்;

(c) பணியிடங்கள் அனைத்திற்கும் பணியமர்த்தங்கள், பதவி உயர்வுகள் பணி உறுதிப்பாடு ஆகியவை தொடர்பான பொருட்பாடுகள்;

(d) அதிகாரஅமைப்பின் எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியரின் பணிவிலகலை ஏற்றல்;

(e) ஒப்பளித்த பணியிடங்களில் பொறுப்பேற்று நடத்துதல் (officiating);

(f) இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியேயும் அதிகாரஅமைப்பு உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியரால் மேற்கொள்ளப்படும் சுற்றுலாக்களுக்கு அதிகாரமளித்தல்;

(g) மருத்துவக் கோருரிமைகளுக்குச் செலவுஈடுசெய்வது தொடர்பான பொருட்பாடுகள்;

(h) விடுப்பு வழங்கலும், மறுத்தலும் தொடர்பான பொருட்பாடுகள்;

(i) அதிகாரமுறைப் பயன்பாட்டுக்காக ஊர்திகளை வாடகைக்கு எடுப்பதற்கான இசைவளிப்பு;

(j) இந்தியாவிலும் அயல் நாட்டிலும் கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்வதற்கான அமர்த்தங்கள்;

(k) பயிற்சி வகுப்புகள் நடத்த விருந்தினர்களை வரவழைப்பதற்கான இசைவளிப்பு;

(l) பணியாளர் குழாமின் நல்வாழ்வு தொடர்பான செலவுகள்;

(m) பயனற்றதாதல் மற்றும் இயல்பான தேய்மானம் காரணமாக சிக்கனமான பழுதுபார்த்தலுக்கு அப்பாலானவை எனக் கருதப்படுகிற மூலதனச் சொத்துடைமைகளைத் துடைத்தழித்தல் அல்லது கீறித்தள்ளுபடிசெய்தலுக்கான ஒப்பளிப்பு வழங்குதல்; மற்றும்

(n) அதிகாரஅமைப்பின் உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை தொடங்குதல் தொடர்பான பொருட்பாடுகள்.

(2) அதிகாரஅமைப்பின் தலைவர், அதிகாரஅமைப்பின் திறமையான அலுவலாற்றுகைக்கும், சட்டம் மற்றும் அதன் கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளின் செயலுறுத்தத்திற்கும் வேண்டுறுத்தப்படலாகும் அத்தகைய வேறு அதிகாரங்களையும் செலுத்துவார்.

20. *அதிகாரஅமைப்பின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்குச் செலுத்தத்தக்க வரையூதியமும் படித்தொகைகளும் மற்றும் அவர்களுடைய பிற பணிவரையீடுகளும் வரைக்கட்டுகளும்.*— (1) ஊதியம், படித்தொகைகள், விடுப்பு, பணியில் சேரும் காலம், சேரும் கால ஊதியம், ஓய்வுபெறும் வயது, ஆகியன பற்றிய பணி வரைக்கட்டுகள் மற்றும் பிற பணி வரைக்கட்டுகள் ஆகிய பொருட்பாடுகளில், அதிகாரஅமைப்பின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பணிவரைக்கட்டுகள், உரிய அரசின் மற்றும் நேரிணையான படியேற்றமுறை ஊதியம்பெறுகிற அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் பொருந்தத்தக்க அவ்வப்போது செயலாற்றலில் இருந்துவரும் அத்தகைய விதிகளுக்கும் ஒழுங்குமுறைவிதிகளுக்கும் இணங்கியவாறு ஒழுங்கமைவு செய்யப்பட வேண்டும்.

(2) உரிய அரசு, மேற்படி அலுவலர்கள் அல்லது ஊழியர்களின் வகை அல்லது வகையினத்தையும் பொறுத்தமட்டில் இத்தகைய விதிகளில் ஏதொன்றின் வகைமுறைகளைத் தளர்த்துவதற்கு அதிகாரம் கொண்டிருக்கும்.

21. *அதிகாரஅமைப்பு அலுவல்பணியாற்றுதல்.*—(1) அதிகாரஅமைப்பின் அலுவலகம், உரிய அரசால் அறிவிக்கை வாயிலாகத் தீர்மானிக்கப்படலாகும் அத்தகைய இடத்தில் அமைக்கப்பட வேண்டும்.

(2) அதிகாரஅமைப்பின் வேலைநாட்களும் வேலைநேரங்களும், உரிய அரசின் ஏனைய அலுவலகங்களின் வழக்கமான அதே வேலை நாட்களாகவும் வேலை நேரங்களாகவும் அமையும்.

(3) அதிகாரஅமைப்பின் அதிகாரமுறைப் பொது முத்திரையும் இலச்சினையும் உரிய அரசு குறித்துரைக்கலாகும் அத்தகையனவாக இருக்கும்.

(4) அதிகாரஅமைப்பின் ஒவ்வொரு பதிவு, இசைவளிப்பு, அறிவிப்பு, ஆணை மற்றும் கட்டளைகள், இதற்கென அதிகாரஅமைப்பால் அதிகாரமளிக்கப் படுகிறவாறு அதிகாரஅமைப்புக்கான செயலரின் முத்திரையையும் கையொப்பத்தையும் கொண்டிருக்கும்.

(5) அதிகாரஅமைப்பு வழக்கமாக அதன் அமர்வுகளை அதன் தலைமையகத்திலும், பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாகத் தலைவர் குறித்துரைக்கலாகும் அத்தகைய வேறு இடங்களிலும் கொண்டிருக்கும்.

22. *அதிகாரஅமைப்பின் கூடுதல் அதிகாரங்கள்.*— (1) சட்டத்தின் பிரிவு 35 இன் (2)-ஆம் உட்பிரிவுவின் (iv)-ஆம் பிரிவுக்கூறில் குறித்துரைத்த அதிகாரங்களுக்கும் கூடுதலாக, அதிகாரஅமைப்பு பின்வரும் கூடுதல் அதிகாரங்களையும் செலுத்தும் :-

(a) அது பொருத்தம் மற்றும் தேவை எனக் கருதலாகிறவாறு அத்தகைய தகவான காலத்திற்குள் அத்தகைய தகவல் அல்லது விளக்கத்தை எழுத்துவழியாக முன்னளிக்குமாறு அல்லது அத்தகைய ஆவணங்களை முன்னிலைப்படுத்துமாறு அசையாச்சொத்துவணிகர், ஒதுக்கீடுபெறுபவர் அல்லது அசையாச்சொத்துவணிக முகவரை வேண்டுறுத்தல்; மற்றும்

(b) 1872-ஆம் ஆண்டு இந்தியச் சான்றுச் சட்டத்தின் (1/1872) 123 மற்றும் 124-ஆம் பிரிவுகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு அலுவலகம் எதிலிருந்தும் பொது ஆவணயேடு அல்லது ஆவணம் அல்லது அத்தகைய ஆவணயேட்டின் அல்லது ஆவணத்தின் படியம் எதையும், வேண்டுறுத்திப் பெறுதல்.

(2) அதிகாரஅமைப்பு அதன் முன்புள்ள தணிக்கை அல்லது ஏதேனும் விசாரணை அல்லது நடவடிக்கைகளைத் தரமுடன் நடத்துவதற்கான உதவி செய்வதற்காக அது பொருத்தம் மற்றும் தேவை எனக் கருதுகிறவாறு பொருளாதாரம், வர்த்தகம், கணக்கியல், அசையாச்சொத்து வணிகம், போட்டி, கட்டுமானம், கட்டிடக்கலை அல்லது பொறியியல் துறைகளிலிருந்து அல்லது வேறு ஏதேனும் துறையிலிருந்து அத்தகைய வல்லுநர்கள் அல்லது கலந்தாயுநர்களைக் கோரிப்பெறலாம்.

(3) அசையாச் சொத்து வணிகர்,—

(a) பிரிவு 4-இன் உட்பிரிவு (2) பிரிவுக்கூறு (1) இன் (D) உட்பிரிவுக்கூறின் கீழ்ப் பேணிவரப்படும் கணக்கிலிருந்து மேற்சொன்ன தொகைகளை எடுக்கவில்லை; அல்லது

(b) தண்டம், வட்டி அல்லது சரியீடு செலுத்தத்தக்க அசையாச்சொத்து வணிகத்திற்காக அல்லது வேறு ஏதேனும் அசையாச்சொத்து வணிகச் செயல்திட்டத்திற்காக ஒதுக்கீடுபெறுபவர்களால் அத்தகைய அசையாச் சொத்துவணிகருக்குச் செலுத்திய தொகைகள் எவற்றையும் பயன்படுத்தவில்லை; அல்லது

(c) தொடர்புற்ற அசையாச்சொத்துவணிகம் அல்லது வேறு ஏதேனும் அசையாச்சொத்துவணிகத்தின் ஒதுக்கீடுபெறுபவர்களிடமிருந்து தண்டம், வட்டி அல்லது சரியீடாகச் செலுத்திய தொகைகளை வசூலிக்கவில்லை என்பதை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு, அதிகார அமைப்பு, அசையாச்சொத்துவணிகர் செலுத்திய அல்லது அவரால் செலுத்தத்தக்க தண்டம், வட்டி அல்லது சரியீடாகச் சுமத்திய தொகையின் செலுத்தம் பற்றி, ஒதுக்கீடுபெறுபவர்களின் நலன் கருதி விசாரணை செய்யலாம்.

**23. *வட்டி, தண்டம் அல்லது சரியீட்டை வசூலித்தல்.***—வட்டி, தண்டம் அல்லது சரியீடு போன்று கொடுபடவேண்டிய தொகைகளின் வசூலிப்பு, 1970 ஆம் ஆண்டு புதுச்சேரி வருவாய் வசூலிப்புச் சட்டத்தின் கீழ் வகைசெய்யப்பட்ட முறையில் நில வருவாய் நிலுவையைப் போன்றே வசூலிக்கப்பட வேண்டும்.

இயல் - VII

**அசையாச்சொத்துவணிக மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்**

24. *மேல்முறையீடு தாக்கல்செய்யும் படிவம் மற்றும் செலுத்தத்தக்க கட்டணங்கள்.*— (1) சட்டத்தின் 44-ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவின் கீழ் தாக்கல்செய்யப்படும் மேல்முறையீடு ஒவ்வொன்றும், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்குச் சார்பாக ஒரு பட்டியல் வங்கி மீது வரைந்த ஒரு கேட்பு வரைவோலை அல்லது வங்கியர் காசோலை வடிவிலும் மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் இருக்கை அமைந்துள்ள ஊரிலிருக்கும் அந்த வங்கிக் கிளையில் செலுத்தத்தக்கதுமான ஐயாயிரம் ரூபாய்க்கான கட்டணத்துடன், அல்லது நேர்வுக்கேற்ப, இணைய வழிச் செலுத்தத்துடன் சேர்ந்துபோதல் வேண்டும்.

(2) மேல்முறையீடு ஒவ்வொன்றும் “L” படிவத்தில் மூன்று படியங்களுடன், விண்ணப்ப நடைமுறை இணைய வழி செய்யப்படும் வரையில், பின்வரும் ஆவணங்களுடன் தாக்கல் செய்யப்பட வேண்டும், அதாவது:-

(a) எந்த ஆணைக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்படுகிறதோ அந்த ஆணையின் உண்மைப் படியம்;

(b) மேல்முறையீட்டாளர் சார்ந்திருக்கிற மற்றும் மேல்முறையீட்டில் சுட்டுகை செய்யப்படுகிற ஆவணங்களின் படியம்; மற்றும்

(c) ஆவணங்களின் பொருளடக்க அட்டவணை.

(3) மேல்முறையீடு ஒவ்வொன்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் பதிவகத்திலுள்ள பணிப்பலகணியில் (counter) அல்லது பதிவஞ்சல் வாயிலாக அல்லது பொருந்துகிறவாறு இணையவழி அமைப்புமுறை வாயிலாகத் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

(4) உள்விதி (3) இன் கீழ் அஞ்சல் வழி அனுப்பிய ஒரு மேல்முறையீடு எனும் நேர்வில், அது மேல்முறையீட்டுத்தீர்ப்பாய அலுவலகத்தில் பெறப்படுகிற நாளன்று அந்த மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் அது முன்னிடப்பட்டிருக்கிறது எனக் கொள்ளப்படும்.

(5) பிரிவு 56-இன் கீழ் வகைசெய்தவாறு மேல்முறையீட்டுத் சார்பினர் ஒருவர், அதிகாரமளிக்கப்பெற்ற ஆள் ஒருவரால் சார்பாண்மை செய்யப்படுகிற-விடத்து, அத்தகையவராகச் செயலாற்ற அதிகாரமளிப்பின் படியம் ஒன்றும், அத்தகைய அதிகாரமளிப்புப்பெற்ற ஆளின் எழுத்துவழி இசைவும், இந்த இரண்டின் மூலஆவணமாக, மேல்முறையீட்டில் அல்லது நேர்வுக்கேற்ப மேல்முறையீட்டு அறிவிப்புக்கான எதிருரையில் பிற்சேர்க்கையாக இணைக்கப்பட வேண்டும்.

(6) கேட்புநல்கும் தேதியன்று அல்லது கேட்புநல்கல் ஒத்திவைக்கப்படும் வேறு ஏதேனும் தேதியன்று, சார்பினர்கள் அல்லது நேர்வுக்கேற்ப அவர்களுடைய முகவர்கள் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்பு முன்னிலையாவது கட்டாயக் கடமையாகும்:

ஆனால், மேல்முறையீட்டாளர் அல்லது நேர்வுக்கேற்ப அவரது அதிகாரம் பெற்ற ஆள் அத்தகைய நாட்களில் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன் முன்னிலையாகத் தவறுகிறவிடத்து, மேல்முறையீட்டுத்தீர்ப்பாயம் அதன் விருப்புரிமைப்படி, அவ்வாறு முன்னிலையாகத் தவறியதற்காக அம்மேல்முறையீட்டைத் தள்ளறவு (dismiss) செய்யலாம் அல்லது தகுதிப்பேற்றின் பேரில் முடிபு செய்யலாம், மற்றும் கேட்பு நல்கும் தேதியன்று எதிர்ச்சார்பினர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஆள் அவ்வாறு முன்னிலையாகத் தவறுகிறவிடத்து, மேல்முறையீட்டுக் தீர்ப்பாயம் எதிரவரின்றியே (exparte) மேல்முறையீட்டை முடிபு செய்யலாம்.

(7) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் அன்றாட அலுவற்பணியாற்றும் நடைமுறையானது இச்சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகளில் வகை செய்யப்பட்டிராத விடத்து, அது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தால் குறித்துரைக்கிறவாறு அமையும்.

25. *மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல்.*—(1) அதிகாரஅமைப்பில் ஓர் உறுப்பினரின் ஒழிவிடங்கள் இருக்கின்றன அல்லது எழுகின்றன அல்லது பெரும்பாலும் எழக்கூடும் எனும் நிலையிலும் எனும் போதும், உரிய அரசு, நிரப்பப்பட வேண்டிய ஒழிவிடங்கள் பொறுத்தமட்டில் தெரிவுக்குழுவிற்கு ஒரு சுட்டுக்குறிப்பைச் செய்யலாம்.

(2) தெரிவுக்குழுவானது, அதிகாரஅமைப்பின் உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்யும் நோக்கத்திற்காக, அதிகாரஅமைப்பின் உறுப்பினராகப் பணியமர்த்தலின் பொருட்டுப் பெயர்களின் பட்டியல் ஒன்றைக் குறிப்பாகத் தெரிவிப்பது பொருத்தமானது எனத் தெரிவுக்குழு கருதுகிறவாறான, அத்தகைய ஆட்களைக் கொண்டிருக்கும் ஒரு தெரிவுக் குழுவைப் பணியமர்த்துவது உள்ளடங்கலாக, தாம் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய நடைமுறையைப் பின்பற்றலாம்.

(3) தெரிவுக்குழுவானது ஒழிவிடம் ஒவ்வொன்றுக்கும் இரண்டு ஆட்களைத் தெரிவு செய்யவும், அதை உரிய அரசுக்குப் பரிந்துரை செய்யவும் வேண்டும்.

(4) தெரிவுக்குழுவானது (1)ஆம் உள்விதியின்கீழ் செய்யப்பட்ட சுட்டுக்குறிப்புத் தேதியிலிருந்து அறுபது நாள் காலஅளவுக்குள் உரிய அரசுக்கு அதன் பரிந்துரையைச் செய்ய வேண்டும்.

(5) உரிய அரசு தெரிவுக்குழுவின் பரிந்துரையைப் பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் உறுப்பினரின் ஒழிவிடத்திற்காகத் தெரிவுக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட இரண்டு ஆட்களில் ஒருவரைப் பணியமர்த்த வேண்டும்.

**26.** *அதிகாரஅமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தத்தக்க வரையூதியமும் படித்தொகைகளும் மற்றும் பிற வரையீடுகளும் வரைக்கட்டுகளும்*.—(1) அதிகாரஅமைப்பின் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தத்தக்க வரையூதியங்களும் படித்தொகைகளும் பின்வருமாறு அமையும்:-

(a) ஓர் உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக, அத்தகையவரால் கடைசியாகப் பெறப்பட்ட வரையூதியத்திற்குச் சமமான வரையூதியம், மாதந்தோறும் தலைவருக்குச் செலுத்தப்பட வேண்டும்;

(b) இந்திய அரசின் கூடுதல் செயலாளரின் உச்சஅளவு ஊதியப் படியேற்ற முறையில் பெறப்பட்ட வரையூதியத்திற்குச் சமமான வரையூதியம் மாதந்தோறும் உறுப்பினருக்குச் செலுத்தப்பட வேண்டும்.

ஆனால், ஓர் உறுப்பினராக ஆவதற்கு முன்னர், இந்திய அரசின் கூடுதல் செயலாளரை விட அரசின் முதுநிலைப் பதவி வகித்திருந்தவிடத்து, அவர் எந்தப் பதவியில் ஓய்வுபெற்றாரோ அந்தப் பதவிக்கு நேரிணையான வரையூதியம் மாதந்தோறும் அவருக்குச் செலுத்தப்பட வேண்டும்.

(2) தலைவரும் பிற உறுப்பினர் ஒவ்வொருவரும், முடிவடைந்த பணி ஆண்டு ஒவ்வொன்றுக்கும் முப்பது நாட்கள் ஈட்டிய விடுப்புக்கு உரிமைப்பாடுள்ளவர் ஆவர்.

(3) தலைவர், பிற உறுப்பினர் ஆகியோரின் பிற படித்தொகைகளும் பணிவரைக்கட்டுகளும் உரிய அரசால் அவ்வப்போது தீர்மானிக்கப்படலாகும் அத்தகையனவாக இருக்கும்.

27. *அதிகாரஅமைப்பு அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத் தலைவர் அல்லது உறுப்பினருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணை.*— (1) அதிகாரஅமைப்பின் தலைவர் அல்லது உறுப்பினர் எனும் நேர்வில், சட்டத்தின் 26ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவு (d) பிரிவுக்கூறு அல்லது (e) பிரிவுக்கூறில் குறித்துரைத்தவாறான அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத் தலைவர் அல்லது உறுப்பினர் எனும் நேர்வில் சட்டத்தின் 49ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைத்தவாறான சூழ்நிலையில் ஏதொரு நிகழ்வின் பேரில், உரிய அரசு, இதைப் பொறுத்து முறையீடு ஒன்றைப் பெற்றதன் மேல் அல்லது நேர்வுக்கேற்ப, தானாகவே முன்வந்து மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத் தலைவர் அல்லது உறுப்பினருக்கு எதிரான அத்தகைய குற்றச்சாட்டுகளைப் பொறுத்து முதனிலைக் கூர்ந்தாய்வு (prelimniary scrutiny) ஒன்றைச் செய்யலாம்.

(2) முதனிலைக் கூர்ந்தாய்வின் பேரில், உரிய அரசு, சாட்டுரையைப் புலனாய்வு செய்வது தேவை எனக் கருதுகிறது என்றால், முறையீடு எதுவுமிருப்பின், கிடைக்கத்தக்கதாகும் ஆதாரப் பொருளுடன் சேர்த்து அதை, உயர்நீதிமன்றத்தின் பணியிலிருக்கிற அல்லது ஓய்வுபெற்ற நீதிபதியைப் பணியமர்த்துவதற்காக, உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி முன்பு வைக்க வேண்டும்.

(3) உரிய அரசு (2)ஆம் உள்விதியின் கீழ் பணியமர்த்தப்பட்ட நீதிபதிக்கு,

(a) அதிகாரஅமைப்பு அல்லது நேர்வுக்கேற்ப மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத் தலைவர் அல்லது உறுப்பினருக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் விவரவுரை; மற்றும்

(b) விசாரணைக்குத் தொடர்புற்ற பொருட்பாடான ஆவணங்கள், ஆகியவற்றின் படியங்களை.

மேலனுப்பி வைக்க வேண்டும்.

(4) அதிகாரஅமைப்பு அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத் தலைவர் அல்லது நேர்வுக்கேற்ப உறுப்பினர், குற்றச்சாட்டுகளைப் பொறுத்தமட்டில், அந்த பொருட்பாடு பற்றி விசாரணை நடத்தும் நீதிபதியால் இதற்கெனக் குறித்துரைக்கப்படலாகும் காலத்திற்குள் குற்றச்சாட்டுகளைப் பொறுத்துக் கேட்கப்படுவதற்குத் தகவானதொரு வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும்.

(5) ஏதேனும் உடற்குறை அல்லது மனநலமின்மை காரணமாக அதிகார அமைப்பு அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தலைவர் அல்லது உறுப்பினர் திறமையாகத் தமது பதவிக் கடமைகளை ஆற்ற இயலாதவராக இருக்கிறார் எனச்

சாட்டுரைக்கப்பட்டு, அச்சாட்டுரை மறுக்கப்படுகிறது எனுமிடத்து, நீதிபதி, அந்த அதிகாரஅமைப்பு அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர் அல்லது உறுப்பினரின் மருத்துவ ஆய்வுக்காக ஏற்பாடு செய்யலாம்.

(6) புலனாய்வின் முடிவுக்குப் பின்பு, நீதிபதி, தாம் பொருத்தமென நினைக்கிறவாறு, குற்றச்சாட்டுப் பிரிவுகள் ஒவ்வொன்றின் பேரிலும் தனித்தனியாக அவருடைய காண்புரைகளையும் (findings) அவற்றிற்கான காரணங்களையும், முழு வழக்கு மீதான அத்தகைய நுண்ணோக்குரையுடன் எடுத்துரைக்கும் அவரது அறிக்கையை உரிய அரசுக்கு முன் வைக்க வேண்டும்.

(7) உள்விதி (6)இன் கீழ் அறிக்கையைப் பெற்ற பின்பு, உரிய அரசு, உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்ந்த பின்பு அதிகாரஅமைப்பு அல்லது நேர்வுக்கேற்ப மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத் தலைவர் அல்லது உறுப்பினரை அகற்றுவது அல்லது அகற்றாமலிருப்பது பற்றி முடிவு செய்யும்.

28. *மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்குச் செலுத்தத்தக்க வரையூதியமும் படித்தொகைகளும், மற்றும் அவர்களுடைய பிற பணி வரையீடுகளும் வரைக்கட்டுகளும்.*—(1) ஊதியம், படித்தொகைகள், விடுப்பு, பணியில் சேரும் காலம், சேரும் கால ஊதியம், ஓய்வுபெறும் வயது, பிற பணி வரைக்கட்டுகள் ஆகிய பொருட்பாடுகளில், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பணி வரைக்கட்டுகள் ஆகியவை, உரிய அரசின் மற்றும் நேரிணையான படியேற்றமுறை ஊதியம் பெறுகிற அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் பொருந்தத்தக்கவாறு, அவ்வப்போது செயலாற்றலில் இருந்துவரும் அத்தகைய விதிகளுக்கும் ஒழுங்குமுறைவிதிகளுக்கும் இணங்கியவாறு ஒழுங்கமைவு செய்யப்பட வேண்டும்.

(2) உரிய அரசு, அத்தகைய அலுவலர்கள் அல்லது ஊழியர்களின் வகை அல்லது வகையினத்தைப் பொறுத்தமட்டில், இத்தகைய விதிகளில் ஏதொன்றின் வகைமுறைகளைத் தளர்த்துவதற்கு அதிகாரம் கொண்டிருக்கும்.

29. *மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பின் கூடுதல் அதிகாரங்கள்.*— (1) சட்டத்தின் 53-ஆம் பிரிவின் (4)-ஆம் உட்பிரிவு (g) பிரிவுக்கூறில் குறித்துரைத்த அதிகாரங்களுக்கும் கூடுதலாக, மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் பின்வரும் கூடுதல் அதிகாரங்களையும் செலுத்தும்:–

(a) அது பொருத்தம் அல்லது தேவை எனக் கருதலாகிறவாறு, அத்தகைய தகவான காலத்திற்குள், அத்தகைய தகவல் அல்லது விளக்கத்தை எழுத்து வழி முன்னளிக்குமாறு அல்லது அத்தகைய

ஆவணங்களை முன்னிலைப்படுத்துமாறு அசையாச்சொத்துவணிகர், ஒதுக்கீடுபெறுபவர் அல்லது அசையாச்சொத்துவணிக முகவரை வேண்டுறுத்துதல்; மற்றும்

(b) அலுவலகம் எதிலிருந்தும் பொது ஆவணயேடு அல்லது ஆவணம் அல்லது அத்தகைய ஆவணயேட்டின் அல்லது ஆவணத்தின் படியும் எதையும், 1872ஆம் ஆண்டு இந்தியச் சான்றுச் சட்டத்தின் (1/1872) 123 மற்றும் 124ஆம் பிரிவின் வகை முறைகளுக்கு உட்பட்டு, வேண்டுறுத்திப்பெறுதல்.

(2) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் அதன் முன்புள்ள ஏதேனும் விசாரணை அல்லது நடவடிக்கைகளை நடத்துவதில் உதவிசெய்வதற்காக, அது தேவை எனக் கருதுகிறவாறு பொருளாதாரம், வர்த்தகம், கணக்கியல், அசையாச்சொத்து வணிகம், போட்டி, கட்டுமானம், கட்டிடக்கலை, பொறியியல் துறைகளிலிருந்து அல்லது வேறு ஏதேனும் பிரிவிலிருந்து அத்தகைய வல்லுநர்கள் அல்லது கலந்தாய்வர்களைக் கோரிப்பெறலாம்.

30. *மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத் தலைவரின் ஆட்சிய அதிகாரங்கள் (Administrative Powers)*.—(1) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத் தலைவர் பின்வருவன பொறுத்து ஆட்சிய அதிகாரங்களைச் செலுத்துவார்:–

(a) பணியாளர்குழாம் எண்ணிக்கை, உழைப்பூதியங்கள் மற்றும் வரையூதியங்கள், கட்டமைப்புகள், பதவியூதியங்கள், மிகைஆதாயத் தொகை, பணியாளர் கொள்கைகள் தொடர்பான பொருட்பாடுகள்;

(b) பணியிடங்கள் உருவாக்கமும் ஒழிப்பும் தொடர்பான பொருட்பாடுகள்;

(c) பணியிடங்கள் அனைத்திற்கும் பணியமர்த்தங்கள், பதவி உயர்வுகள், பணி உறுதிப்பாடு ஆகியவை தொடர்பான பொருட்பாடுகள்;

(d) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியரின் பணிவிலகலை ஏற்றல்;

(e) ஒப்பளித்த பணியிடங்களில் பொறுப்பேற்று நடத்துதல்;

(f) இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியேயும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியரால் மேற்கொள்ளப்படும் சுற்றுலாக்களுக்கு அதிகாரமளித்தல்;

(g) மருத்துவக் கோரிக்கைக்குச் செலவுஈடுசெய்வது தொடர்பான பொருட்பாடுகள்;

(h) விடுப்பு வழங்கலும் மறுத்தலும் தொடர்பான பொருட்பாடுகள்;

(i) அதிகாரமுறைப் பயன்பாட்டுக்காக ஊர்திகளை வாடகைக்கு எடுப்பது தொடர்பான இசைவளிப்பு;

(j) இந்தியாவிலும் வெளிநாட்டிலும் கருத்தரங்குகள், மாநாடுகள், படிப்புப் பயிற்சிகளில் கலந்து கொள்வதற்கான அமர்த்தங்கள்;

(k) பயிற்சி அளிப்பதற்காக வல்லுநர்களை அழைப்பதற்கான அனுமதி;

(l) பணியாளர் குழாமின் நல்வாழ்வு தொடர்பான செலவுகள்;

(m) பயனற்றதாதல் மற்றும் இயல்பான தேய்மானம் காரணமாகச் சிக்கனமாகப் பழுதுபார்த்தலுக்கு அப்பாலானவை எனக் கருதப்படுகிற மூலதனச் சொத்துடைமைகளைத் துடைத்தழித்தல் அல்லது கீறித் தள்ளுபடி செய்தல், ஒப்பளிப்பு வழங்குதல்; மற்றும்

(n) எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியருக்கு எதிராக ஒழுங்குநடவடிக்கை தொடங்குதல் தொடர்பான பொருட்பாடுகள்.

(2) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் திறமையான அலுவலாற்றுகைக்கு மற்றும் சட்டம், அதன் கீழ் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின் செயலுறுத்தத்திற்கு வேண்டுறுத்தப்படலாகும் அத்தகைய வேறு அதிகாரங்களையும் செலுத்துவார்.

31. ***மேல்முறைட்டுத் தீர்ப்பாயம் அலுவற்பணியாற்றுதல்***.—(1) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் அலுவலகம், உரிய அரசால் தீர்மானிக்கப்படலாகும் அத்தகைய இடத்தில் அமைக்கப்பட வேண்டும்.

(2) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் வேலைநாட்களும், வேலை நேரங்களும், உரிய அரசின் ஏனைய அலுவலகங்களின் அது போன்ற வேலை நாட்களாகவும் வேலைநேரங்களாகவும் அமையும்.

(3) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் அதிகாரமுறைப் பொது முத்திரையும் இலச்சினையும், உரிய அரசு குறித்துரைக்கலாகும் அத்தகையனவாக இருக்கும்.

(4) மேல்முறைட்டுத் தீர்ப்பாயத்தின் ஒவ்வொரு பதிவு, இசைவளிப்பு, அறிவிப்பு, ஆணை மற்றும் கட்டளைகள், இதற்கென மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தால் அதிகாரமளிக்கப்படுகிறவாறு மேல்முறைட்டுத் தீர்ப்பாயத்தின் முத்திரையையும் செயலாளரின் கையொப்பத்தையும் கொண்டிருக்கும்.

(5) மேல்முறைட்டுத் தீர்ப்பாயம், வழக்கமாக அதன் அமர்வுகளை அதன் தலைமையகத்திலும், பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாகத் தலைவர் குறித்துரைக்கலாகும் அத்தகைய வேறு இடங்களிலும் கொண்டிருக்கும்.

## இயல்-VIII

## குற்றச்செயல்களும் தண்டங்களும் (Offences and Penalties)

32. *குற்றச்செயலின் இணைக்கத்தீர்வுக்கான வரையீடுகளும் வரைக்கட்டுகளும் மற்றும் செலுத்தத்தக்க பணத்தண்டம்.*—(1) நீதிமன்றம், சட்டத்தின் கீழ் சிறைத்தண்டனையுடன் தண்டிக்கத்தக்க குற்றச்செயல் எதையும் இணைக்கத்தீர்வுசெய்யும் நோக்கத்திற்காக, அடியிலுள்ள அட்டவணையில் குறித்துரைத்தவாறு ஒரு தொகையை ஏற்றுக் கொள்ளும்:

| குற்றச் செயல் | குற்றச்செயலின் இணைக்கத் தீர்வுக்காகச் செலுத்த வேண்டிய தொகை |
|---|---|
| (1) | (2) |
| 59 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் சிறைத்தண்டனையுடன் தண்டிக்கத்தக்கது. | அசையாச்சொத்துவணிகச் செயல் திட்டத்தின் மதிப்பீட்டு விலையில் பத்து விழுக்காடு நிலையுறுதிசெய்தல். |
| 64 ஆம் பிரிவின் கீழ் சிறைத் தண்டனையுடன் தண்டிக்கத்தக்கது | அசையாச்சொத்து வணிகச் செயல் திட்ட மதிப்பீட்டு விலையில் பத்து விழுக்காடு நிலையுறுதிசெய்தல். |
| 66 ஆம் பிரிவின் கீழ் சிறைத் தண்டனையுடன் தண்டிக்கத்தக்கது | விற்கவோ வாங்கவோ வசதிவாய்ப்புள்ள அசையாச்சொத்து வணிகச் செயல்திட்டத்தின் மனைக்கட்டு, அடுக்குவீடு அல்லது நேர்வுக்கேற்ப கட்டிடத்தின் மதிப்பீட்டு விலையில் பத்து விழுக்காடு நிலையுறுதிசெய்தல். |
| 68 ஆம் பிரிவின் கீழ் சிறைத் தண்டனையுடன் தண்டிக்கத்தக்கது | மனைக்கட்டு, அடுக்குவீடு அல்லது நேர்வுக்கேற்ப கட்டிடத்தின் மதிப்பீட்டு விலையில் பத்து விழுக்காடு நிலையுறுதிசெய்தல். |

(2) அசையாச்சொத்துவணிகர், ஒதுக்கீடுபெறுபவர்கள் அல்லது நேர்வுக்கேற்ப அசையாச்சொத்துவணிக முகவர், குற்றச்செயலின் இணக்கத் தீர்வுத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு மேற்பட்டிராமல் நீதிமன்றத்தால் குறித்துரைத்த காலஅளவுக்குள், அதிகாரஅமைப்பு அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாய ஆணைகளுக்கு இணங்கி நடக்க வேண்டும்.

(3) உள்விதி (1)-க்கு இணங்கியவாறு தொகை செலுத்தியதன் பேரிலும், (2)-ஆம் உள்விதியில் வகைசெய்தவாறு அதிகாரஅமைப்பு அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாய ஆணைக்கு இணங்கிநடந்ததன் பேரிலும், அந்தக் குற்றச்செயல் தொடர்பாகக் காவலிலுள்ள ஆள் எவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்; மற்றும் அந்தக் குற்றச்செயலுக்காக நீதிமன்றம் எதிலும் அத்தகைய ஆளுக்கு எதிராக நடவடிக்கைகள் எவற்றையும் தொடுத்தலோ அல்லது தொடர்தலோ கூடாது.

(4) உள்விதி (1)-இன் கீழ் ஒரு குற்றச்செயலின் இணைக்கத் தீர்வுக்காகத் தொகை எதுவும் நீதிமன்றத்தால் ஏற்கப்படுதல், 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச்சட்டத்தின் (2/1974) 300-ஆம் பிரிவின் பொருளுக்குள் ஒரு விடுதலைத் தீர்ப்பாகக் கொள்ளப்பட வேண்டும்.

இயல்-IX

## அதிகாரஅமைப்பு மற்றும் நீதித்தீர்ப்பு அலுவலரிடம் முறையீட்டைத் தாக்கல்செய்தல்

33. *அதிகாரஅமைப்பிடம் முறையீட்டைத் தாக்கல்செய்தலும் அதிகார அமைப்பால் விசாரிக்கப்படுதலும்.*—(1) குறையுற்ற ஆள் எவரும், விண்ணப்ப நடைமுறை இணையதளத்தில் செய்யப்படும் வரையில், மூன்று படியங்களில் 'M' படிவத்தில், நீதித்தீர்ப்பு அலுவலரால் நீதித்தீர்ப்பளிக்க வேண்டி வகை செய்யப்பட்டவை தவிர, சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளின் கீழ் மீறுகை எதற்குமான ஒரு முறையீட்டை, அதிகார அமைப்புச் சார்பாகப் பட்டியல் வங்கி மீது வரையப்பட்டு அந்த அதிகார அமைப்பின் இருக்கை அமைந்துள்ள ஊரிலிருக்கும் அந்த வங்கிக் கிளையால் செலுத்தத்தக்க ஒரு கேட்பு வரைவோலை அல்லது வங்கியர் காசோலை வடிவில் ஓராயிரம் ரூபாய்க்கான கட்டணத்துடன் சேர்த்து அல்லது இணைய வழிச் செலுத்தம் மூலம் அதிகாரஅமைப்பிடம் தாக்கல் செய்யலாம்.

(2) உள்விதி (1)-இன் கீழ் குறித்துரைத்தவாறு முறையீடு எதையும் தீர்முடிவு செய்யும் நோக்கங்களுக்காக, அதிகாரஅமைப்பு பின்வரும் முறையில் விசாரிப்பதற்கான சுருக்குவகை நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். அதாவது:-

(a) ஒரு முறையீட்டைப் பெற்றதன் மேல், அதிகாரஅமைப்பு, சாட்டுரைத்த மீறுகை விவரங்களுடன் தொடர்புற்ற ஆவணங்களையும் சேர்த்து ஓர் அறிவிப்பை எதிர்வழக்காளிக்குப் (respondent) பிறப்பிக்க வேண்டும்;

(b) உள்விதி (2)-இன் (a) பிரிவுக்கூறின் கீழ் அத்தகைய அறிவிப்பு எவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்படுகிறதோ அந்த எதிர்வழக்காளி, அந்த அறிவிப்பில் குறித்துரைத்த காலஅளவுக்குள் அந்த முறையீட்டைப் பொறுத்து அவரது மறுமொழியைத் தாக்கல் செய்யலாம்;

(c) அந்த அறிவிப்பு, மேற்கொண்டும் கேட்புநல்கலுக்கான ஒரு தேதியையும் நேரத்தையும் குறித்துரைக்கலாம் மற்றும் கேட்புநல்கலுக்கான தேதியும் நேரமும் முறையிடுநருக்கும் (complainant) தெரிவிக்கப்படலாம்;

(d) அவ்வாறு நிலையுறுதிசெய்த தேதியன்று அதிகாரஅமைப்பு, சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுகளில் ஏதொன்றின் தொடர்பாகச் செய்யப்பட்டிருப்பதாகச் சாட்டுரைத்த மீறுகை பற்றி எதிர்வழக்காளிக்கு விளக்க வேண்டும் மற்றும் எதிர் வழக்காளி,–

(i) குற்றத்தை ஒப்புக்கொள்கிறார் என்றால், அதிகாரஅமைப்பு அந்த வாதுரை (plea)யைப் பதிவு செய்ய வேண்டும் மற்றும் சட்டம் அல்லது அதன் கீழ் செய்த விதிகள் அல்லது ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கியவாறு பொருத்தமென நினைக்கிறவாறு தண்டம் சுமத்துதல் உள்ளடங்கலாக அத்தகைய ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும்;

(ii) குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை மற்றும் முறையீட்டை எதிர்க்கிறார் என்றால், அதிகாரஅமைப்பு மேற்படி எதிர்வழக்காளியிடம் ஒரு விளக்கத்தைக் கோரிப்பெற வேண்டும்;

(e) முறையிடுநரால் செய்யப்பட்ட பணிந்துரைகளின் (Submission) அடிப்படையில் அதிகாரஅமைப்பு மனநிறைவு கொள்கிற நேர்வில், மேற்கொண்டும் விசாரணை இன்றி, அது முறையீட்டைத் தள்ளறவு செய்யலாம்;

(f) முறையீட்டில் கேட்புநல்கல் மேற்கொண்டும் தேவைப்படுகிறது என்று செய்யப்பட்ட பணிந்துரைகளின் அடிப்படையில் அதிகாரஅமைப்பு மனநிறைவு கொள்கிற நேர்வில், அதனால் நிலையுறுதிசெய்த ஒரு தேதியன்றும் நேரத்திலும் ஆவணங்களை அல்லது வேறு சான்றுகளை முன்னிலையாக்க அது ஆணையிடலாம்;

(g) அதிகாரஅமைப்பு, ஆவணங்கள் மற்றும் சான்றுகள் அடிப்படையில் முறையீடு ஒன்றை விசாரணை செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்;

(h) அதிகாரஅமைப்பு, நீதித்தீர்ப்பு அலுவலரின் கருத்துரையில், விசாரணை நுவல்பொருளுக்குப் (subject matter) பயன்படலாகும் அல்லது தொடர்புறும் சான்றுளிக்க, அல்லது ஆவணங்கள் எவற்றையும் முன்னிலையாக்க, வழக்கின் உண்மை விவரங்கள் எவற்றையும் முன்னிலையாக்க, வழக்கின் உண்மைவிவரங்களையும் சூழ்நிலைகளையும் நன்கறிந்த ஆள் எவருக்கும் அழைப்பாணை விடுக்கவும் அவருடைய வருகையைக் கட்டாயப்படுத்தவும் அதிகாரம் கொண்டிருக்கும் மற்றும் அத்தகைய சான்றை எடுத்துக் கொள்கையில், அதிகாரஅமைப்பு 1872-ஆம் ஆண்டு இந்தியச் சான்றுச் சட்டத்தின் (1/1872) வகைமுறைகளைக் கடைப்பிடிக்கக் கட்டுறுத்தப்பட்டது ஆகாது.

(i) அவ்வாறு நிலையுறுதிசெய்த தேதியன்று, அதிகாரஅமைப்பின் முன்பு முன்னிலையாக்கிய சான்று, பிற ஆவணயேடுகள், பணிந்துரைகள் ஆகியவற்றை அது கருதியதன் பேரில்,-

(i) சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளை மீறியிருக்கிறார் என மனநிறைவுகொள்கிறது என்றால், சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கியவாறும் அது பொருத்தமென நினைக்கிறவாறும் தண்டம் விதிப்பது உள்ளடங்கலாக அத்தகைய ஆணைகளை அது பிறப்பிக்கும்; அல்லது

(ii) சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளை மீறவில்லை என மனநிறைவுகொள்கிறது என்றால், அதிகாரஅமைப்பு, எழுத்துருவில் பதியப்பட வேண்டிய காரணங்களுடன் அந்த முறையீட்டை எழுத்துருவிலான ஆணை வாயிலாகத் தள்ளறவு செய்யலாம்.

(j) ஆள் எவரும், அதிகாரஅமைப்பு முன்பு, வேண்டுறுத்தியபடி முன்னிலையாக அல்லது தாமே வருகைதரத் தவறுகிறார் அல்லது அதைப் புறக்கணிக்கிறார் அல்லது மறுக்கிறார் என்றால், அதிகாரஅமைப்பு, விசாரணை நடத்துவதற்கான காரணங்களைப் பதிவுசெய்த பின்பு அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் இல்லாத நிலையில் அவ்வாறு விசாரணைசெய்ய அதிகாரம் கொண்டிருக்கும்.

(3) சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் வகைசெய்யப்பட்டிராத, அதிகாரஅமைப்பின் அன்றாட அலுவலாற்றும் நடைமுறை, அதிகாரஅமைப்பினால் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் மூலம் குறித்துரைத்தவாறு அமையும்.

(4) பிரிவு 56-இன் கீழ் வகைசெய்தவாறு, முறையீட்டுச் சார்பினர் ஒருவர் அதிகாரம்பெற்ற ஆள் ஒருவரால் சார்பாண்மைச் செய்யப்படுகிறவிடத்து, அத்தகையவராகச் செயலாற்றும் அதிகாரமளிப்பு மற்றும் அத்தகைய அதிகாரம் பெற்ற ஆளால் அதற்கான எழுத்துரு இசைவு, இந்த இரண்டின் மூலமுதல் படியம் ஒன்று, முறையீட்டுக்கு அல்லது நேர்வுக்கேற்ப, முறையீட்டு அறிவிப்புக்கான மறுமொழிக்கு இணைப்பாகச் சேர்க்கப்பட வேண்டும்.

34. *நீதித்தீர்ப்பு அலுவலரிடம் ஒரு முறையீட்டைத் தாக்கல் செய்தலும் நீதித் தீர்ப்பு அலுவலரால் விசாரிக்கப்படுதலும்.*—(1) குறையுற்ற ஆள் எவரும், விண்ணப்ப நடைமுறை இணைய தளத்தில் செய்யப்படும் வரையில், மூன்று படியங்களில் 'N' படிவத்தில் 12, 14, 18, 19 ஆகிய பிரிவுகளின் கீழ் வகைசெய்தவாறு வட்டிக்கும் சரியீட்டுக்குமான ஒரு முறையீட்டை அதிகார அமைப்புச் சார்பாகப் பட்டியல் வங்கி மீது வரையப்பட்டு அந்த அதிகார அமைப்பின் இருக்கை அமைந்துள்ள ஊரிலிருக்கும் அந்த வங்கிக் கிளையில் செலுத்தத்தக்க ஒரு கேட்பு வரைவோலை அல்லது வங்கியர் காசோலை வடிவில் ஓராயிரம் ரூபாய் கட்டணத்துடன் சேர்த்து, அல்லது இணையவழிச் செலுத்தம் மூலம், நீதித்தீர்ப்பு அலுவலரிடம் தாக்கல் செய்யலாம்.

(2) நீதித்தீர்ப்பு அலுவர், வட்டியையும் சரியீட்டையும் நீதிமுறையில் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காகப் பின்வரும் முறையில் விசாரிப்பதற்காகச் சுருக்குவகை நடைமுறையைப் பின்பற்ற வேண்டும், அதாவது:-

(a) ஒருமுறையீட்டைப் பெற்றதன் பேரில் நீதித்தீர்ப்பு அலுவலர் சாட்டுரைத்த மீறுகை விவரங்களுடன் தொடர்புற்ற ஆவணங்களையும் சேர்த்து, ஓர் அறிவிப்பை எதிர்வழக்காளிக்குப் பிறப்பிக்க வேண்டும்;

(b) உள்விதி (2) இன் (a) பிரிவுக்கூறின்கீழ் அத்தகைய அறிவிப்பு எவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்படுகிறதோ அந்த எதிர்வழக்காளி அந்த அறிவிப்பில் குறித்துரைத்தவாறு அந்தக் காலஅளவுக்குள் முறையீட்டைப் பொறுத்து அவரது மறுமொழியைத் தாக்கல் செய்யலாம்.

(c) அந்த அறிவிப்பு மேற்கொண்டும் கேட்புநல்கலுக்கான ஒரு தேதியையும் நேரத்தையும் குறித்துரைக்கலாம் மற்றும் கேட்புநல்கலுக்கான தேதியும் நேரமும் முறையிடுநருக்கும் தெரிவிக்கப்படலாம்;

(d) அவ்வாறு நிலையுறுதிசெய்த தேதியன்று நீதித்தீர்ப்பு அலுவலர், சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளில் ஏதொன்றையும் பொறுத்துச் செய்யப்பட்டிருந்ததாகச் சாட்டுரைத்த மீறுகை பற்றி எதிர்வழக்காளிக்கு விளக்க வேண்டும்; மற்றும் எதிர்வழக்காளி,–

(i) குற்றத்தை ஒப்புக்கொள்கிறார் என்றால், நீதித்தீர்ப்பு அலுவலர் அந்த வாதுரையைப் பதிவுசெய்தல் வேண்டும். மற்றும் இச்சட்டம் அல்லது அதன் கீழ்ச்செய்யப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளுக்கு இணங்கியவாறு, 15ஆம் விதியில் குறித்துரைத்தவாறான வட்டியையும் அவர் பொருத்தமெனக் கருதலாகிற அத்தகைய சரியீட்டையும் வழங்குவதற்கான ஆணையை எழுத்துருவில் பிறப்பித்தல் வேண்டும்;

(ii) குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை மற்றும் முறையீட்டை எதிர்க்கிறார் என்றால், நீதித்தீர்ப்பு அலுவலர் மேற்படி எதிர்வழக்காளியிடம் ஒரு விளக்கத்தைக் கோரிப்பெற வேண்டும்.

(e) முறையிடுநரால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அடிப்படையில் நீதித்தீர்ப்பு அலுவலர் மனநிறைவு கொள்கிற நேர்வில், நீதித்தீர்ப்பு அலுவலர் மேற்கொண்டும் விசாரணை இன்றி அந்த முறையீட்டைத் தள்ளறவு செய்யலாம்;

(f) முறையீட்டில் கேட்புநல்கல் மேற்கொண்டும் தேவைப்படுகிறது என்று செய்யப்பட்ட பணிந்துரைகள் அடிப்படையில் நீதித்தீர்ப்பு அலுவலர் மனநிறைவு கொள்கிற நேர்வில், அவரால் நிலையுறுதிசெய்த ஒரு தேதியன்றும் நேரத்திலும் ஆவணங்களை அல்லது வேறு சான்றுகளை முன்னிலையாக்க அவர் ஆணையிடலாம்;

(g) நீதித்தீர்ப்பு அலுவலர் ஆவணங்கள் மற்றும் சான்றுகள் அடிப்படையில் முறையீடு ஒன்றை விசாரணை செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருப்பார்;

(h) நீதித்தீர்ப்பு அலுவலரின் கருத்துரையில், விசாரணை நுவல் பொருளுக்குப் பயன்படலாகும் அல்லது தொடர்புறும் சான்றுஅளிக்க அல்லது ஆவணங்கள் எவற்றையும் முன்னிலையாக்க, வழக்கின் உண்மை விவரங்களையும் சூழ்நிலைகளையும் நன்கறிந்த ஆள் எவருக்கும் நீதித்தீர்ப்பு அலுவலர் அழைப்பாணை விடுக்கவும் அவருடைய வருகையைக் கட்டாயப்படுத்தவும் அதிகாரம் கொண்டிருப்பார். மற்றும் அத்தகைய சான்றை எடுத்துக் கொள்கையில், நீதித்தீர்ப்பு அலுவலர் 1872-ஆம் ஆண்டு இந்தியச் சான்றுச் சட்டத்தின் (1/1872) வகைமுறைகளைக் கடைப்பிடிக்கக் கட்டுறுத்தப்பட்டவர் ஆகார்.

(i) அவ்வாறு நிலையுறுதிசெய்த தேதியன்று நீதித்தீர்ப்பு அலுவலர் முன்பு முன்னிலையாக்கிய சான்று, பிற ஆவணயேடுகள், பணிந்துரைகள் ஆகியவற்றை அவர் கருதியதன் பேரில்,—

(i) எதிர்வழக்காளி வட்டி அல்லது நேர்வுக்கேற்ப சரியீடு செலுத்தக் கடப்பாடு கொண்டிருக்கிறார் என மனநிறைவு கொள்கிறார் என்றால், இச்சட்டம் அல்லது அதன்கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கியவாறு 15-ஆம் பிரிவில் குறித்துரைத்தவாறு வட்டியையும், நேர்வுக்கேற்ப அவர் பொருத்தமெனக் கருதலாகிற அத்தகைய சரியீட்டையும் வழங்குவதற்கான ஆணையை எழுத்துருவிலான ஆணை மூலம் ஆணையிடலாம்; அல்லது

(ii) வட்டி அல்லது நேர்வுக்கேற்ப சரியீடு எதற்கும் கடப்பாடு கொண்டிருக்கவில்லை என்றால், நீதித்தீர்ப்பு அலுவலர் எழுத்துருவில் பதியப்பட வேண்டிய காரணங்களுடன் அந்த முறையீட்டை எழுத்துருவிலான ஆணை வாயிலாகத் தள்ளறவு செய்யலாம்.

(j) ஆள் எவரும், நீதித்தீர்ப்பு அலுவலர் முன்பு, வேண்டுறுத்தியபடி முன்னிலையாக அல்லது தாமே வருகைத்தரக் தவறுகிறார் அல்லது அதைப் புறக்கணிக்கிறார் அல்லது மறுக்கிறார் என்றால், நீதித்தீர்ப்பு அலுவலர், விசாரணை நடத்துவதற்கான காரணங்களையும் பதிவு செய்த பின்பு, அத்தகைய ஆட்கள் இல்லாதநிலையில், அவ்வாறு விசாரணைசெய்ய அதிகாரம் கொண்டிருப்பார்.

(3) சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகளில் வகைசெய்யப்பட்டிராத, நீதித்தீர்ப்பு அலுவலரின் அன்றாட நடைமுறை, அதிகாரஅமைப்பால் செய்யப்பட்ட ஒழுங்குமுறைவிதிகள் மூலம் குறித்துரைத்தவாறு அமையும்.

(4) பிரிவு 56-இன் கீழ் வகைசெய்தவாறு, முறையீட்டுச் சார்பினர் ஒருவர், அதிகாரம்பெற்ற ஆளால் சார்பான்மைச் செய்யப்படுகிறவிடத்து, அத்தகைய-வராகச் செயலாற்றும் அதிகாரமளிப்பு மற்றும் அத்தகைய அதிகாரம்பெற்ற ஆளால் அதற்கான எழுத்துரு இசைவு, இந்த இரண்டின் மூலமுதல் படியும் ஒன்று, முறையீட்டுக்கு அல்லது நேர்வுக்கேற்ப, முறையீட்டு அறிவிப்புக்கான மறுமொழிக்குப் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட வேண்டும்.

இயல் - X

## வரவு-செலவுத் திட்டம் மற்றும் அறிக்கை
## (Budget and Report)

35. *வரவு செலவுத்திட்டம், கணக்குகள் மற்றும் தணிக்கை*.—(1) நிதியாண்டு ஒவ்வொன்றின் இறுதியிலும், அதிகாரஅமைப்பு, ஒரு வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிக்கவும், கணக்குகளையும் தொடர்புற்ற பிற ஆவணங்களையும் முறையாகப் பேணிவரவும், 'O' படிவத்தில் ஆண்டுக் கணக்கு விவரவுரை ஒன்றைத் தயாரிக்கவும் வேண்டும்.

(2) அதிகாரஅமைப்பு, (1)ஆம் உள்விதியின் கீழ்த் தயாரிக்கப்பட்ட கணக்குகளையும் தொடர்புற்ற பிற ஆவணங்களையும் குறைந்தது ஒரு ஐந்தாண்டுக் காலஅளவுக்குப் பேணிக்காக்க வேண்டும்.

(3) உள்விதி (1)இன் கீழான கணக்குகள் மற்றும் தொடர்புற்ற பிற ஆவணங்கள் தலைவர், உறுப்பினர்கள், செயலாளர், நிதி மற்றும் கணக்குப் பொறுப்பு அலுவலர் ஆகியோரால் கையொப்பமிடப்பட வேண்டும்.

(4) அதிகாரஅமைப்பின் கணக்குகளும் தணிக்கை அறிக்கையும் இயன்ற அளவு விரைவாக, சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படும் பொருட்டு உரிய அரசுக்குப் பணிந்தனுப்பப்பட வேண்டும்.

36. *ஆண்டு அறிக்கை*.—(1) அதிகாரஅமைப்பு 'P' படிவத்தில் அதன் ஆண்டு அறிக்கையைத் தயாரிக்க வேண்டும்.

(2) அதிகாரஅமைப்பு, உரிய அரசுக்கு அறிக்கைசெய்வதற்கு அதிகார அமைப்பால் பொருத்தமானவை எனக் கருதப்படுகிற அத்தகைய பிற பொருட்பாடுகளையும் அந்த ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கலாம்.

(3) ஆண்டு அறிக்கை அதிகாரஅமைப்பின் கூட்டம் ஒன்றில் ஏற்கப்பட்டு, தலைவராலும் உறுப்பினர்களாலும் கையொப்பமிடப்பட்டு, அதிகாரஅமைப்பின் பொது முத்திரையைப் பொருத்துவதன் மூலம் உறுதிச்சான்றளிக்கப்பட்ட பின்பு, தேவைப்படும் எண்ணிக்கையில் அதன் படியங்களுடன், அது தயாரிக்கப்பட்டிருக்கிற ஆண்டின் இறுதியை அடுத்துப் பின்வரும் நூற்று எண்பது நாட்கள் கொண்ட ஒரு காலஅளவுக்குள் உரிய அரசுக்குப் பணிந்தனுப்பப்பட வேண்டும்.

படிவம் - 'A'

[*காண்க,* விதி 3(2)]

**செயல்திட்டப் பதிவுக்கான விண்ணப்பம்**
**(Application For Registration of Project)**

பெறுநர்:

புதுச்சேரி அசையாச்சொத்து வணிக ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பு

……………………………………………………………………………………………….

……………………………………………………………………………………………….

ஐயா,

[நான்/நாங்கள்] ……………………………. [புதுச்சேரி/காரைக்கால்/மாஹே/ஏனாம்] ……………………….....…… மாவட்டம் …………….....……………… [நகராட்சி / கொம்யூன் பஞ்சாயத்து] …………………......……… கிராமத்தில் (என்னால்/எங்களால்) நிறுவப்படவிருக்கும் செயல்திட்டத்தின் பதிவு வழங்குதலுக்காக ஈங்கிதனால் [விண்ணப்பிக்கிறேன்/விண்ணப்பிக்கிறோம்].

1. தேவைப்படும் விவரங்கள் அடியில் வருமாறு—

(i) விண்ணப்பதாரரின் தகுதிநிலை– [தனிப்பட்டவர்/நிறுமம்/உரிமையாளர் நிறுவனம்/சங்கங்கள்/கூட்டாண்மை நிறுவனம்/தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு முதலானவை] :

(ii) தனிப்பட்டவர் எனும் நேர்வில்–

(a) பெயர் :

(b) தந்தை பெயர் :

(c) வாழ்க்கைத்தொழில் (occupation) :

(d) முகவரி :

(e) தொடர்பு விவரங்கள் (தொலைபேசி எண், மின்னஞ்சல், தொலைபதிவி எண் முதலியன) :

(f) அசையாச்சொத்து வணிகரின் பெயர், நிழற்படம், தொடர்பு விவரங்கள் மற்றும் முகவரி. :

*அல்லது*

[நிறுவகம்/சங்கங்கள்/பொறுப்புக்கட்டளை/நிறுமங்கள்/வரையறுத்த கடப்பாட்டுக் கூட்டாண்மை/தகுதிறமுள்ள அதிகார அமைப்பு முதலியன] எனும் நேர்வில்.—

(a) பெயர் :

(b) முகவரி :

(c) பதிவுச் சான்றிதழ்ப் படியம் [நிறுவகம்/சங்கங்கள்/பொறுப்புக்கட்டளை/ நிறுமங்கள்/வரையறுத்த கடப்பாட்டுக் கூட்டாண்மை/தகுதிறமுள்ள அதிகார அமைப்பு முதலியன என்ற நிலையில்,] :

(d) முக்கியக் குறிக்கோள்கள் :

(e) தொடர்பு விவரங்கள் (தொலைபேசி எண், மின்னஞ்சல், தொலைபதிவி எண் முதலியன) :

(f) [தலைவர்/கூட்டாளிகள்/இயக்குநர்கள்] மற்றும் அதிகாரம்பெற்ற ஆட்கள் முதலியவர்களின் பெயர், நிழற்படம், தொடர்பு விவரங்கள் மற்றும் முகவரி. :

(iii) அசையாச்சொத்து வணிகரின் பான் எண் :

(iv) பிரிவு 4 இன் (2) ஆம் உட்பிரிவு (1) ஆம் பிரிவுக்கூறின் (D) உட்பிரிவுக்கேற்ப, கணக்குப் பேணிவைக்கப்படும் வங்கி அல்லது வங்கியரின் முகவரி. :

(v) விண்ணப்பதாரரின் பிடிமானத்திலுள்ள செயல்திட்ட நிலத்தின் விவரங்கள். :

(vi) கடந்த ஐந்தாண்டுகளில் அசையாச்சொத்து வணிகரால் தொடங்கப்பட்டு, ஏற்கனவே முடிக்கப்பட்ட அல்லது வளர்மானம் நடைபெறுகிற கூறப்பட்ட செயல்திட்டங்களின் நடப்புத் :

தகுதிநிலை, அதனை செய்துமுடிப்பதிலுள்ள ஏதேனும் காலத்தாழ்வு, முடிவுறாநிலையிலுள்ள நேர்வுகளின் விவரம், நிலத்தின் வகை மற்றும் முடிவுறாநிலையிலுள்ள பணச்செலுத்தங்களின் விவரங்கள் முதலியன உள்ளடங்கலாக, அத்தகைய செயல்திட்டங்கள் பற்றிச் சுருக்க விவரங்கள்.

(vii) புற வளர்மான வேலைகளை மேற்கொள்ளும் முகமை : (உள்ளூர் அதிகாரஅமைப்பு / தனது வளர்மானம் (Self Development).

(viii) ........................................ புதுச்சேரி/காரைக்கால்/மாஹே/ஏனாம் ........................................ வங்கி ........................................ கிளை பேரில் ........................................ ஆதரவாக ........................................ ரூபாய்க்கு வரையப்பட்டு ........................................ தேதியிடப்பட்ட கேட்பு வரைவோலை / வங்கியர் காசோலை எண் ........................................ வழியே அல்லது நேர்வுக்கேற்ப இணைய வழி வாயிலாகச் செலுத்தப்படும் ........................................ பதிவுக் கட்டணம் ........................................ (செலுத்திய தேதி, நடைபாட்டு எண் முதலியன) 3-ஆம் விதியின் (3)-ஆம் உள்விதிக்கு ஏற்பக் கணக்கிடப்படலாம்.

(ix) விண்ணப்பதாரர் அளிக்க விரும்பும் வேறு ஏதேனும் : தகவல்.

2. நான்/நாங்கள் பின்வரும் ஆவணங்களை இணைத்துள்ளேன்/ இணைத்துள்ளோம், அதாவது–

(i) அசையாச்சொத்துவணிகரின் பான் அட்டை மற்றும் ஆதார் அட்டையின் உறுதிச்சான்றளிப்புப் படியம்;

(ii) முன்சென்ற மூன்று நிதியாண்டுகளுக்கான அசையாச்சொத்து வணிகரின் தணிக்கைசெய்த ஆதாய இழப்புக் கணக்கு, இருப்புநிலை ஏடு, பணப்பொழிவு விவரவுரை, இயக்குநர்கள் அறிக்கை மற்றும் தணிக்கையாளர் அறிக்கை உள்ளடங்கலாக ஆண்டு அறிக்கை; மற்றும் ஆண்டு அறிக்கை கிடைக்கத்தக்கதாக இல்லை எனுமிடத்து, முன்சென்ற மூன்று

நிதியாண்டுகளுக்குத் தணிக்கைசெய்த அசையாச்சொத்துவணிகரின் ஆதாய-இழப்புக் கணக்கு, இருப்புநிலை ஏடு, பணப்பொழிவு விவரவுரை மற்றும் தணிக்கையாளர் அறிக்கை;

(iii) உரிமைமூலத் தொடர்ச்சிக்கான உறுதிச்சான்றளிப்புடன் அத்தகைய உரிமைமூலத்தின் சட்டச் செல்லுநிலை ஆவணங்களுடன் சேர்த்து, வளர்மானம் செய்யக் கருதப்படுகிற செயல்திட்ட நிலத்திற்கு அசையாச்சொத்துவணிகரின் உரிமை மூலத்தை எடுத்துரைக்கும் சட்டப்படியான உரிமைமூலத்தின் உறுதிச்சான்றளிப்புப் படியம்;

(iv) குறைந்தது பத்தாண்டுகள் பட்டறிவு கொண்டிருக்கும் ஒரு வழக்குரைஞர் வாயிலாக அத்தகைய நிலத்தில் அல்லது அதன் மீதான ஏதேனும் உரிமைகள், உரிமைமூலம், நலன், கொடுபடவேண்டியவை (dues), வழக்கீடு மற்றும் எவரேனும் சார்பினரின் பெயர் பற்றிய விவரங்கள் உள்ளடங்கலாக, செயல்திட்ட வளர்மானம் கருதப்படுகிற நிலத்தின் மீதான வில்லங்கங்கள், அல்லது நேர்வுக்கேற்ப வட்டாட்சியர் படிநிலைக்குக் குறையாத வருவாய் அதிகாரியிடமிருந்து வில்லங்கச் சான்றிதழ் பற்றிய விவரங்கள்;

(v) அசையாச்சொத்துவணிகர் வளர்மானம் கருதப்படுகிற நிலத்தின் சொந்தக்காரராக இல்லாதவிடத்து, அந்த அசையாச்சொத்துவணிகருக்கும் அத்தகைய சொந்தக்காரருக்கும் இடையே செய்துகொண்ட ஒருங்குழைப்பு உடன்பாடு, வளர்மான உடன்பாடு, கூட்டு வளர்மான உடன்பாடு அல்லது நேர்வுக்கேற்ப வேறேதேனும் உடன்பாட்டின் படியம் ஒன்றுடன், மற்றும் வளர்மானம் கருதப்படுகிற செயல்திட்ட நிலத்தின்பேரில் அத்தகைய சொந்தக்காரரின் உரிமைமூலத்தை எடுத்துரைக்கும் உரிமைமூலம், பிற ஆவணங்கள் ஆகியவற்றின் படியங்களுடன் சேர்த்து நிலச் சொந்தக்காரரின் இசைவளிப்பு பற்றிய விவரங்கள்;

(vi) விண்ணப்பத்தில் சொல்லப்பட்ட அசையாச்சொத்துவணிகச் செயல் திட்டத்திற்குப் பொருந்தத்தக்கதாகும் சட்டங்களுக்கு இணங்கியவாறு திட்டமிடும் அதிகாரஅமைப்பிடமிருந்து பெற்ற ஒப்புதளிப்புகளின் உறுதிச்சான்றளிப்புப் படியம்; மற்றும் செயல்திட்டம் பல கட்டங்களில் வளர்மானம்செய்யக் கருதப்படுகிறவிடத்து, அத்தகைய கட்டங்களில் ஒவ்வொன்றிற்கும் திட்டமிடும் அதிகாரஅமைப்பிடமிருந்து பெற்ற ஓர் உறுதிச்சான்றளிப்புப் படியம்;

(vii) கருதிய செயல்திட்டம் அல்லது அதன் கட்டங்களின் ஒப்பளித்த திட்டம், அமைப்புவிவரத் திட்டம் மற்றும் தனிக்குறிப்பீடுகள் மற்றும் திட்டமிடும் அதிகாரஅமைப்பால் ஒப்பளிக்கப்பட்டவாறு முழுமையான செயல்திட்டம்;

(viii) கருதிய செயல்திட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய வளர்மான வேலைகளின் திட்டம் மற்றும் தீயணைப்பு வசதிவாய்ப்புகள், குடிநீர் வசதிவாய்ப்புகள், அவசரகால வெளியேற்றப் பணிகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பயன்பாடு உள்ளடங்கலாக அவற்றிற்கு வகைசெய்யப்பட வேண்டிக் கருதப்படும் வசதிவாய்ப்புகள்;

(ix) செயல்திட்ட இறுதிப் புள்ளிகளுடன் நில நேர்க்கோடு மற்றும் நில நிரைக்கோடு உள்ளடங்கலாக நில எல்லைகளுடன் சேர்த்து செயல்திட்டத்திற்காக நேர்ந்தளித்த நிலத்தின் தெளிவான எல்லைக்குறியுடன் செயல்திட்ட அமைவிடத்தின் விவரங்கள்;

(x) ஒதுக்கீட்டுக் கடிதம், விற்பனை உடன்பாடு மற்றும் ஒதுக்கீடுபெறுபவர் கையொப்பமிட வேண்டிக் கருதப்படுகிற உரிமைமாற்றளிப்பு ஒப்பாவணத்தின் முறைப்படிவம்;

(xi) தனியுரிமையுள்ள மேன்மாடப் பரப்பிடம் அல்லது தாழ்வாரப் பரப்பிடமும் மற்றும் அடுக்குவீடும் தனியுரிமையுள்ள திறந்தவெளி மாடிப்பரப்பிடமும் சேர்த்துச் செயல்திட்டத்தில் விற்பனைக்காகவுள்ள அடுக்குவீடுகளின் எண்ணிக்கை, வகை மற்றும் விரிப்புமூடிய பரப்பிடம், அல்லது செயல்திட்டத்தில் விற்பனைக்காகவுள்ள மனைக்கட்டுகளின் எண்ணிக்கை, வகை மற்றும் பரப்பிடம், அல்லது நேர்வுக்கேற்ப இரண்டும் பற்றிய விவரங்கள்;

(xii) செயல்திட்டத்தில் விற்பனைக்கான ஊர்திக்கொட்டிலின் எண்ணிக்கை மற்றும் பரப்பிடம்;

(xiii) அசையாச்சொத்துவணிகச் செயல்திட்டத்தில் கிடைக்கத்தக்க வாகனம் நிறுத்தும் திறந்தவெளிப் பரப்பிடங்களின் எண்ணிக்கை மற்றும் வாகனம் நிறுத்தும் மேல்மூடிய பரப்பிடங்களின் எண்ணிக்கை;

(xiv) கருதிய செயல்திட்டத்திற்கான அவருடைய அசையாச் சொத்துவணிக முகவர்கள் எவருமிருப்பின், அவர்களுடைய பெயர்கள் மற்றும் முகவரிகள்;

(xv) கருதிய செயல்திட்ட வளர்மானத்துடன் தொடர்புடைய ஒப்பந்தக்காரர்கள், கட்டிடக்கலைஞர், கட்டமைப்புப் பொறியாளர் மற்றும் வேறு ஆட்கள் எவருமிருப்பின், அவர்களுடைய பெயர்கள் மற்றும் முகவரிகள்;

(xvi) படிவம் "B" யில் ஒரு விளம்புகை.

3. நான்/நாங்கள் 4-ஆம் பிரிவின், மற்றும் இச்சட்டம் அல்லது அதன்கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளின் கீழ் வேண்டுறுத்தியவாறு, முன்னேறிவரும் செயல்திட்டங்கள் பற்றிப் பின்வரும் கூடுதல் ஆவணங்களையும் தகவல்களையும் இணைத்துள்ளேன்/இணைத்துள்ளோம், அதாவது:-

(i)

(ii)

(iii)

4. நான்/நாங்கள் இதில் அளித்துள்ள விவரங்கள் எனது/எங்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் சரியானவை என்றும், அவற்றிலிருந்து பொருட்படுத்தத்தக்க எதுவும் என்னால்/எங்களால் மறைக்கப்பட்டிருக்க வில்லை என்றும் விழுமியமுறைமையில் (Solemnly) உறுதிசெய்து விளம்புகிறேன்/றோம்.

*தங்கள் உண்மையுள்ள,*

தேதி :

இடம் : விண்ணப்பதாரர்(கள்) கையொப்பம் மற்றும் முத்திரை.

படிவம் - 'B'
[*காண்க*, விதி 3 (4)]

**அசையாச்சொத்துவணிகரால் அல்லது அசையாச்சொத்துவணிகரின் அதிகாரம்பெற்ற ஆள் எவராலும் கையொப்பமிடப்படவேண்டிய ஒர் ஆணையுறுதியாவணத்தை ஆதாரமாகக் கொண்ட விளம்புகை.**

ஆணையுறுதியாவணம் மற்றும் விளம்புகை
(Affidavit-*cum*-Declaration)

[கருதிய செயல்திட்டத்தின் அசையாச்சொத்துவணிகர்/ கருதிய செயல் திட்டத்தின் அசையாச்சொத்து வணிகரால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட]

[திரு/திருமதி.] ........................................ இன் ஆணையுறுதியாவணம் மற்றும் விளம்புகை, பார்க்க அதன்/அவரின்/அவர்களுடைய தேதியிட்ட அதிகாரமளிப்பு;

செயல்திட்டத்தின் அசையாச்சொத்து வணிகர் / உரியவாறு செயல்திட்டத்தின் அசையாச்சொத்துவணிகரால் அதிகாரமளிக்கப்பட்டவர் ஆகிய நான் ............................................. விழுமிய முறைமையுடன் பின்வருமாறு விளம்புகை, பொறுப்பேற்பு மற்றும் அறிவிப்பு செய்கிறேன்:-

1. கருதிய செயல்திட்டத்தின் வளர்மானம் செய்யப்படவுள்ள நிலத்திற்கான சட்டப்படியான உரிமைமூலத்தை நான்/ அசையாச்சொத்துவணிகர் ஆகிய நான் பெற்றிருக்கிறேன்.

   *அல்லது*

   ............................................ கருதிய செயல்திட்டத்தின் வளர்மானம் நிறைவேற்றப்பட்ட படவேண்டிய நிலத்திற்குச் சட்டமுறையான உரிமைமூலத்தைக் கொண்டிருக்கிறேன்.

   *மற்றும்*

   அசையாச்சொத்துவணிகச் செயல்திட்ட வளர்மானத்திற்காக அத்தகைய சொந்தக்காரருக்கும் அசையாச்சொத்துவணிகருக்கும் இடையேயான உடன்பாட்டின் உறுதிச்சான்றளிப்புப் படியம் ஒன்றுடன் சேர்த்து, அத்தகைய நிலத்தினுடைய உரிமைமூலத்தின் சட்டமுறையான செல்லுநிலை உறுதிச்சான்றளிப்பு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

2. கூறப்பட்ட நிலம் அனைத்து வில்லங்கங்களிலிருந்து விடுபட்டிருக்கிறது.

*அல்லது*

அத்தகைய நிலத்தில் அல்லது அதன் பேரிலான ஏதேனும் உரிமைகள், உரிமைமூலம், உரிமைநலன், கொடுபாடுகள், வழக்கீடு, எவரேனும் சார்பினரின் பெயர் ஆகியவற்றின் விவரங்கள் உள்ளடங்கலாக, .......................................... வில்லங்கங்களின் விவரங்கள்.

3. (என்னால்/அசையாச்சொத்துவணிகரால்) செயல்திட்டம் எந்தக் கால அளவுக்குள் முடிக்கப்பட வேண்டுமோ அந்தக் காலஅளவு நேரம் .......................... ஆகும்.

4. ஒதுக்கீடுபெற்றவர்களிடமிருந்து அசையாச்சொத்துவணிகச் செயல்திட்டத்திற்காக அவ்வப்போது (என்னால்/அசையாச்சொத்து வணிகரால்) வசூலிக்கப்பட்ட தொகையின் எழுபது விழுக்காடு, பட்டியல் வங்கி ஒன்றில் பேணிவரப்பட வேண்டிய (தனிக்கணக்கு ஒன்றில்) கட்டுமானச் செலவுக்கும் நிலத்தின் விலைக்கும் இழப்பெதிர்க்காப்பாக (to cover) வைப்பீடுசெய்யப்படும், மற்றும் அது அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

5. செயல்திட்டச் செலவுக்கு இழப்பெதிர்காப்பாகத் தனிக் கணக்கிலிருக்கும் தொகைகள், செயல்திட்டம் செய்து முடிக்கப்படும் விழுக்காட்டு வீதத்தில் (என்னால்/அசையாச்சொத்துவணிகரால்) எடுக்கப்படும்.

6. தனிக் கணக்கிலிருக்கும் தொகைகள், செயல்திட்டம் செய்து முடிக்கப்பட்டுள்ள விழுக்காட்டு வீதத்தில் பணமெடுப்பு இருக்கிறது என்று தொழிலாற்றும் ஒரு பொறியாளர், ஒரு கட்டிடக்கலைஞர் மற்றும் ஒரு பட்டயக் கணக்கரால் சான்றிதழ் அளிக்கப்பட்ட பின்பு (என்னால்/அசையாச்சொத்துவணிகரால்) எடுக்கப்படும்.

7. (நான்/அசையாச்சொத்துவணிகர்) ஒவ்வொரு நிதியாண்டு முடிவுக்குப் பின்பு ஆறு மாதங்களுக்குள் தொழிலாற்றும் ஒரு பட்டயக்கணக்கரால் கணக்குகளைத் தணிக்கை செய்வித்து மற்றும் அத்தகைய பட்டயக்கணக்கரால் சான்றிதழளித்துக் கையொப்பமிடப்பட்ட கணக்குகளின் விவரவுரையை முன்னிலையாக்கு (வேன்/வார்). மேலும், குறிப்பிட்ட ஒரு செயல்திட்டத்திற்காகத் திரட்டிய தொகைகள் அந்தச் செயல்திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன மற்றும் செயல்திட்டம் செய்து முடிக்கப்பட்டுள்ள விழுக்காட்டு வீதத்துடன் பணமெடுப்பு இணக்கமாக இருந்திருக்கிறதா என்பது தணிக்கையின் போது சரிபார்க்கப்படும்.

8. (நான்/அசையாச்சொத்துவணிகர்) தகுதிறமுள்ள அதிகார அமைப்புகளிடமிருந்து அந்த நேரத்தில் முடிவுறாநிலையிலுள்ள ஒப்புதலளிப்புகள் அனைத்தையும் (பெறுவேன்/பெறுவார்)

9. (நான்/அசையாச்சொத்துவணிகர்) சட்டம் மற்றும் அதன் கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளில் வகுத்துரைக்கப்பட்டிருக்கிறவாறு அத்தகைய வேறு ஆவணங்களையும் முன்னளித்திருக்கி (றேன்/றார்)

10. (நான்/அசையாச்சொத்துவணிகர்) அடுக்குவீடு, மனைக்கட்டு அல்லது கட்டிடம் எதையும் ஒதுக்கீடு செய்யும் நேரத்தில் ஒதுக்கீடுபெறுபவர் எவருக்கும் எதிராக வேற்றுமை பாராட்ட மாட் (டேன்/டார்).

*ஆணைச் சான்றுரைஞர் (Deponent).*

---

**சரிபார்ப்புறுதி (Verification)**

மேலுள்ள எனது ஆணையுறுதியாவணம் - மற்றும் - விளம்புகையின் உள்ளடக்கங்கள் மெய்யானவை மற்றும் அவற்றிலிருந்து பொருட்படுத்தத்தக்க எதுவும் என்னால் மறைக்கப்பட்டிருக்கவில்லை.

..........................................(இல்) இந்த ............................................ நாளன்று என்னால் சரிபார்த்து உறுதி செய்யப்பட்டது.

*ஆணைச் சான்றுரைஞர்.*

படிவம் -‘C’
[*காண்க,* விதி 5 (1)]

**செயல்திட்டத்தின் பதிவுச் சான்றிதழ்**
**(Registration Certficate of Project)**

பின்வரும் செயல்திட்டங்களுக்கு 5ஆம் பிரிவின் கீழ் பதிவு வழங்கப்படுகிறது:—

செயல்திட்டப் பதிவு எண :

(செயல்திட்ட முகவரி உள்ளடங்கலாகச் செயல்திட்ட விவரங்களைக் குறித்துரைத்திடுக)

1. [தனிப்பட்ட ஒருவர் எனும் நேர்வில்]-

[திரு/திருமதி] ...............................................................

[திரு/திருமதி] இன் மகன் ................................................................. கிராமம் ............................................. (நகராட்சி/கொம்யூன் பஞ்சாயத்து) ................................................ மாவட்டம் ................................................ (புதுச்சேரி/காரைக்கால்/மாஹே/ஏனாம்);

*அல்லது*

[ஒரு நிறுவகம் / சங்கம் / நிறுமம் / தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு எனும் நேர்வில்]

.......................................இல், அதனுடைய (பதிவு அலுவலகம்/ அலுவல் தொழிலின் தலைமை இடம்) கொண்டிருக்கிற .......................................... (நிறுவகம் / சங்கம் / நிறுமம் / தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு)

2. இந்தப் பதிவு பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வழங்கப்படுகிறது; அதாவது:-

(i) அசையாச்சொத்துவணிகர் புதுச்சேரி அரசால் வகுத்துரைத்தவாறு விற்பனைக்கான ஓர் உடன்பாட்டை ஒதுக்கீடுபெறுபவர்களுடன் செய்துகொள்ள வேண்டும்;

(ii) அசையாச்சொத்துவணிகர், 17ஆம் பிரிவுக்கேற்ப, அடுக்குவீடு, மனைக்கட்டு, அல்லது கட்டிடம், அல்லது நேர்வுக்கேற்ப பொதுப் பரப்பிடத்தின் உரிமைமாற்றளிப்பு ஒப்பாவாணம் ஒன்றை ஒதுக்கீடுபெறுபவர் அல்லது ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கத்துக்கு ஆதரவாக எழுதிப் பதிவுச்செய்ய வேண்டும்;

(iii) அசையாச்சொத்துவணிகரால் வசூலிக்கப்பட்ட தொகையின் எழுபது விழுக்காடு, 4ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (1)ஆம் பிரிவுக்கூறின் (D) உட்பிரிவுக்கூறுக்கு ஏற்ப அந்த நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டி, கட்டுமான விலைக்கும் நிலத்தின் விலைக்கும் இழப்பெதிர்க்காப்பாகப் பட்டியல் வங்கி ஒன்றில் பேணிவரப்படவேண்டிய தனிக்கணக்கு ஒன்றில் அசையாச்சொத்துவணிகரால் வைப்பீடு செய்யப்பட வேண்டும்.

(iv) பதிவானது, இச்சட்டம் மற்றும் அதன்கீழ்ச் செய்த விதிகளுக்கும் இணங்கியவாறு அதிகாரஅமைப்பால் நீட்டிக்கப்பட்டாலன்றி, ........................ லிருந்து தொடங்கி .......................... உடன் முடியும் ........................... ஆண்டுக் காலஅளவுக்குச் செல்லுநிலை கொண்டிருக்கும்;

(v) அசையாச்சொத்துவணிகர் இச்சட்டம் மற்றும் அதன்கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளுக்கு இணக்கமாக நடக்க வேண்டும்.

(vi) அசையாச்சொத்துவணிகர், இச்செயல்திட்டத்திற்குப் பொருந்தக்கவாறு அப்போதைக்குச் செயலாற்றலிலுள்ள வேறேதேனும் சட்டத்தின் வகைமுறைகளை மீறி நடத்தல் ஆகாது.

3. மேலே சொல்லப்பட்ட நிபந்தனைகள் அசையாச்சொத்து வணிகரால் நிறைவேற்றப்படவில்லை என்றால், இச்சட்டம் மற்றும் அதன் கீழ்ச்செய்த விதிகளுக்கும் ஒழுங்குமுறைவிதிகளுக்கும் ஏற்ப, இதில் வழங்கப்பட்ட பதிவைப் பின்னறவுசெய்தல் உள்ளடங்கலாக, அசையாச்சொத்துவணிகருக்கு எதிராகத் தேவைப்படும் நடவடிக்கைகளை அதிகாரஅமைப்பு எடுக்கலாம்.

*செயலாளரின் கையொப்பம் மற்றும் முத்திரை*

தேதி : புதுச்சேரி அசையாச்சொத்து வணிக

இடம் : ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பு.

படிவம் - 'D'

[*காண்க,* விதி 5 (2), விதி 6 (4), விதி 7 ]

**செயல்திட்டப் பதிவு விண்ணப்பத்தை மறுத்துத்தள்ளல்/ செயல்திட்டப் பதிவு நீட்டிப்பு விண்ணப்பத்தை மறுத்துத்தள்ளல்/ செயல்திட்டப் பதிவைப் பின்னறவுசெய்தல் பற்றிய தெரிவிப்பு**

அனுப்புநர் **:**

புதுச்சேரி அசையாச்சொத்து வணிக ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பு,

..........................................................................

..........................................................................

பெறுநர் **:**

..........................................................................

..........................................................................

(விண்ணப்பம் / பதிவு) எண் :

தேதி :

இந்தக் காரணங்களின் பொருட்டு ..........................................

உங்கள் செயல்திட்டப் பதிவுக்கான உங்கள் விண்ணப்பம் மறுத்துத்தள்ளப்படுகிறது என ஈங்கிதனால் நீங்கள் தகவலளிக்கப்படுகிறீர்கள்.

*அல்லது*

உங்கள் செயல்திட்டப் பதிவு நீட்டிப்புக்கான உங்கள் விண்ணப்பம் மறுத்துத்தள்ளப்படுகிறது என ஈங்கிதனால் நீங்கள் தகவலளிக்கப்படுகிறீர்கள்.

*அல்லது*

உங்கள் செயல்திட்டத்திற்கு வழங்கப்பட்ட பதிவு பின்னறவு செய்யப்படுகிறது என ஈங்கிதனால் நீங்கள் தகவலளிக்கப்படுகிறீர்கள்.

*செயலாளரின் கையொப்பம் மற்றும் முத்திரை*

தேதி : புதுச்சேரி அசையாச்சொத்து வணிக

இடம் : ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பு.

படிவம் - 'E'

[*காண்க,* விதி 6 (1) ]

**செயல்திட்டப் பதிவு நீட்டிப்புக்கான விண்ணப்பம்**

அனுப்புநர் :

.........................................................................

.........................................................................

பெறுநர் :

புதுச்சேரி அசையாச்சொத்து வணிக ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பு,

.........................................................................

.........................................................................

*ஐயா,*

(நான்/நாங்கள்) அதிகாரஅமைப்புடன் பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் செயல்திட்டங்களின் பதிவைப் புதுப்பித்தலுக்காக ஈங்கிதனால் விண்ணப்பிக்கி (றேன்/றோம்).

அதிகாரஅமைப்பிடம் பதிவுசெய்யப்பட்ட ................................................ ................................................................................................ (செயல்திட்டம்). பார்க்க .............................. எண் கொண்ட செயல்திட்டப் பதிவுச் சான்றிதழ்;

அது, .............................. அன்று (காலம்) முடிவுற்றது.

(நான்/நாங்கள்) பின்வரும் ஆவணங்களையும் தகவல்களையும் வேண்டுறுத்தியவாறு முன்வைக்கி (றேன்/றோம்), அதாவது:-

(i) விதி 6-இன் (2)-ஆம் உள் விதியின் கீழ் வகைசெய்தவாறு நீட்டிப்புக் கட்டண வகையில் (புதுச்சேரி/காரைக்கால்/மாஹே/ஏனாம்) ................................ வங்கியின் .............................. கிளையில் .............................. ஆதரவாக வரைந்த .............................. ரூபாய்க்கான ..............................

தேதியிட்ட .............................. எண் கொண்ட ஒரு கேட்பு வரைவோலை வங்கியர் காசோலை அல்லது நேர்வுக்கேற்ப இணையவழி வாயிலாகச் செலுத்தம் .............................. (செலுத்திய தேதி, நடைபாட்டு எண் முதலியவை போன்ற இணைய வழிச் செலுத்தத்தின் விவரங்களைத் தருக).

(ii) நாளிதுவரை மேற்கொண்ட வேலைகளின் வளர்மானக் கட்டங்களைக் காட்டும் செயல்திட்டத்தின் உறுதிச்சான்றளிப்புத் திட்டம்;

(iii) செயல்திட்டத்திலுள்ள வேலைகளின் வளர்மான நிலைமை, மற்றும் .............................. செயல்திட்டத்தின் பதிவுக்காக விண்ணப்பம் செய்த நேரத்தில் 'B' படிவத்தில் பணிந்து முன்வைத்த விளம்புகையில் விளம்பிய கால அளவுக்குள் செயல்திட்டத்தின் வளர்மான வேலைகளை முடிக்காததற்கான காரணம் பற்றிய விளக்கக்குறிப்பு;

| | முடிவுறா நிலையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | அவரால் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | |
| | | | |

**D.** **அசையாச்சொத்துவணிகர்கள், ஒதுக்கீடுபெறுநர்கள் மற்றும் அசையாச் சொத்துவணிக முகவர்கள் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கி நடப்பதைக் கண்காணிக்க அதிகாரஅமைப்பால் நடத்தப்பட்ட காலமுறை ஆய்வளவை (Periodical Survey) பேரில் விவரவுரை:**

| வரிசை எண். | காலாண்டின் போது நடத்திய ஆய்வளவை, அதன் விவரங்கள் | அதிகார அமைப்பின் நுண்ணோக்குரை | மேற்கொண்ட குறைதீர்வுச் செயற்படிகள் |
|---|---|---|---|
| | | | |

**E.** **அசையாச்சொத்துவணிகர்கள் ஒதுக்கீடுபெறுபவர்கள் மற்றும் அசையாச்சொத்துவணிக முகவர்கள் சட்டம் மற்றும் அதன் கீழ்ச் செய்த விதிகள், ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கி நடக்காமை எதையும் மட்டுப்படுத்த மேற்கொண்ட செயற்படிகளின் பேரில் விவரவுரை:**

| வரிசை எண். | ஆய்வுப்பொருள் | எடுத்த செயற்படிகள் | எட்டிய முடிவுகள் |
|---|---|---|---|
| | | | |

**F.** **சட்டத்தை, மற்றும் ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பு, நீதித்தீர்ப்பு அலுவலரின் கட்டளைகளை மீறியதற்காக ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பால் சுமத்தப்பட்ட தண்டத்தின் பேரில் விவரவுரை:**

| வரிசை எண். | அசையாச்சொத்து வணிகரின் பெயர் | அதிகார அமைப்பு / நீதித்தீர்ப்பு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளின் விவரங்கள் | சுமத்திய தண்டம் / வட்டி/சரியீடு | செலுத்தப்பட்டதா? |
|---|---|---|---|---|
| | | | | |

| வரிசை எண். | ஒதுக்கீடு பெறுபவரின் பெயர் | அதிகார அமைப்பு / நீதித்தீர்ப்பு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளின் விவரங்கள் | சுமத்திய தண்டம்/ வட்டி/சரியீடு | செலுத்தப்பட்டதா? |
|---|---|---|---|---|
| | | | | |

| வரிசை எண். | அசையாச் சொத்துவணிக முகவரின் பெயர் | அதிகார அமைப்பு / நீதித்தீர்ப்பு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளின் விவரங்கள் | சுமத்திய தண்டம்/ வட்டி/சரியீடு | செலுத்தப்பட்டதா? |
|---|---|---|---|---|
| | | | | |

G. **அதிகாரஅமைப்பால் அல்லது நீதித்தீர்ப்பு அலுவலரால் ஆணையிடப்பட்ட புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள்:** அதிகாரஅமைப்பு அல்லது நீதித்தீர்ப்பு அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளும் விசாரணைகளும், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு அல்லது உரிய அரசிடமிருந்து பெறப்பட்ட சுட்டுக்குறிப்புகளும் பற்றிய ஒரு சுருக்க வருணிப்புரை (Narrative).

H. **அதிகாரஅமைப்பு மற்றும் நீதித்தீர்ப்பு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள்:** குற்றச்செயல் எதுவும் அடையாளம் காணப்படாதவிடத்தும், குற்றச்செயல் மெய்ப்பிக்கப்படுகிற நேர்விலும், ஆணை பிறப்பிக்கப்பட்ட பிரிவுகளைச் சுட்டிக்காட்டும் அட்டவணை விவரவுரை ஒன்றையும் ஆணைகளின் சுருக்க விவரங்களையும் சேர்த்துப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் ஒவ்வொரு வகையினத்திற்கும், வகையினம் வாரியாக, தனித்தனியே, அதிகாரஅமைப்பு அல்லது நீதித்தீர்ப்பு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் ஒரு சுருக்க வருணப்புரை.

I. **அதிகாரஅமைப்பின் ஆணைகளை நிறைவேற்றலும் தண்டங்களை விதித்தலும்:**

(i) பணத்தண்டங்கள், விதிக்கப்பட்ட தண்டங்களின் வசூலிப்பு விவரங்கள், விதிக்கப்பட்டு ஆனால் வசூலிக்கப்படாத தண்டங்களின் விவரங்கள்: பொருட்பாடுகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் 23ஆம் விதியின் உதவி கொண்டு விதிக்கப்பட்ட பணத்தண்டங்களின் மொத்தத் தொகை, வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை ஆகியவை;

(ii) பிரிவு 59-இன் கீழ் நீதிமன்றத்திற்குச் சுட்டுகைசெய்யப்பட்ட பொருட்பாடுகள், ஆண்டின் போது நீதிமன்றத்திற்குச் சுட்டுகைசெய்த பொருட்பாடுகளின் மொத்த எண்ணிக்கை; ஆண்டின்போது நீதிமன்றத்தால் தீர்வுமுறை செய்த பொருட்பாடுகளின் மொத்த எண்ணிக்கை; ஆண்டு இறுதியில் நீதிமன்றத்தில் முடிவுறா நிலையிலிருந்த பொருட்பாடுகளின் மொத்த எண்ணிக்கை;

(iii) பிரிவு 40-இன் கீழ் ஆணை நிறைவேற்றத்திற்காக நீதிமன்றத்திற்குச் சுட்டுகைசெய்த பொருட்பாடுகள், ஆண்டின்போது நீதிமன்றத்திற்குச் சுட்டுகைசெய்த பொருட்பாடுகளின் மொத்த எண்ணிக்கை, ஆண்டின்போது நீதிமன்றத்தால் தீர்வுமுறைசெய்த பொருட்பாடுகளின் மொத்த எண்ணிக்கை, ஆண்டு இறுதியில் நீதிமன்றத்தில் முடிவுறாநிலையிலிருந்த பொருட்பாடுகளின் மொத்த எண்ணிக்கை.

**J. நீதித்தீர்ப்பு அலுவலரின் ஆணைகளை நிறைவேற்றலும் வட்டி மற்றும் சரியீட்டை விதித்தலும்:**

(i) வட்டி மற்றும் சரியீடுகள், விதிக்கப்பட்ட வட்டியும் சரியீடும் பற்றிய விவரங்கள், விதிக்கப்பட்ட, ஆனால் செலுத்தப்படாத வட்டியும் சரியீடும் பற்றிய விவரங்கள், பொருட்பாடுகளின் மொத்த எண்ணிக்கை, 23ஆம் விதியின் உதவி கொண்டு விதிக்கப்பட்ட வட்டியும் சரியீடும் பற்றிய மொத்தத் தொகை ஆகியவை; மற்றும்

(ii) பிரிவு 40 இன் கீழ் ஆணை நிறைவேற்றத்திற்காக நீதிமன்றத்திற்குச் சுட்டுகைசெய்த பொருட்பாடுகள், ஆண்டின் போது நீதிமன்றத்திற்குச் சுட்டுகைசெய்த பொருட்பாடுகளின் மொத்த எண்ணிக்கை, ஆண்டின் போது நீதிமன்றத்தால் தீர்வுமுறைசெய்த பொருட்பாடுகளின் மொத்த எண்ணிக்கை; ஆண்டு இறுதியில் நீதிமன்றத்தில் முடிவுறா நிலையிலிருந்த பொருட்பாடுகளின் மொத்த எண்ணிக்கை ஆகியவை.

**K. மேல்முறையீடுகள்:**

(i) ஆண்டில் அதிகாரஅமைப்பு அல்லது நீதித்தீர்ப்பு அலுவலரின் ஆணைகளுக்கு எதிராகத் தாக்கல்செய்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை;

(ii) ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறாநிலையிலிருக்கும் மேல்முறையீடுகள்;

(iii) ஆண்டின் போது தாக்கல்செய்த மேல்முறையீடுகள்;

(iv) ஆண்டின்போது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஏற்றுக்கொண்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை;

(v) ஆண்டின்போது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத மேல்முறையீடுகளின் எண்ணிக்கை;

(vi) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தால் ஏற்றுக்கொண்ட மேல்முறையீடுகளின் சுருக்கமான நாளிதுவரைப் பதிவு.

**L. பிரிவு 33 இன் கீழ் உரிய அரசிடமிருந்து பெற்ற சுட்டுக்குறிப்புகள்:**

ஆண்டின் போது பெற்ற சுட்டுக்குறிப்புகளின் எண்ணிக்கை, ஆண்டின்போது தீர்வுமுறைசெய்த சுட்டுக்குறிப்புகளின் எண்ணிக்கை, ஆண்டு இறுதியில் முடிவுறாநிலையிலிருக்கும் சுட்டுக்குறிப்புகளின் எண்ணிக்கை ஆகியவற்றிற்கு வகைசெய்கிற, 33ஆம் பிரிவின் கீழ் உரிய அரசிடமிருந்து பெற்ற சுட்டுக்குறிப்புகள் பேரில் ஒரு சுருக்க வருணிப்புரை.

**M. பிரிவு 33இன் (3)ஆம் உட்பிரிவின் கீழ் பரிந்துரைச் செயலேற்பாடுகள் (advocacy measures):** 33ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் கீழ் மேற்கொண்ட செய்கைப்பாடுகளின் பேரில் ஒரு சுருக்க வருணிப்புரை-

(i) அசையாச்சொத்துவணிகப் பிரிவு தொடர்பான மற்றும் அதன் பேரில் விழிப்புணர்வை உருவாக்குவதற்கான, பொதுமக்கள்/வல்லுநர்கள்/ கொள்கை உருவாக்குபவர்கள்/சட்டங்களும் கொள்கைகளும் பேரில் ஒழுங்குமுறை அமைப்புகளுடன் பயிலரங்கம், கருத்தரங்கம் மற்றும் பிற செயலெதிர்ச் செயல்கள் (interactions);

(ii) அசையாச்சொத்துவாணிகப் பிரிவு தொடர்பான மற்றும் அதன்பேரில் விழிப்புணர்வை உருவாக்குவதற்காக, சட்டங்கள் மற்றும் கொள்கைகள் பேரில் வெளியிடப்பட்ட வரைதாள்கள் மற்றும் ஆய்வுகள்;

(iii) அதிகாரஅமைப்பு வெளியிட்ட/இணையதளத்தில் பதிவிட்ட கலந்தாய்வு வரைதாள்கள்.

(iv) உருவாக்கிய மற்றும் ஆராய்ந்த பகுப்பாய்வு வரைதாள்கள்;

(v) ஏனையவை.

**N. ஆட்சியம் மற்றும் நிறுவனப் பொருட்பாடுகள்:**

(i) செயலாளர் அறிக்கை;

(ii) அதிகாரஅமைப்பின் அமைப்பாக்கம் (composition);

(iii) ஆண்டில் பணியமர்த்தப்பட்ட தலைவர், உறுப்பினர்களின் மற்றும் பதவிவிலகிய அத்தகையவர்களின் விவரங்கள்;

(iv) ஆண்டில் பணியமர்த்தப்பட்ட நீதித்தீர்ப்பு அலுவலர்களின் மற்றும் பதவிவிலகிய அத்தகையவர்களின் விவரங்கள்;

(v) நிறுவனத்தின் கட்டமைப்பு;

(vi) வகையினவாரியாக அதிகாரஅமைப்பில் பணியாளர்களின் தகவல் அடங்கிய ஓர் அட்டவணை - விவரவுரை; வகையினம் வாரியாக: ஆண்டில் ஒப்பளித்த பணியிடங்கள், நிரப்பிய பணியிடங்கள், ஒழிவிடங்கள், பணியமர்த்தங்கள் முதலியன.

**O. ஈடுபடுத்திய வல்லுநர்களும் கலந்தாய்வர்களும்:** ஆண்டில் பணியமர்த்திய வல்லுநர்கள், கலந்தாய்வர்களின் மற்றும் பதவிவிலகிய அத்தகையவர்களின் எண்ணிக்கை விவரங்கள்.

**P. வேலையமைவின் முறைப்படியான வரையீடுகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் (Terms and Conditions) அப்பால், அதிகாரஅமைப்பால் மேற்கொள்ளப்பட்ட எவையேனும் ஊழியர் நல்வாழ்வுச் செயலேற்பாடுகள்:**

**Q. வரவு-செலவுத்திட்டம் மற்றும் கணக்குகள்:**

(i) விரிவான வகையினங்களின் கீழ் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் மற்றும் திருத்திய மதிப்பீடுகள்;

(ii) பிரிவு 75 இன் (1)ஆம் உட்பிரிவின் கீழ் நிறுவப்பட்ட அசையாச்சொத்து வணிக ஒழுங்குமுறை நிதியத்தில் விரிவான வகையினங்களின் கீழ் வரவுகள்;

(iii) விரிவான வகையினங்களின் கீழ் உள்ளபடியான செலவினம்;

(iv) பிரிவு 75இன் (1)ஆம் உட்பிரிவின் கீழ் அசையாச்சொத்துவணிக நிதியத்தில் கிடைக்கத்தக்க இருப்புமீதம்;

(v) வேறு ஏதேனும் தகவல்.

**R. பன்னாட்டுக் கூட்டுறவு:** அதிகாரஅமைப்பால் மேற்கொள்ளப்பட்ட எவையேனும் பன்னாட்டுக் கூட்டுறவு இருப்பின் அதுபற்றி ஒரு சுருக்க வருணிப்புரை.

**S. அறிவுத்திறன் கட்டாக்கம்:** மேற்கொண்ட அறிவுத்திறன் கட்டாக்கத் தொடக்க முயற்சி பற்றிச் சுருக்க வருணிப்புரை:-

(i) உள்ளடக்கம், காலம், அறிவுப்புலம் போன்ற அத்தகைய நிரல் திட்டங்களின் விவரங்களுடன் அகமனை (in house)ப் பயிற்சிபெற்ற (வகையின வாரியான மற்றும் தர வாரியான) ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) உள்ளுறைவு, நிரல்திட்டப் பரிமாற்றம், ஆய்வுதவித்தொகை, படிப்பு விடுப்பு மற்றும் அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் / நிலையங்களுடன் சிறப்பு ஏற்பாடுகளா என்பதைக் குறித்துரைப்பதுடன், நிலையங்களின் பெயர்கள் மற்றும் (பயிற்சிக்) காலம் பற்றிய விவரங்களுடனும் (இந்தியாவிற்குள் மற்றும் இந்தியாவுக்கு வெளியே தனித்தனியாகவுள்ள) வெளிநிலையங்களால் பயிற்சியளிக்கப்பட்ட (வகையின வாரியான மற்றும் தரவாரியான) ஊழியர்களின் எண்ணிக்கை;

(iii) அறிவுத்திறன் கட்டாக்கத் தொடக்க முயற்சிகள் பற்றிய செலவினம்.

T. **முன்னேறிவரும் நிரல் திட்டங்கள்** (Ongoing Programmes): முன்னேறிவரும் நிரல்திட்டங்களின் ஒரு சுருக்க வருணிப்புரை.

U. **தகவல் பெறும் உரிமை:** ஒரு சுருக்க வருணிப்புரை:

(i) தகவல்பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் பெறுவதற்கு PIO/ APIO-ஆல் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை;

(ii) P10-ஆல் தகவல் வழங்கப்பட்டிருக்கிற விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

(iii) P10-விடம் முடிவுறாநிலையிலுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை;

(iv) P10-ஆணைக்கு எதிராக முதலேற்பு மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு முன்பு தாக்கல் செய்த மேல்முறையீடுகளின் எண்ணிக்கை;

(v) முதலேற்பு மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பால் தீர்வுமுறை செய்யப்பட்டிருக்கிற மேல்முறையீடுகளின் எண்ணிக்கை.

(vi) முதலேற்பு மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பிடம் முடிவுறா நிலையிலுள்ள மேல்முறையீடுகளின் எண்ணிக்கை;

(vii) நிபந்தனைவிதித்த காலச் சட்டகத்துள் (time frame) தீர்வுமுறை செய்யப்பட்டிராத விண்ணப்பங்கள்/மேல்முறையீடுகளின் எண்ணிக்கை.

*துலைவர் (கையொப்பம்)*

*உறுப்பினர்(கள்) (கையொப்பம்)*

---

**எஸ். தம்மு கணபதி,**
அரசு துணைச்செயலாளர் (வீட்டு வசதி).

---

புதுச்சேரி அரசு

## தலைமைச் செயலகம் (வீட்டுவசதி)

*[அரசு ஆணை பலவகை எண் 14/2017-Hg, புதுச்சேரி, நாள் 2017 ௵ சூலை ௴ 18 ௳.]*

### அறிவிக்கை

2016ஆம் ஆண்டு அசையாச்சொத்து வணிகம் (ஒழுங்குமுறைவிதி மற்றும் வளர்மானம்) சட்டத்தின் (16/2016) 13ஆம் பிரிவுடன் படித்துப் பொருள்கொள்ளவேண்டிய 84ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (h) பிரிவுக்கூறால் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தியும் 2ஆம் பிரிவின் (g) பிரிவுக்கூறின் (ii)ஆம் உட்பிரிவுக்கூறை அடியொற்றியும், புதுச்சேரித் துணைநிலை ஆளுநர் ஈங்கிதனால் பின்வரும் விதிகளைச் செய்கிறார், அதாவது:—

## இயல்-I

### முகவுரை

1. *குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்* .— (1) இந்த விதிகள் 2017-ஆம் ஆண்டு புதுச்சேரி அசையாச்சொத்துவணிகம் (ஒழுங்கு முறைவிதிகள் மற்றும் வளர்மானம்) (விற்பனை உடன்பாடு) விதிகள் என அழைக்கப்பெறும்.

(2) அவை புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) அவை அதிகாரமுறை அரசிதழில் அவற்றின் வெளியீட்டுத் தேதியன்றும் அது முதற்கொண்டும் செயலாற்றலுக்கு வரும்.

2. *பொருள்வரையறைகள்*.— இந்த விதிகளில் தறுவாய் பிறவாறாக வேண்டுறுத்தினாலன்றி,—

(a) 'பின்னிணைப்பு' (annexure) என்பது இந்த விதிகளுக்குப் பிற்சேர்க்கப்பட்ட ஒரு பின்னிணைப்பு எனப் பொருள்படும்.

## இயல்-II

### முகவுரை

### விற்பனை உடன்பாடு (Agreement for Sale)

3. *விற்பனை உடன்பாடு.*— (1) அசையாச்சொத்து வணிகருக்கும் ஒதுக்கீடு பெறுபவருக்கும் இடையே நிறைவேற்றப்பட வேண்டிய விற்பனை உடன்பாடு பின்னிணைப்பிலுள்ள படிவத்தில் இருக்க வேண்டும்.

(2) அடுக்குவீடு, மனைக்கட்டு அல்லது நேர்வுக்கேற்ப கட்டிடத்தின் விற்பனை உடன்பாட்டைப் நிறைவேற்றுதலுக்கும் பதிவுசெய்தலுக்கும் முன்னர் அத்தகைய அடுக்குவீடு, மனைக்கட்டு அல்லது நேர்வுக்கேற்ப, கட்டிடத்தைப் பொறுத்தமட்டில், ஒதுக்கீடுபெறுபவரால் கையொப்பமிடப்பட்ட விண்ணப்பக் கடிதம், ஒதுக்கீட்டுக் கடிதம், உடன்பாடு அல்லது வேறேதேனும் ஆவணம் எதுவும், விற்பனை உடன்பாட்டின் கீழ் அல்லது இச்சட்டம் அல்லது அதன்கீழ் செய்த விதிகள் அல்லது ஒழுங்குமுறைவிதிகளின் கீழ் ஒதுக்கீடுபெறுபவரின் உரிமைகளையும் நலன்களையும் வரம்பிடுவதாகப் பொருள்கோள் செய்யக்கூடாது.

(3) இப்படிவம், அதில் சொல்லியுள்ள அத்தகைய விவரங்களுக்கும் கூடுதலாக, தனியான இணைப்புப்பட்டியல் வடிவத்தில் கூறப்பட்ட படிவத்திற்குப் பிற்சேர்க்கையாக்கப்படலாகும் கூடுதலான ஆக்கக்கூறுகள் எவையுமிருப்பின் அவற்றையும் கொண்டிருக்க வேண்டும்.

பின்னிணைப்பு – ‘A’

(*காண்க,* விதி 3)

**விற்பனை உடன்பாடு**

இந்த விற்பனை உடன்பாடு ("உடன்பாடு") இந்த ..........................ஆம் .......................... (தேதி) நாள் ........................ மாதம் ........................ ஆண்டு அன்று பின்வருவோராலும் அவர்களுக்கு இடையேயும் எழுதி நிறைவேற்றப்பட்டது.

*(அசையாச்சொத்துவணிகர் ஒரு நிறுமம் என்றால்)*

(1956 அல்லது நேர்வுக்கேற்ப 2013ஆம் ஆண்டு) நிறுமங்கள் சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் கூட்டிணையமாக்கப்பட்ட, அதனுடைய பதிவு அலுவலகத்தை ..........................................லும், அதனுடைய கூட்டிணைப்பு (corporate) அலுவலகத்தை ..................................லும் (பான் ................................) கொண்டிருக்கிற, உரியவாறு அதிகாரமளிக்கப்பட்டு அதனுடைய அதிகாரம் பெற்ற கையொப்பக்காரரால் .................................................................. (ஆதார் எண் .................................) சார்பாண்மை செய்யப்படுகிற .................................... (CIN எண் ..........................) ஒரு நிறுமம்; பார்க்க:- ................................ தேதியிட்ட வாரியத் தீர்மானம்; இதில்இதன்பின்பு "அசையாச்சொத்துவணிகர்" எனச் சுட்டுகை செய்யப்படுவது. (இச்சொல்லமைப்பு தறுவாய்க்கு அல்லது அதன் பொருளுக்கு முரணாக இருந்தாலன்றி, அதனுடைய நலன்பெறும் பிற்போந்தவர் (successor-in-interest) நிறைவேற்றாளர்கள், ஆட்சியாளர்கள் மற்றும் இசைவுபெற்ற நொடிப்புச் சொத்தாட்சியர்கள் எனப் பொருள்தந்து உள்ளடக்குவதாகக் கொள்ளப்படும்.

*(அல்லது)*

*(அசையாச்சொத்துவணிகர் ஒரு கூட்டாண்மை நிறுவகம் என்றால்)*

1932-ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட, அதன் அலுவல்தொழில் தலைமை இடத்தை ..............................ல் (பான் ..............................) கொண்டிருக்கிற, உரியவாறு அதிகாரமளிக்கப்பட்டு அதனுடைய அதிகாரம் பெற்ற கூட்டாளியால் .............................................. (ஆதார் எண்...........................................) சார்பாண்மை செய்யப்படுகிற, ஒரு கூட்டாண்மை நிறுவகம்; பார்க்க:- ...................................; இதில் இதன்பின்பு அசையாச்சொத்துவணிகர் எனச் சுட்டுகை செய்யப்படுவது, (இந்தச் சொல்லமைப்பு தறுவாய்க்கு அல்லது அதன் பொருளுக்கு முரணாக இருந்தாலன்றி, கூறப்பட்ட நிறுவகத்தின் அப்போதைய கூட்டாளி அல்லது

கூட்டாளிகள், அவர்களில் எஞ்சியிருப்பவர் அல்லது எஞ்சியிருப்பவர்கள் மற்றும் அவர்களுடைய மரபுரிமையர்கள் (heirs), மற்றும், கடைசியாக எஞ்சியிருக்கும் கூட்டாளி மற்றும் அவருடைய/அவர்களுடைய உரிமைமாற்றளிப்புப் பெறுபவர்களின் நிறைவேற்றாளர்கள் மற்றும் ஆட்சியாளர்கள் எனப் பொருள்தந்து உள்ளடக்குவதாகக் கொள்ளப்படும்).

*(அல்லது)*

*(அசையாச்சொத்துவணிகர் தனிப்பட்ட ஒருவர் என்றால்)*

திரு/திருமதி ......................................., (ஆதார் எண் ..................................), ....................................இன் மகன்/மகள், ஏறத்தாழ .......................... வயதுள்ளவர், ........................................இல் வாழ்ந்து வருபவர், (பான் ...................................); இதில் இதன்பின்பு "அசையாச்சொத்துவணிகர்" என அழைக்கப்பெறுபவர். (இந்தச் சொல்லமைப்பு தறுவாய்க்கு அல்லது அதன் பொருளுக்கு முரணாக இருந்தாலன்றி, அவருடைய மரபுரிமையர்கள், நிறைவேற்றாளர்கள், ஆட்சியாளர்கள், நலன்பெறும் பிற்போந்தவர்கள் மற்றும் இசைவுபெற்ற நொடிப்புச் சொத்தாட்சியர்கள் எனப் பொருள்தந்து உள்ளடக்குவதாகக் கொள்ளப்படும்).

*மற்றும்*

*(ஒதுக்கீடுபெறுபவர் ஒரு நிறுமம் என்றால்)*

(1956 அல்லது நேர்வுக்கேற்ப 2013ஆம் ஆண்டு) நிறுமங்கள் சட்டத்தின் வகைமுறைகளின் கீழ்க் கூட்டிணையமாக்கப்பட்ட, அதனுடைய பதிவு அலுவலகத்தை .................................லும், அதனுடைய கூட்டிணைப்பு அலுவலகத்தை .................................லும் (பான் ....................................) கொண்டிருக்கிற, உரியவாறு அதிகாரமளிக்கப்பட்டு அதனுடைய அதிகாரம்பெற்ற கையொப்பக்காரரால் ..................................................... (ஆதார் எண் ......................................) சார்பாண்மை செய்யப்படுகிற ................................ (CIN எண் .................................) ஒரு நிறுமம்: பார்க்க:- ................................. தேதியிட்ட வாரியத் தீர்மானம்; இதில் இதன்பின்பு "ஒதுக்கீடுபெறுபவர்" எனச் சுட்டுகை செய்யப்படுவது, (இச்சொல்லமைப்பு தறுவாய்க்கு அல்லது அதன் பொருளுக்கு முரணாக இருந்தாலன்றி, அதனுடைய நலன்பெறும் பிற்போந்தவர், நிறைவேற்றாளர்கள், ஆட்சியாளர்கள் மற்றும் இசைவுபெற்ற நொடிப்புச் சொத்தாட்சியர்கள் எனப்பொருள்தந்து உள்ளடக்குவதாகக் கொள்ளப்படும்).

*(அல்லது)*

*(ஒதுக்கீடு பெறுபவர் ஒரு கூட்டாண்மை நிறுவகம் என்றால்)*

1932-ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட, அதன் அலுவல்தொழில் தலைமையிடத்தை ..............................ல் (பான் ..............................) கொண்டிருக்கிற, உரியவாறு அதிகாரமளிக்கப்பட்டு அதனுடைய அதிகாரம் பெற்ற கூட்டாளியால் ............................................... (ஆதார் எண்............................) சார்பாண்மை செய்யப்படுகிற ............................ (CIN எண் ..........................................................) ஒரு கூட்டாண்மை நிறுவகம்; பார்க்க:- .................................................................... இதில் இதன்பின்பு, ஒதுக்கீடுபெறுபவர் எனச் சுட்டுகை செய்யப்படுவது, (இச்சொல்லமைப்பு தறுவாய்க்கு அல்லது அதன் பொருளுக்கு முரணாக இருந்தாலன்றி, கூறப்பட்ட நிறுவகத்தின் அப்போதைய கூட்டாளி அல்லது கூட்டாளிகள், அவர்களில் எஞ்சியிருப்பவர் அல்லது எஞ்சியிருப்பவர்கள் மற்றும் அவர்களுடைய மரபுரிமையர்கள், மேலும் கடைசியாக எஞ்சியிருக்கும் கூட்டாளி மற்றும் அவருடைய/அவர்களுடைய உரிமைமாற்றளிப்புப் பெறுபவர்களின் நிறைவேற்றாளர்கள் மற்றும் ஆட்சியாளர்கள் எனப் பொருள்தந்து உள்ளடக்குவதாகக் கொள்ளப்படும்.

*(அல்லது)*

*(ஒதுக்கீடுபெறுபவர் தனிப்பட்ட ஒருவர் என்றால்)*

திரு/திருமதி ..........................................., (ஆதார் எண். ................................ இன் மகன்/மகள், ஏறத்தாழ .................................................... வயதுள்ளவர், ...........................................இல் வாழ்ந்துவருபவர் ............................................... (பான் ....................................................................). இதில் இதன்பின்பு "ஒதுக்கீடுபெறுபவர்" என அழைக்கப்பெறுபவர்; (இந்தச் சொல்லமைப்பு தறுவாய்க்கு அல்லது அதன் பொருளுக்கு முரணாக இருந்தாலன்றி, அவருடைய மரபுரிமையர்கள், நிறைவேற்றாளர்கள், ஆட்சியாளர்கள், நலன்பெறும் பிற்போந்தவர்கள் மற்றும் இசைவுபெற்ற நொடிப்புச் சொத்தாட்சியர்கள் எனப் பொருள்தந்து உள்ளடக்குவதாகக் கொள்ளப்படும்.

*(அல்லது)*

*(ஒதுக்கீடுபெறுபவர் ஒரு இந்து கூட்டுக் குடும்பம் (HUF) என்றால்)*

திரு. ....................................... (ஆதார் எண். .........................................) .....................................ன் மகன், ஏறத்தாழ ....................................... வயதுள்ளவர். தனக்காகவும், ............................................ இந்து கூட்டுக் குடும்பம் (HUF) என அறியப்படும் இந்துக் கூட்டு மிதாட்சரக் குடும்பத்தின் கர்த்தா எனும் நிலையிலும், அதன் அலுவல்தொழில்/உறைவிடத்தை ...........................ல் கொண்டிருப்பவர்; "இதில்இதன்பின்பு ஒதுக்கீடுபெறுபவர்" எனச் சுட்டுகை செய்யப்படுபவர், (இந்தச் சொல்லமைப்பு தறுவாய்க்கு மற்றும் அதன் பொருளுக்கு முரணாக இருந்தாலன்றி, கூறப்பட்ட-HUF-இன் அப்போதைய உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் மற்றும் அவரவர்க்குரிய மரபுரிமையர்கள், நிறைவேற்றாளர்கள், ஆட்சியாளர்கள், மற்றும் இசைவுபெற்ற நொடிப்புச் சொத்தாட்சியர்கள் எனப் பொருள்தந்து உள்ளடக்குவதாகக் கொள்ளப்படும்). (ஒருவருக்கு மேற்பட்ட ஒதுக்கீடுபெறுபவர் இருக்கும் நேர்வில், ஏனைய ஒதுக்கீடுபெறுபவர்(கள்) விவரங்களையும் புகுத்திடுக).

அசையாச்சொத்துவணிகர் மற்றும் ஒதுக்கீடுபெறுபவர் இதில் இதன் பின்பு கூட்டுநிலையில் 'சார்பினர்கள்' என்றும், தனிநிலையில் 'சார்பினர்' என்றும் சுட்டுகை செய்யப்படுவார்கள்.

*பொருள் வரையறைகள்*.— (1) இந்த விற்பனை உடன்பாட்டு நோக்கத்திற்காக, தறுவாய் பிறவாறு வேண்டுறுத்தினாலன்றி,–

(a) "சட்டம்" என்பது, 2016ஆம் ஆண்டு அசையாச்சொத்துவணிகம் (ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் வளர்மானம்) சட்டம் (16/2016) எனப் பொருள்படும் ;

(b) "உரிய அரசு" என்பது, புதுச்சேரி அரசு எனப்பொருள்படும்;

(c) "உள்ளூர்ச் சட்டங்கள்" என்பது, புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்குப் பொருந்தத்தக்க சட்டங்கள் எனப்பொருள்படும் ;

(d) "கையுடைமைச் சான்றிதழ்" (Occupancy Certificate) என்பது, 2012-ஆம் ஆண்டு புதுச்சேரி கட்டிடங்கள் துணை விதிகள் மற்றும் மண்டலநலக்காப்பு (Zoning) ஒழுங்குமுறைவிதிகள் அவ்வப்போது திருத்தியமைத்ததற்கு இணங்கியவாறு திட்டமிடும் அதிகாரஅமைப்பால் வழங்கப்பட்ட கையுடைமைச் சான்றிதழ் எனப் பொருள்படும;

(e) "திட்டமிடும் அதிகாரஅமைப்பு" (Planning Authority) என்பது, 1969ஆம் ஆண்டு புதுச்சேரி நகர மற்றும் கிராமத் திட்டமிடுகைச் சட்டத்தின் (13/1970) 11ஆம் பிரிவின் கீழ் நிறுவிய திட்டமிடும் அதிகாரஅமைப்பு எனப் பொருள்படும்;

(f) "ஒழுங்குமுறைவிதிகள்" என்பது, 2016-ஆம் ஆண்டு அசையாச்சொத்து வணிகம் (ஒழுங்குமுறை மற்றும் வளர்மானம்) சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் எனப் பொருள்படும்;

(g) "விதிகள்" என்பது, 2017-ஆம் ஆண்டு அசையாச் சொத்துவணிகம் (ஒழுங்குமுறைவிதி மற்றும் வளர்மானம்) சட்டத்தின் கீழ்ச் செய்த அசையாச்சொத்துவணிகம் (ஒழுங்குமுறைவிதி மற்றும் வளர்மானம்) (பொது) விதிகள் எனப் பொருள்படும்; மற்றும்

(h) "பிரிவு" என்பது சட்டத்தின் ஒரு பிரிவு எனப் பொருள்படும்.

(2) இத்தகைய உடன்பாட்டில் பயன்படுத்தப்பட்ட, ஆனால் வரையறுக்கப்படாமல் உள்ள சொற்களும் சொல்லமைப்புகளும், இச்சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளில் அவற்றிற்குக் குறித்தளித்த அவ்வவற்றிற்குரிய அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(A) அசையாச்சொத்துவணிகர் (மனைக்கட்டு எண் ......................, (அமைவிடம்), ஆர்.எஸ்.எண்/டி.எஸ்.எண். ............................................., நகரத் தொகுதி ................................., தொகுப்பு ...................................., கிராமம் .........................................., நகராட்சி/கொம்யூன் பஞ்சாயத்து ............................................., வட்டாரம் .................................................)இல், மொத்தத்தில் ................................... சதுர மீட்டர் கொண்ட "மேற்சொன்ன நிலத்திற்கு" முழுவுரிமையுடையவராக மற்றும் சட்டப்படி சொந்தக்காரராக இருக்கிறார் என்பதால்; பார்க்க:-, ......................ன் சார்பதிவாளர் அலுவலகத்தில் ............................................ எண்ணுள்ள ஆவணங்களாகப் பதியப்பட்டுள்ள ............................................ தேதியிட்ட விற்பனை ஒப்பாவ(ணம்/ணங்கள்) ;

*அல்லது*

.......................................................... ("சொந்தக்காரர்") (மனைக்கட்டு எண் ............................................................, (அமைவிடம்), ஆர்.எஸ்.எண்/ டி.எஸ்.எண். ......................................, நகரத்தொகுதி .............................., தொகுப்பு ............................................ கிராமம் ............................................, நகராட்சி/கொம்யூன் பஞ்சாயத்து ................................................, வட்டாரம் ......................................)இல், மொத்தத்தில் ..................................... சதுர மீட்டர் கொண்ட "மேற்சொன்ன நிலத்திற்கு" முழுவுரிமையுடையவராக மற்றும் சட்டப்படி சொந்தக்காரராக இருக்கிறார்; பார்க்க:- ................ன் சார்பதிவாளர் அலுவலகத்தில் ............................................ எண்ணுள்ள ஆவணங்களாகப் பதியப்பட்டுள்ள விற்பனை ஒப்பாவணம். நிலத்தின் சொந்தக்காரரும் அசையாச் சொத்து வணிகரும் .................................. சார் பதிவாளர் அலுவலகத்தில் எண் .................... கொண்டு ...................... தேதியிட்ட ஆவணமாகப் பதிவு செய்யப்பட்ட (ஒருங்குழைப்பு/ வளர்மானம்/கூட்டு வளர்மான) உடன்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறார்கள்;

(B) மேற்சொன்ன நிலமானது, ............................................ பலமாடி அடுக்குவீடு கட்டிடங்களைக் மற்றும் (செயல்திட்டங்களின் வேறு பகுதிக் கூறுகள் புகுத்திடுக) கொண்டிருப்பதும் (குடியிருப்பு/கலப்பு/ வர்த்தக/வேறேதேனும் நோக்கத்திற்கானதுமான) செயல்திட்டம் ஒன்றைக் கட்டும் நோக்கத்திற்காகக், தனித்துக் குறியிடப்படுகிறது. மேலும் மேற்சொன்ன செயல்திட்டம் '.....................................................' ("செயல்திட்டம்") என அறியப்பெறும்;

*(அல்லது)*

மேற்சொன்ன நிலமானது, ..................................... மனைக்கட்டுகளைக் கொண்டிருப்பதும் மற்றும் (செயல்திட்டங்களின் வேறு பகுதிக்கூறுகள் புகுத்திடுக) (குடியிருப்பு / கலப்பு / வர்த்தக / வேறேதேனும் நோக்கத்திற்கானதுமான) செயல்திட்டம் ஒன்றின் மனைக்கட்டுப்பிரிப்பு வளர்மான நோக்கத்திற்காக தனித்துக் குறியிடப்படுகிறது; மேலும், மேற்சொன்ன செயல்திட்டம் "......................................................" ("செயல்திட்டம்") என அறியப்பெறும்:

ஆனால், நிலமானது ஏதேனும் நிலையத்தின் வளர்மானத்திற்காகத் தனித்துக்குறியிடப்படுகிறது எனுமிடத்து, அது அத்தகைய நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்; மற்றும்

வர்த்தக/குடியிருப்பு வளர்மானம் எதுவும், திட்டமிடும் அதிகாரஅமைப்பால் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக அது இருக்கிறது என்றாலன்றி, அனுமதிக்கப்படக்கூடாது.

(C) அசையாச்சொத்துவணிகர், இந்த உடன்பாட்டைச் செய்துகொள்ள முழுத் தகுதிறமுடையவர் ஆவார்; மற்றும் செயல்திட்டம் எந்த நிலத்தின் மீது கட்டப்பட வேண்டுமா அந்த நிலத்தைப் பற்றிய அசையாச்சொத்துவணிகரின் உரிமை, உரிமைமூலம், நலன் ஆகியவை பொறுத்தமட்டில், அனைத்துச் சட்ட முறைமைகளும் முடிக்கப் பட்டிருக்கின்றன (உரிமைமூல ஒப்பாவணம் மற்றும் உரிமைமூலத் தொடர்ச்சி ஆவணங்கள், இணைப்புப்பட்டியல் I-இல் இதற்குப் பின்னிணைப்பாகவுள்ளன);

(D) ............................................ திட்டமிடும் அதிகாரஅமைப்பு இச்செயல்திட்ட வளர்மானத்திற்கு இசைவளிப்பு வழங்கியிருக்கிறது; பார்க்க:- கட்டிட இசைவாணைச்சீட்டு எண் ...................................... கொண்ட ................................................................ தேதியிட்ட ஒப்புதலளிப்பு (F இணைப்புப்பட்டியலில் இதற்குப் பின்னிணைக்கப்பட்டுள்ளது);

(E) அசையாச்சொத்துவணிகர் ........................................... அதிகார அமைப்பிடமிருந்து அறுதியான அமைப்புவிவரத் திட்டம், ஒப்பளித்த திட்டம், தனிக்குறிப்பீடுகள் மற்றும் செயல்திட்டத்திற்கான, அத்துடன் அடுக்குவீடு, மனைக்கட்டு அல்லது நேர்வுக்கேற்ப, கட்டிடத்திற்கான ஒப்புதலளிப்புகளைப் பெற்றிருக்கிறார். (G இணைப்புப்பட்டியலில் இதற்குப் பின்னிணைக்கப்பட்டவை). அசையாச்சொத்துவணிகர், இத்தகைய ஒப்புதலளிப்புத் திட்டங்களுக்கு மாற்றங்கள் எவற்றையும் செய்யாமல், சட்டத்தின் 14ஆம் பிரிவு மற்றும் பொருந்தத்தக்க பிற சட்டங்களுக்கு இணங்கியவாறு வரம்புமீறாமல் இணக்கமாகநடந்து இச்செயல்திட்டம் நிறைவேற்றப்படும் என உடன்பட்டு ஏற்புறுதி செய்கிறார்;

(F) அசையாச்சொத்துவணிகர், பதிவு எண். .............................. கீழ் ............................................ அன்று ............................................ல் அசையாச் சொத்துவாணிக ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பிடம் சட்டத்தின் வகைமுறைகளின் கீழ்ச் செயல்திட்டத்தைப் பதிவு செய்திருக்கிறார். (H இணைப்புப் பட்டியலில் இத்துடன் பின் இணைக்கப்பட்டது);

(G) ஒதுக்கீடுபெறுபவர் செயல்திட்டத்தில் ஒரு அடுக்குவீட்டுக்காக விண்ணப்பித்திருந்தார். பார்க்க, விண்ணப்ப எண். .................................. தேதி ........................................... மற்றும் (கோபுரம்/தொகுப்பு/கட்டிடம்) எண். ............................................ ("கட்டிடம்") ............................................ தளம் ............................................ல் ............................................ வகை ............................................ சதுரஅடிகள் தரைத்தளப் பரப்பிடத்தைக் கொண்டிருக்கும் அடுக்குவீடு எண். ............................................, ............................................ல், ............................................ சதுரஅடிகள் அளவு கொண்டிருக்கும் ஊர்திக்கொட்டில் / மேல்மூடிய நிறுத்துமிடத்துடன் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (பொருந்தத்தக்க சட்டம் மற்றும் சட்டத்தின் 2ஆம் பிரிவின் (n) பிரிவுக்கூறின் கீழ் வரையறுத்தவாறு பொதுப்பரப்பிடங்களில் சரிசம அளவுப்பங்கு (prorata) ("பொதுப்பரப்பிடங்கள்")இன் கீழ் இசைவளித்தவாறு ஊர்திக்கொட்டில் / மேல்மூடிய நிறுத்துமிடத்தின் அமைவிடத்தைப் புகுத்திடுக. "அடுக்கு வீடு" என மிகக்குறிப்பாக A இணைப்புப்பட்டியலில் விளக்கப்பட்டு இதில்இதன்பின்பு சுட்டப்படுகிறது மற்றும் அடுக்குவீட்டுத் தளத் திட்டம் இத்துடன் இணைக்கப்பட்டு B இணைப்புப்பட்டியில் எனக் குறியிடப்படுகிறது);

*(அல்லது)*

ஒதுக்கீடுபெறுபவர் செயல்திட்டத்தில் ஒரு மனைக்கட்டுக்காக விண்ணப்பித்திருந்தார்., பார்க்க:- விண்ணப்ப எண். .............................., தேதி ....................................; மற்றும் ................................. சதுரஅடிகள் பரப்பிடம் கொண்டிருக்கும் மனைக்கட்டு எண். ................................. மற்றும் (பொருந்தத்தக்க சட்டம் மற்றும் சட்டத்தின் 2ஆம் பிரிவின் (n) பிரிவுக்கூறின் கீழ் வரையறுத்தவாறு பொதுப்பரப் பரப்பிடங்களில் சரிசம அளவுப் பங்கு ("பொதுப்பரப்பிடங்கள்") இன் கீழ் இசைவளித்தவாறு ............................................ல் ஊர்திக்கொட்டில்/ மேல்மூடிய நிறுத்துமிடத்தின் அமைவிடத்தைப் புகுத்திடுக. ............................................ சதுரஅடிகள் அளவு கொண்டிருக்கும் ஊர்திக்கொட்டில் / மேல்மூடிய நிறுத்துமிடத்திற்காக (பொருந்தத்தக்கது என்றால்) மனைக்கட்டு ஒதுக்கிக்கொடுக்கப்பட்டிருக்கிறது; "மனைக்கட்டு" என மிகக் குறிப்பாக A இணைப்புப்பட்டியலில் விளக்கப்பட்டு இதில்இதன்பின்பு சுட்டுகை செய்யப்படுகிறது) ;

(H) சார்பினர்கள் இந்த உடன்பாட்டில் விரித்துரைத்த அனைத்து வரையீடுகளையும் வரைக்கட்டுகளையும் துருவியாராய்ந்திருக்கிறார்கள் மற்றும் இதில் விவரித்த ஒருவருக்கொருவர் பரிமாற்ற உரிமைகளையும் கடமைப் பொறுப்புகளையும் புரிந்து கொண்டிருக்கிறார்கள்;

(I) ..................................................................(கூடுதலாக வெளிப்படுத்த வேண்டியவை/விவரங்கள் எவற்றையும் பதிவு செய்க) ;

(J) சார்பினர்கள் இச்செயல்திட்டத்திற்குப் பொருந்தத்தக்க சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைவிதிகள், அறிவிக்கைகள் முதலிய அனைத்தையும் பற்றிய முழுமையான அறிவுடன் இந்த உடன்பாட்டில் கையொப்பமிடுகிறார்கள் என ஈங்கிதனால் உறுதிப்படுத்துகிறார்கள் ;

(K) இந்த உடன்பாட்டில் இணைத்துள்ள வரையீடுகள், வரைக்கட்டுகள், நிபந்தனைகள் அனைத்தையும் மற்றும் பொருந்தத்தக்க சட்டங்கள் அனைத்தையும் உண்மையுடன் போற்றி ஒழுகுவதாக ஒருவருக்கொருவரின் உறுதிப்பாடுகள், சார்பாண்மைகள் மற்றும் காப்புறுதிகளை ஆதாரமாகக்கொள்ளும் சார்பினர்கள், இப்போது, இதில்இதன்பின்பு தோன்றும் வரையீடுகள் மற்றும் வரைக்கட்டின் மீது இந்த உடன்பாட்டைச் செய்துகொள்ள விரும்புகிறார்கள்;

(L) இந்த உடன்பாட்டில் விரித்துரைத்த வரையீடுகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு இணங்கியவாறும், சார்பினர்களாலும் அவர்களுக் கிடையேயும் ஒருவருக்கொருவர் உடன்பட்டவாறும், மேற்சொன்ன (அடுக்குவீடு / மனைக்கட்டு) மற்றும் (பொருந்தத்தக்கது என்றால்) ஊர்திக்கொட்டில் / மேல்மூடிய பரப்பிடத்தை, G பத்தியில் குறித்துரைத்தவாறு அசையாச்சொத்துவணிகர் ஈங்கிதனால் விற்க உடன்படுகிறார் மற்றும் ஒதுக்கீடுபெறுபவர் ஈங்கிதனால் வாங்க உடன்படுகிறார்;

*ஆதலால், இப்போது இதில் அடங்கியுள்ள ஒருவருக்கொருவரின் சார்பாற்றங்கள், இணக்கஒப்பந்தங்கள், காப்புறுதிகள், உறுதிமொழிகள், உடன்பாடுகள் ஆகியவற்றின் மறுபயனாக, மற்றும் வேறு நன்மையும் மதிப்பும் கொண்ட மறுபயனாக, இங்குள்ள சார்பினர்கள் ஈங்கிதனால் பின்வருமாறு உடன்படுகிறார்கள்:*

1. *வரையீடுகள் (Terms)*.— (1.1) இந்த உடன்பாட்டில் விவரித்தபடி வரையீடுகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு, G பத்தியில் குறித்துரைத்தபடி (அடுக்கு வீடு/மனைக்கட்டை) அசையாச்சொத்து வணிகர் ஒதுக்கீடுபெறுபவருக்கு விற்க உடன்படுகிறார் மற்றும் ஒதுக்கீடுபெறுபவர் வாங்க உடன்படுகிறார்;

(1.2) தரைத்தளப் பரப்பிடத்தின் அடிப்படையில் இந்த (அடுக்குவீடு/மனைக்கட்டு)க்கான மொத்த விலை ₹ ........................ (ரூபாய் ............................ ................................................ மட்டுமே) [("மொத்தவிலை") (பிரிமானக்கூறையும் விவரிப்பையும் தருக):

| | |
|---|---|
| தொகுப்பு / கட்டிடம் / கோபுரம் எண். ..................<br>அடுக்கு வீடு எண். ..................<br>வகை ..................<br>தளம் .................. | அடுக்கு வீட்டின் ஒரு சதுர மீட்டருக்கான விலை வீதம் * |
| | |
| மொத்த விலை (ரூபாயில்) .................. | |

* அடுக்குவீட்டின் விலை, தனியொதுக்க மேன்மாடம் அல்லது தாழ்வாரப் பரப்பிடங்கள் விலை, தனியொதுக்க மொட்டைமாடித் திறந்தவெளிப் பரப்பிடங்கள் விலை, பொதுப் பரப்பிடங்களின் அளவொத்த விலை, முன்னுரிமை அமைவிடக் கட்டணங்கள், வரிகள், 11 ஆம் பத்திக்கு ஏற்ப பேணுகைச் செலவீடுகள் முதலியன போன்று பொருந்தத்தக்கதென்றால், அத்தகைய தொகைகளின் பிரிமானக்கூறுக்கு வகை செய்க.

(மற்றும்)

[பொருந்தத்தக்க (தென்றால்/வாறு)]

| | |
|---|---|
| ஊர்திக்கொட்டில் / மேல்மூடிய நிறுத்துமிடம்-1 | 1-க்கான விலை |
| ஊர்திக்கொட்டில் / மேல்மூடிய நிறுத்துமிடம்-2 | 2-க்கான விலை |
| | |
| மொத்த விலை (ரூபாயில்) .................. | |

(அல்லது)

| | |
|---|---|
| மனைக்கட்டு எண். .................................... | மனைக்கட்டின் ஒரு சதுர அடிக்கு விலை |
| வகை .................................................... | |
| | |
| மொத்த விலை (ரூபாயில்) .................................... | |

* மனைக்கட்டு விலை, பொதுப் பரப்பிடங்களின் அளவொத்த விலை, வரிகள், 11-ஆம் பத்திக்கு ஏற்பப் பேணுகைச் செலவீடுகள், முதலியன போன்று அத்தகைய தொகைகளின் பிரிமானக்கூறுக்கு வகை செய்க.

(மற்றும்)

(பொருங்கக்கக்க [கென்றால் / வாரி])

| | |
|---|---|
| ஊர்திக்கொட்டில் / மேல்மூடிய நிறுத்துமிடம்-1 | 1-க்கான விலை |
| ஊர்திக்கொட்டில் / மேல்மூடிய நிறுத்துமிடம்-2 | 2-க்கான விலை |
| | |
| மொத்த விலை (ரூபாயில்) .................................... | |

*விளக்கம்:*

(i) மேலுள்ள மொத்த விலையானது, (அடுக்குவீடு/மனைக்கட்டு) வகையில் அசையாச்சொத்து வணிகருக்கு ஒதுக்கீடுபெறுபவரால் செலுத்தப்பட்ட முன்பதிவுத் தொகையையும் உள்ளடக்கும்;

(ii) கையுடைமைச் சான்றிதழைப் பெற்ற பின்பு ஒதுக்கீடு பெறுபவர்களுக்கு (அடுக்குவீடு/மனைக்கட்டு) இன் உடைமையை அல்லது ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கம் அல்லது நேர்வுக்கேற்ப தகுதிறமுள்ள அதிகாரஅமைப்புக்குச் செயல்திட்டத்தின் உடைமையைக் கையளிக்கும் தேதிவரையிலான (அசையாச்சொத்து வணிகரால் செலுத்தத்தக்க செயல்திட்டக் கட்டுமானம் தொடர்புடைய மதிப்புக் கூட்டு வரி, பணிச்சேவை வரி, மற்றும் மேல்வரி அல்லது எப்பெயரில் அழைக்கப்பட்டாலும் விதிக்கப்படலாகும் அதுபோன்ற வேறு எவையேனும் வரிகள் வழியே அசையாச்சொத்து வணிகரால் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தத்தக்க வரிகளைக் கொண்டிருக்கும்) வரிகளை உள்ளடக்கும்:

ஆனால், வரிகளில் மாற்றம்/மாற்றமைவு (Change/Modification) எதுவும் இருக்கும் நேர்வில், அசையாச்சொத்து வணிகருக்கு ஒதுக்கீடு பெறுபவரால் பிந்தியநிலையில் செலுத்தத்தக்க தொகையானது, அத்தகைய மாற்றம்/மாற்றமைவு அடிப்படையில் மிகுவிக்க/குறைக்கப்பட வேண்டும்:

மேலும், அதிகாரஅமைப்புடன் பதிவுசெய்தலுக்கு ஏற்றவாறு, செயல்திட்ட முடிப்புக்கான காலங்குறித்த தேதி முடிவுற்ற பின்பு வரிகளில் மிகுவிப்பு எதுவும் இருக்கிறது, அது சட்டத்திற்கு ஏற்ப அதிகாரஅமைப்பால் கூறப்பட்ட செயல்திட்டத்திற்கு வழங்கப்பட்ட பதிவு நீட்டிப்பு எதுவுமிருப்பின் அது வழங்கப்படுவதை உள்ளடக்குகிறது என்றால், அது ஒதுக்கீடுபெறுபவர் பேரில் சார்த்தப்படக் கூடாது மற்றும் அசையாச்சொத்து வணிகர் அதை ஏற்க வேண்டும்.

(iii) அசையாச்சொத்துவணிகர் மேலுள்ள (i) இல் உரைத்தவாறு செலுத்தத்தக்க தொகையை ஒதுக்கீடுபெறுபவருக்கு எழுத்துருவில் காலமுறைதோறும் தெரிவிக்க வேண்டும் மற்றும் ஒதுக்கீடுபெறுபவர் அசையாச்சொத்து வணிகரால் கோரப்பட்ட செலுத்தத்தை, அதில் உடன்பாடு கொண்ட நேரத்திற்குள்ளும் குறித்துரைத்த முறையிலும் செய்ய வேண்டும். அதற்கும் கூடுதலாக, அசையாச்சொத்து வணிகர், அத்தகைய வரிகள்/விதிப்புகள் முதலியன எந்தத் தேதிகளிலிருந்து விதிக்கப்படுகின்றனவோ/செயல்விளைவு கொண்டிருக்கின்றனவோ அந்தத் தேதிகளுடன், செய்சட்டங்கள்/விதிகள்/அறிவிக்கைகளுடன் சேர்த்து, செலுத்திய அல்லது கோரிய வரிகளின் விவரங்களை ஒதுக்கீடுபெறுபவருக்குக் கொடுக்க வகைசெய்ய வேண்டும்;

(iv) [அடுக்குவீடு/மனைக்கட்டு] இன் மொத்த விலையானது, நிலத்தின் விலை, (அடுக்குவீடு மட்டுமல்லாமல் மற்றைய) பொதுப் பரப்பிடங்களின் கட்டுமானம், உட்புற வளர்மானச் செலவீடுகள், வெளிப்புற வளர்மானச் செலவீடுகள், வரிகள், அடுக்குவீட்டுக்கு மின்கம்பி அமைத்தல் மற்றும் மின் இணைப்பு பெறுதலுக்கான செலவுத்தொகை, மின்தூக்கி, நீர்க்குழாய் அமைப்பு, வண்ணம் பூசி முடித்தல், தரையிடுதல், கதவுகள், பலகணிகள், பொதுப் பரப்பிடங்களில் தீப்பிடிப்பைப் கண்டுபிடிக்கும் தீயணைப்புக் கருவிகள், 11-ஆம் பத்திக்கேற்பப் பேணுகைச் செலவீடு முதலியவற்றுக்கான

செலவுத்தொகை வசூலிப்பதை உள்ளடக்கும் மற்றும் [அடுக்குவீடு/ மனைக்கட்டு] மற்றும் செயல்திட்டத்திற்குள் வகைசெய்யப்பட வேண்டிய அனைத்து வசதிவாய்ப்புகள், வசதிநலங்கள், தனிக் குறிப்பீடுகள் ஆகியவற்றை வகைசெய்வதற்கான செலவுத்தொகையையும் உள்ளடக்கும்;

(1.3) மொத்த விலையானது, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்புக்குச் செலுத்தத்தக்க வளர்மானச் செலவீடுகள் பொருட்டு மிகுவிப்புக் காரணமான மிகுவிப்பை, மற்றும்/அல்லது அவ்வப்போது தகுதிறமுள்ள அதிகார அமைப்பால் விதிக்கப்படலாகும் அல்லது சுமத்தப்படலாகும் வேறேதேனும் செலவீடுகளின் மிகுவிப்பைச் செலுத்த ஒதுக்கீடுபெறுபவர் ஈங்கிதனால் உடன்படுகிற மிகுவிப்புகள் அல்லாமலும் தவிரவும், படிப்படியான மிகுவிப்புகளின்றித் தன்னியல்புடன் (escalation – free) இருக்கிறது. வளர்மானச் செலவீடுகள், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்புகளால் சுமத்தப்பட்ட செலவுத்தொகை/ செலவீடுகளில் மிகுவிப்புக்காக அசையாச் சொத்து வணிகர் ஒரு கோரிக்கையை ஒதுக்கீடுபெறுபவர் பேரில் எழுப்புங்கால், அதன் செயல்விளைவுக்காக கூறப்பட்ட அறிவிக்கை/ஆணை/விதி/ ஒழுங்குமுறைவிதியை ஒதுக்கீடுபெறுபவருக்கு அளிக்கப்படுவதற்கான கோரிக்கைக் கடிதத்துடன் சேர்த்திணைக்க அசையாச்சொத்து வணிகர் பொறுப்பேற்கிறார் மற்றும் உடன்படுகிறார்:

ஆனால், அதிகாரஅமைப்புடன் பதிவுசெய்தலுக்கு ஏற்றவாறு, செயல்திட்ட முடிப்புக்கான காலங்குறித்த தேதி முடிவுற்ற பின்பு, எவையேனும் வளர்மானச் செலவுகளில் மிகுவிப்பு இருக்கிறது, அது சட்டத்திற்கேற்ப கூறப்பட்ட செயல்திட்டதிற்கு அதிகாரஅமைப்பால் பதிவு நீட்டிப்பு எதுவுமிருப்பின் அது வழங்கப்படுவதை உள்ளடக்குகிறது என்றால், அது ஒதுக்கீடுபெறுபவரின் பேரில் சார்த்தப்படக் கூடாது மற்றும் அசையாச்சொத்து வணிகர் அதைச் சுமக்க வேண்டும்;

(1.4) ஒதுக்கீடுபெறுபவர்(கள்) C இணைப்புப்பட்டியலில் ("செலுத்துகைத் திட்டம்") விரித்துரைத்த செலுத்துகைத் திட்டத்திற்கேற்பச் செலுத்தத்தைச் செய்ய வேண்டும்.

(1.5) அசையாச்சொத்து வணிகர், தமது ஒற்றை உளத்தேர்வுப்படி, அந்தந்தத் தவணைகள் முன்கூட்டியே செலுத்தப்பட்டிருக்கிற காலஅளவுக்கு ஆண்டொன்றுக்கு ..................................... விழுக்காட்டு வீதத்தில் அத்தகைய

மிக முக்கிய செலுத்தங்களுக்குக் கழிவுத்தொகை தருவதன் வாயிலாக, ஒதுக்கீடுபெறுபவரால் செலுத்தத்தக்க மிக முந்திய தவணைச் செலுத்தங்களுக்கான ஒரு கழிவுத் தொகைக்கு இடங்கொடுக்கலாம், மற்றும் அசையாச் சொத்து வணிகரால் ஒதுக்கீடுபெறுபவருக்கு ஒரு தடவை வழங்கிய அத்தகைய கழிவுத்தொகை மற்றும் கழிவுத்தொகை வீதத்திற்கு இடம் கொடுக்கும் வகைமுறையானது, மறுஆய்வு/பின்வாங்கிக் கொள்ளல் எதற்கும் உட்படுத்தப்படக் கூடாது.

(1.6) அடுக்குவீடு, மனைக்கட்டு அல்லது நேர்வுக்கேற்ப கட்டிடம் பொறுத்தமட்டில் விற்பனை செயல்விளைவு கொள்வதன் அடிப்படையில் விளம்பரம், விவரக்கையேடு முதலியவற்றுடன் இணக்கமாக இருக்க வேண்டிய ஒப்பளித்த செயல்திட்டங்கள், அமைப்புவிவரச் செயல்திட்டங்கள் (இதிலுள்ள G இணைப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டது) மற்றும் தனிக்குறிப்பீடுகள் மற்றும் இதில் D இணைப்புப்பட்டியலிலும் E இணைப்புப்பட்டியலிலும் விளக்கப்பட்ட பதிபொருள்கள், பொருத்துமானங்கள், வசதிநலன்களின் இயல்பு ஆகியவற்றில், சட்டவகைமுறைகளுக்கு ஏற்ப ஒதுக்கீடுபெற்றவரின் எழுத்துருவில் முன்இசைவளிப்பின்றி, அசையாச்சொத்து வணிகர் எவையேனும் சேர்மானங்களையும் மாற்றமைப்புகளையும் செய்யக்கூடாது; ஆனால் அசையாச்சொத்துவணிகர் ஒதுக்கீடுபெறுபவரால் வேண்டுறுத்தப்படலாகும் அத்தகைய சிறு சேர்மானங்கள் அல்லது மாற்றமைப்புகளை, அல்லது சட்ட வகைமுறைகளுக்கு ஏற்ப அத்தகைய சிறு மாற்றங்கள் அல்லது மாற்றமைப்புகளைச் செய்யலாம் என உடன்பாடு கொள்ளப்படுகிறது.

(1.7) *(ஓர் அடுக்குவீடு நேர்வில் பொருந்தத்தக்கது).—* அசையாச்சொத்து வணிகர் கட்டிடத்தின் கட்டுமானம் முடிந்த பின்பும், விரிப்புமூடிய பரப்பிடத்தில் மாற்றங்கள் எவையுமிருப்பின் அவற்றின் விவரங்களை முன்னளித்ததன் மூலம் திட்டமிடும் அதிகாரஅமைப்பால் வழங்கப்படுகிற கையுடைமைச் சான்றிதழுக்குப் பின்பும் ஒதுக்கீடுபெறுபவருக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிற அறுதியான விரிப்புமூடிய பரப்பிடத்தை உறுதிசெய்ய வேண்டும். விரிப்புமூடிய பரப்பிடத்திற்காகச் செலுத்தத்தக்க மொத்தவிலை, அசையாச்சொத்து வணிகரின் உறுதிப்பாட்டின் பேரில் மறு-கணக்கிடப்பட வேண்டும். விரிப்புமூடிய பரப்பிடத்தில் குறைப்பு இருக்கிறதென்றால், அப்போது, அசையாச்சொத்து

வணிகர், ஒதுக்கீடுபெறுபவரால் அத்தகையதொரு மிகைத் தொகை செலுத்தப்பட்ட தேதியிலிருந்து விதிகளில் குறித்துரைத்த வீதத்தில் ஆண்டு வட்டியுடன் நாற்பத்தைந்து நாட்களுக்குள் ஒதுக்கீடுபெறுநரால் செலுத்தப்பட்ட அத்தகைய மிகைத் தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஒதுக்கீடுபெறுபவருக்கு ஒதுக்கிக்கொடுத்த விரிப்புமூடிய பரப்பிடத்தில் மிகுவிப்பு எதுவும் இருக்கிறது, அது ஒதுக்கீடுபெறுபவருக்கு ஒதுக்கிக்கொடுத்த அடுக்குவீட்டின் விரிப்புமூடிய பரப்பிடத்தின் மூன்று விழுக்காட்டுக்கு மேற்படவில்லை என்றால், அசையாச் சொத்து வணிகர் C இணைப்புப்பட்டியலில் வகைசெய்துள்ளவாறு செலுத்துகைத் திட்டத்தின் அடுத்த கட்டத்திற்கு ஏற்ப, ஒதுக்கீடுபெறுபவரிடமிருந்து கோரலாம். இத்தகைய பணச்சரிக்கட்டுதல்கள் அனைத்தும் இந்த உடன்பாட்டின் 1.2 ஆம் பத்தியில் உடன்பட்டவாறு, ஒரு சதுரமீட்டருக்கான அதே வீதத்தில் செய்யப்பட வேண்டும்.

(1.8) பத்தி 9.3-க்கு உட்பட்டு, ஒதுக்கீடுபெறுபவர் அடியில் சொல்லியுள்ளவாறு (அடுக்குவீடு/மனைக்கட்டு)க்கு உரிமை கொண்டிருக்கிறார் என்பதை அசையாச்சொத்து வணிகர் உடன்பாடு மற்றும் ஒப்புகை செய்கிறார்:—

(i) ஒதுக்கீடுபெறுபவர் (அடுக்குவீடு / மனைக்கட்டு)-இன் முழுமையான தனி-உடைமையுரிமை (exclusive ownership)யைக் கொண்டிருப்பார்.

(ii) ஒதுக்கீடுபெறுபவர், பொதுப் பரப்பிடங்களில் பிரிக்கப்படாத, ஒத்த அளவுப் பங்கைக் கொண்டிருப்பார். பொதுப் பரப்பிடங்களில் ஒதுக்கீடுபெறுபவரின் பங்கு/நலன் பிரிக்கப்படவில்லை மற்றும் பிரிக்கப்படவோ தனித்தனியாக்கப்படவோ முடியாது என்பதால், ஒதுக்கீடுபெறுபவர் ஏனைய கையுடைமைக்காரர்கள், பேணுகைப் பணிக்குழுவினர் முதலியவர்களுடன் சேர்ந்து அவர்களுக்கு ஏதேனும் வசதிக்குறைவையோ இடையூற்றையோ விளைவிக்காமல் பொதுப்பரப்பிடத்தைப் பயன்படுத்த வேண்டும். மேலும், பொதுப் பரப்பிடத்தை ஒதுக்கீடுபெறுபவர் பயன்படுத்தும் உரிமையானது பேணுகைச் செலவீடுகளையும் பொருந்தத்தக்க பிற செலவீடுகளையும் எப்போதும் உரிய நேரத்தில் செலுத்துவதற்கு உட்பட்டதாகும்.

அசையாச்சொத்து வணிகர், சட்டத்தில் வகைசெய்தவாறு தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பிடமிருந்து உரியவாறு முடிப்புச் சான்றிதழைப் பெற்ற பின்பு, ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கத்திடம் அப்பொதுப்பரப்பிடங்களைக் கையளிக்க வேண்டும் என்பது தெளிவுறுத்தப்படுகிறது;

(iii) (அடுக்குவீடு/மனைக்கட்டு)இன் விலையைக் கணக்கிடுதலானது, நிலத்தின் விலை, அடுக்குவீடு மட்டுமல்லாமல் மற்றைய பொதுப் பரப்பிடங்களின் வரிகள், அடுக்குவீட்டுக்கு மின்கம்பி அமைத்தல் மற்றும் மின்இணைப்பு பெறுதலுக்கான செலவுத்தொகை, மின்தூக்கி, நீர்க்குழாய் அமைப்பு, வண்ணம்பூசி முடித்தல், தரையிடுதல், கதவுகள், பலகணிகள், பொதுப் பரப்பிடங்களில் தீப்பிடிப்பைக் கண்டுபிடிக்கும் தீயணைப்புக் கருவிகள், 11-ஆம் பத்திற்கேற்பப் பேணுகைச் செலவீடு முதலியவற்றுக்கான செலவுத்தொகை வசூலிப்பதை உள்ளடக்கும். மற்றும் (அடுக்குவீடு / மனைக்கட்டு) மற்றும் செயல்திட்டத்திற்குள் வகைசெய்யப்பட வேண்டிய அனைத்து வசதிவாய்ப்புகள், வசதி நலங்கள், தனிக்குறிப்பீடுகள் ஆகியவற்றை வகைசெய்வதற்கான செலவுத்தொகையையும் உள்ளடக்கும்.

(iv) ஒதுக்கீடுபெறுபவர், செயல்திட்டம் மற்றும் நேர்வுக்கேற்ப அவரது அடுக்குவீடு/மனைக்கட்டின் வளர்மான அளவைக் கணிப்பீடு செய்வதற்காகச் செயல்திட்ட மனையிடத்தைப் பார்வையிடும் உரிமையைக் கொண்டிருப்பார்;

(1.9) (அடுக்குவீடு / மனைக்கட்டு) .................. ஊர்திக்கொட்டில்/ ஊர்தி நிறுத்துவதற்கான மேல்மூடிய பரப்பிடத்துடன் சேர்த்து, அனைத்து நோக்கங்களுக்காகவும் பிரிக்கப்பட முடியாத ஓர் ஒற்றை அலகாகவே பாவிக்கப்படும் என்பது அசையாச்சொத்து வணிகரால் ஒதுக்கீடுபெறுபவருக்குத் தெளிவாக்கப் படுகிறது. இச்செயல்திட்டம் தன்னுரிமை கொண்டது, மேற்சொன்ன நிலத்தைக் கொண்டிருக்கும் தன்அடக்கச் செயல்திட்டம் ஆகும், மற்றும் ஒதுக்கீடுபெறுபவரின் நன்மைக்கான உள்கட்டமைப்பின் ஒருமைப்பாட்டு நோக்கத்திற்காக அன்றி, அதன் சுற்றுப்புறத்திலுள்ள வேறேதேனும் செயல்திட்டத்துடன் ஒரு பகுதியாகவோ மற்றும்/அல்லது தொடர்பு அல்லது இணைப்புக் கொண்டதாகவோ அல்லது பிறவாறாகவோ வேறேதேனும் செயல்திட்டம்/ மண்டலத்தின் ஒரு பகுதியாக அமையாது என்று உடன்பாடு

கொள்ளப்படுகிறது. இச்செயல்திட்டத்தின் வசதிவாய்ப்புகளும் வசதிநலங்களும் செயல்திட்ட ஒதுக்கீடு பெறுபவர்களின் பயனுக்கும் நுகர்ச்சிக்கும் மட்டுமே கிடைக்கத்தக்கவை ஆகும்.

(1.10) அசையாச்சொத்துவணிகர், (செயல்திட்டத்திற்குத் தொடர்புடைய அடைமானக் கடனும் அடைமானங்களுக்கான வட்டியும், அல்லது வேறு வில்லங்கங்கள் மற்றும் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்புகள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றுக்குச் செலுத்தத்தக்க அத்தகைய வேறு கடப்பாடுகள் உள்ளிட்ட நிலத்தின் விலை, தளம் வாடகை, நகராட்சி அல்லது வேறு உள்ளாட்சி வரிகள், நீர் அல்லது மின்சாரச் செலவீடுகள், பேணுகைச் செலவீடுகள் உள்ளடங்கிய புறச்செலவினங்களின் செலுத்தங்களுக்கென ஒதுக்கீடுபெறுபவர்களிடமிருந்து திரட்டிய அனைத்துப் புறச்செலவினங்களையும், அடுக்கு வீட்டின் நேரடியான உடைமையை மாற்றல்செய்வதற்கு முன்பு, செலுத்துவதற்கு உடன்படுகிறார். அசையாச்சொத்து வணிகர் ஒதுக்கீடுபெறுபவர்களிடமிருந்து அவரால் திரட்டப்பட்ட புறச்செலவினங்கள் அனைத்தையும் அவற்றில் எதையும், அல்லது ஒதுக்கீடுபெறுபவர்களுக்கு அடுக்குவீட்டை மாற்றல்செய்வதற்கு முன்பு கடப்பாடு, அடைமானக்கடன் அல்லது அதன் மீதான வட்டியைச் செலுத்தத் தவறுகிறார் என்றால், அசையாச்சொத்து வணிகர், சொத்தை மாற்றல்செய்த பின்பும் கூட, அத்தகைய புறச் செலவினங்களைச் செலுத்தவும், அவை எவருக்குச் செலுத்தப்பட வேண்டிக் கட்டுறுத்தப்படுகின்றனவோ அந்த அதிகாரஅமைப்பு அல்லது ஆளுக்கு நேரிணையான தண்டச் செலவீடுகள், எவையுமிருப்பின் அவற்றைச் செலுத்தவும் கடப்பாடுள்ளவர் மற்றும் அத்தகைய அதிகாரஅமைப்பு அல்லது ஆளால் அவற்றிற்காக எடுக்கப்படலாகும் எவையேனும் சட்ட நடவடிக்கைகளின் செலவுத் தொகைக்கும் கடப்பாடுள்ளவர் என்பதற்கு உடன்படுகிறார்.

(1.11) ஒதுக்கீடுபெறுபவர் விண்ணப்ப நேரத்தில் (அடுக்குவீடு/ மனைக்கட்டுக்கான) மொத்த விலையில் பகுதிச் செலுத்தம் எனும் வகையில் முன்பதிவுத் தொகையாக ₹ ……………….. (ரூபாய் ….................…………….........
........................................................................................................... மட்டுமே) பணம் செலுத்தியிருக்கிறார். அசையாச்சொத்து வணிகர் அதன் பெறுகையை ஈங்கிதனால் ஒப்புகைசெய்கிறார் மற்றும் (E இணைப்புப்பட்டியல்)

செலுத்துகைத் திட்டத்தில் வகுத்துரைத்தவாறு அதில் குறித்துரைத்த நேரத்திற்குள்ளும் முறையிலும் அசையாச்சொத்து வணிகரால் கோரப்படலாகிறவாறு, (அடுக்குவீடு/மனைக்கட்டின்) எஞ்சிய விலையைச் செலுத்த ஒதுக்கீடுபெறுபவர் ஈங்கிதனால் உடன்படுகிறார்:

ஆனால், ஒதுக்கீடுபெறுபவர் செலுத்தத்தக்க தொகை எதன் வகையிலும் செலுத்தக் காலத்தாழ்வு செய்கிறார் என்றால், அவர் விதிகளில் குறித்துரைத்த வீதத்தில் வட்டி செலுத்தக் கடப்பாடுடையவர் ஆவார்.

2. *செலுத்தும் முறை*.—உடன்பாட்டின் வரையீடுகளுக்கும் அசையாச்சொத்து வணிகர் கட்டுமானத்தின் அடுத்தடுத்த கட்டத்தைக் கடைப்பிடித்து ஒழுகுதலுக்கும் உட்பட்டு, ஒதுக்கீடுபெறுபவர். எழுத்துருவில் அசையாச்சொத்து வணிகரால் கோரப்படுவதன் பேரில், (C இணைப்புப் பட்டியல்) செலுத்துகைத் திட்டத்தில் சொல்லியவாறு வகுத்தமைத்த நேரத்திற்குள் '.....................................................................................................' ஆதரவாக .......................................................இல் செலுத்தத்தக்க கணக்கு வைத்திருப்பவர் காசோலை / கேட்பு வரைவோலை/ வங்கியர் காசோலை அல்லது (பொருந்தத்தக்கவாறு) இணையவழிச் செலுத்தும் வாயிலாக அனைத்துச் செலுத்தங்களையும் செய்ய வேண்டும்.

3. *பணஅனுப்பீடுகள் தொடர்பான சட்டங்களுக்கு இணங்கிநடத்தல்*.—(3.1) ஒதுக்கீடுபெறுபவர், இந்தியாவுக்கு வெளியே வாழ்பவர் என்றால், 1999-ஆம் ஆண்டு அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம், 1934-ஆம் ஆண்டு இந்தியச் சேமவங்கி (Reserve Bank)ச் சட்டம், அவற்றின் கீழ்ச் செய்த விதிகள், ஒழுங்குமுறைவிதிகள் அல்லது அவற்றின் கீழ்ச் செய்த எவையேனும் சட்டமுறையான திருத்துகை(கள்), மாற்றமைவுகள், மேலும் பணச் செலுத்துகையின் அனுப்பீடு, இந்தியாவுக்குள் அசையாச் சொத்தைக் கையகப்படுத்தல்/ விற்பனை/மாற்றல்செய்தல் முதலியவை உள்ளடங்கலாக வேறுஎவையேனும் பொருந்தத்தக்க சட்டங்கள் ஆகியவற்றில் விதித்துள்ளவாறு தேவைப்படும் முறைமைகளுடன் (formalities) இணங்கிநடக்க அவர் மட்டுமே பொறுப்பாக்கத்தக்கவர் ஆவார்; மற்றும் இந்த உடன்பாட்டின் கீழ் அசையாச்சொத்து வணிகர் தம்முடைய கடமைப்பொறுப்புகளை நிறைவேற்ற இயல்விக்கும் அத்தகைய இசைவளிப்பு, ஒப்புதலளிப்புகளுக்கு வகைசெய்ய வேண்டும். திருப்பிச்செலுத்துகை, காப்புப் பிணையம் ஆகியவை உடன்பாட்டில்

தனித்திறமொழியில் வகைசெய்யப்பட்டது என்றால், 1999-ஆம் ஆண்டு அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம், அல்லது சட்டமுறையான செய்சட்டங்கள் அல்லது அவற்றின் திருத்துகை(கள்), மற்றும் இந்தியச் சேம வங்கியின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளின் அல்லது வேறேதேனும் பொருந்தத்தக்க சட்டத்தின் வகைமுறைகளுக்கு, இணங்கியவாறு செய்யப்பட வேண்டும். ஒதுக்கீடுபெறுபவர், இந்தியச் சேம வங்கியால் பிறப்பிக்கப்பட்ட பொருந்தத்தக்க வழிகாட்டும் நெறிகளுடன் இணங்கிநடக்க, அவர்பாலான ஏதேனும் தவறுகை நிகழ்கையில், அவ்வப்போது திருத்தப்படுகிறவாறு 1999-ஆம் ஆண்டு அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம் அல்லது பொருந்தத்தக்க வேறேதேனும் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எதற்கும் அவர் உட்படுத்தத்தக்கவர் ஆகலாம்.

(3.2) அசையாச்சொத்து வணிகர், மேலுள்ள 3.1ஆம் பத்தியில் குறித்துரைத்த வரைக்கட்டைப் பொறுத்துப் பொறுப்பாக்கத்தக்கவர் ஆகிறார். ஒதுக்கீடுபெறுபவர் இதைப்பற்றிய வகையில் அசையாச்சொத்து வணிகரை முழு ஈட்டுறுதி பெற்ற மற்றும் தீங்கற்ற நிலையில் வைத்துவர வேண்டும். இந்த உடன்பாடு கையெழுத்திட்ட பிந்திய நிலையில் ஒதுக்கீடுபெறுபவரின் வாழுமிடம் நிலையில் மாற்றம் எதுவும் இருக்கிறபோதெல்லாம், அதைப்பற்றி உடனடியாக அசையாச்சொத்துவணிகருக்கு எழுத்துருவில் தெரியப்படுத்துவும், பொருந்தத்தக்க சட்டங்களின் கீழ் எவையேனுமிருக்கும் தேவையான முறைகளுக்கு இணங்கி நடப்பதும் அவருடைய முழு பொறுப்புடைமை ஆகும். எவரேனும் மூன்றாம் சார்பினர், ஒதுக்கீடுபெறுபவர் எவருடைய சார்பிலும் செலுத்தம்/அனுப்பீடுகளைச் செய்யும் நேர்வில், அது குறித்து அசையாச்சொத்து வணிகர் பொறுப்பாக்கத் தக்கவர் ஆகார் மற்றும் அத்தகைய மூன்றாம் சார்பினர், இதில் விண்ணப்பித்த, கூறப்பட்ட அடுக்குவீட்டின் விண்ணப்பம்/ஒதுக்கீட்டில் உரிமை எதையும் எந்த வழியிலும் கொண்டிருக்க மாட்டார். மேலும் அசையாச்சொத்து வணிகர், ஒதுக்கீடுபெறுபவருக்கு ஆதரவாக மட்டுமே செலுத்தத்திற்கான பற்றுச் சீட்டுகளைக் கொடுப்பார்.

4. *செலுத்தங்களைச் சரிக்கட்டுதல்/பயன்படுத்துதல்.*— ஒதுக்கீடுபெறுபவர் அவரது பெயரில் (அடுக்குவீடு/மனைக்கட்டு பற்றிய, சட்டமுறையான நிலுவைகளுக்கு எதிராக ஏதேனும் கொடுபாடுகளின் தலைப்புகள் கீழ் அவரால் செய்யப்பட வேண்டிய செலுத்தங்கள் அனைத்தையும் சரிக்கட்ட/

பயன்படுத்த அசையாச்சொத்து வணிகருக்கு அதிகாரமளிக்கிறார்; மேலும் ஒதுக்கீடுபெறுபவர், அவரது செலுத்தங்களை, வேறேதேனும் முறையில் அசையாச்சொத்து வணிகர் சரிக்கட்டுவதற்கு மறுப்பு/கோரிக்கை/கட்டளை எதுவும் செய்யமாட்டார் என்பதற்குப் பொறுப்பேற்கிறார்.

5. *காலம் இன்றியமையாதது. (Time is Essence).*—அசையாச்சொத்து வணிகர், அதிகாரஅமைப்பிடம் செயல்திட்டத்தைப் பதிவுசெய்யும் நேரத்தில் மற்றும் ஒதுக்கீடுபெறுபவருக்கு (அடுக்குவீடு/மனைக்கட்டை) மற்றும் ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கத்திடம் அல்லது நேர்வுக்கேற்ப, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பிடம் பொதுப் பரப்பிடத்தைக் கையளிக்கும் வகையில் வெளிப்படுத்தியவாறு, செயல்திட்ட முடிப்புக் கால அட்டவணையைக் கடைப்பிடித்தொழுக வேண்டும். அதேபோன்று, ஒதுக்கீடு பெறுபவர், தவணைச் செலுத்தங்களையும் அவரால் செலுத்தத்தக்க பிற கொடுபாடுகளையும், உடன்பாட்டின் கீழ் பிற கடமைப் பொறுப்புகளை, (C இணைப்புப் பட்டியல்) செலுத்துகைத் திட்டத்தில் வகைசெய்தவாறு அசையாச் சொத்து வணிகரால் ஒரே நேரத்தில் கட்டுமானம் முடிக்கப்படுவதற்கு உட்பட்டு எதிரேற்பதையும் காலத்தே செய்ய வேண்டும்.

6. *செயல்திட்டம்/அடுக்குவீடு கட்டுமானம்.*—அசையாச்சொத்து வணிகரால் எடுத்துரைக்கப்பட்டவாறு, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பால் ஒப்புதலளிக்கப்பட்டிருக்கிற (இந்த உடன்பாட்டுடன் சேர்த்து இணைக்கப்பட்டுள்ள) (அடுக்குவீடு/மனைக்கட்டு) குறித்த அமைப்பு விவரத்திட்டம், தனிக்குறிப்பீடுகள், வசதிநலங்கள், வசதிவாய்ப்புகள் ஆகியவற்றை ஒதுக்கீடுபெறுபவர் பார்வையிட்டிருக்கிறார் மற்றும் செலுத்துகைத் திட்டம், தளத் திட்டங்கள், அமைப்புவிவரத் திட்டம், மேலும் தனிக்குறிப்பீடுகள், வசதிநலங்கள், வசதிவாய்ப்புகள் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அசையாச்சொத்து வணிகர், மேற்சொன்ன அமைப்பு விவரத் திட்டங்கள், தளத் திட்டங்கள் மற்றும் தனிக்குறிப்பீடுகள், வசதி நலங்கள், வசதிவாய்ப்புகளுக்கு இணங்கியவாறு செயல்திட்டத்தை வளர்மானம் செய்ய வேண்டும். இந்த உடன்பாட்டின் வரையீடுகளுக்கு உட்பட்டு, அசையாச்சொத்து வணிகர் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்புகளால் ஒப்புதலளிக்கப்பட்ட அத்தகைய திட்டங்களைக் கண்டிப்பாகக்

கடைப்பிடித்தொழுக வேண்டும்; மேலும், அவ்வப்போது திருத்தப்பட்டவாறு, 2012ஆம் ஆண்டு புதுச்சேரி கட்டிடங்கள் துணைவிதிகள் மற்றும் மண்டல நலக்காப்பு ஒழுங்குமுறைவிதிகளால் வகுத்துரைக்கப்பட்ட துணைவிதிகள், தளப்பரப்பிட வீதம் (Floor Area Ratio = FAR) மற்றும் அடர்த்திக் கட்டளை நெறிகள் வகைமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்தொழுகலும் வேண்டும்; இச்சட்டத்தின் கீழ் வகைசெய்த முறையில் அல்லாமல் வேறு மாறுதல், மாற்றுகை/மாற்றமைப்பு எதையும் அத்தகைய திட்டங்களில் செய்வதான விருப்புரிமை ஒன்றை அவர் உடையவர் ஆகார். மேலும், அசையாச்சொத்து வணிகரின் இந்த வரம்பீட்டு மீறுகையானது, உடன்பாட்டின் பொருட்பாடான மீறுகை ஒன்றாக அமையும்.

7. *அடுக்குவீடு/மனைக்கட்டு உடைமை.—*

(7.1) **மேற்சொன்ன (அடுக்குவீடு/மனைக்கட்டின்) உடைமைக்கான காலஅட்டவணை:** ஒதுக்கீடுபெறுபவருக்கு அடுக்குவீடு/மனைக்கட்டின் உடைமையையும், மற்றும் ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கம் அல்லது நேர்வுக்கேற்ப, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்புக்குப் பொதுப் பரப்பிடத்தின் உடைமையையும் காலத்தே ஒப்படைப்பது இந்த உடன்பாட்டின் சாரமாகும் என்பதற்கு அசையாச்சொத்து வணிகர் உடன்படுகிறார் மற்றும் அறிந்திருக்கிறார். போர், வெள்ளம், பஞ்சம், தீ, சூறாவளி, நிலநடுக்கம் அல்லது இயற்கைக் குழப்பங்கள் காரணமாகவோ, வலிய மிகப்பெரிய வரைக்கட்டுகள் காரணமாக விளைந்த வேறேதேனும் குழப்பம் காரணமாகவோ ஒரு காலத்தாழ்வு அல்லது தவறுகை இருந்தாலன்றி, அசையாச்சொத்து வணிகர், ……………......................……. அன்று ……….................………… இடத்தில், செயல்திட்டத்தின் அனைத்துத் தனிக்குறிப்பீடுகள், வசதி நலங்கள், வசதிவாய்ப்புகள் ஆகியவற்றுடன், ஆயத்தமான மற்றும் முழுவதுமான பொதுப் பரப்பிடங்களுடன் சேர்த்து (அடுக்குவீடு/மனைக்கட்டு) உடைமையைக் கையளிக்க உறுதிகூறுகிறார். செயல்திட்டத்தின் முடிப்பு வலிய மிகப்பெரிய வரைக்கட்டுகள் காரணமாகக் காலந்தாழ்கிறது என்றால், அப்போது, கால அட்டவணைக்கேற்ப ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவரை இயலாததாக அது ஆக்கியுள்ள, (அடுக்குவீடு/மனைக்கட்டு) உடைமையை ஒப்படைப்பதற்கான கால நீட்டிப்புக்கு அசையாச்சொத்து வணிகர் உரிமைப்பாடுள்ளவர் என்பதற்கு ஒதுக்கீடுபெறுபவர் உடன்படுகிறார். வலிய மிகப்பெரிய வரைக்கட்டுகள் காரணமாகச் செயல்திட்டத்தை நிறைவேற்ற அசையாச்சொத்து வணிகருக்கு

முடியவில்லை என ஆகின்ற நிகழ்வில், அப்போது, இந்த ஒதுக்கீடு முடிவுறுத்தப்பட்டதாகிவிடும். மேலும், அந்தத் தேதியிலிருந்து 45 நாட்களுக்குள் அசையாச்சொத்து வணிகர் ஒதுக்கீடுபெறுபவரிடமிருந்து ஒதுக்கீட்டுக்காக அவரால் பெறப்பட்ட முழுத் தொகையையும் அவருக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அசையாச்சொத்து வணிகர் அத்தகைய முடிவுறுத்தம் பற்றி ஒதுக்கீடுபெறுபவருக்குத் தெரிவிக்க வேண்டும். ஒதுக்கீடுபெறுபவரால் செலுத்தப்பட்ட பணத்தைத் திருப்பிக் கொடுத்த பின்பு, அசையாச்சொத்து வணிகருக்கு எதிராக எவையேனும் உரிமைக்கோரிக்கைகள் முதலியவற்றை அவரோ/அவளோ உரிமைகள் பெற்றிருக்கமாட்டார் என்பதற்கு ஒதுக்கீடுபெறுபவர் உடன்படுகிறார். மேலும், அசையாச்சொத்து வணிகர் இந்த உடன்பாட்டின் கீழ் அனைத்துக் கடமைப்பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளிலிருந்து விடுதலை செய்யப்படவும் விடுவிக்கப்படவும் வேண்டும்.

(7.2) **உடைமை கொள்வதற்கான நடைமுறை:** அசையாச்சொத்து வணிகர் திட்டமிடும் அதிகாரஅமைப்பிடமிருந்து கையுடைமைச் சான்றிதழைப் பெற்றதன் பேரில், கையுடைமைச் சான்றிதழ் வழங்கிய தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் இந்த உடன்பாட்டின் தனித்திறமொழியில் (அடுக்குவீடு/மனைக்கட்டு) உடைமைகொள்ள எழுத்துருவில் ஒதுக்கீடுபெறுபவருக்குக் கொடுக்கமுனைதல் வேண்டும். வகைமுறைகள், முறைமைகள், ஆவணமாக்கம் எதனையும் நிறைவேற்றுவதில் அசையாச்சொத்து வணிகர்பாலான தவறுகை எனும் நேர்வில், அசையாச்சொத்து வணிகர் ஒதுக்கீடுபெறுபவருக்கு ஈட்டுறுதியளிக்க உடன்படுகிறார். மற்றும் பொறுப்பேற்றுக் கொள்கிறார். ஒதுக்கீடுபெறுபவர். செயல்திட்டத்தின் கையுடைமைச் சான்றிதழ் வழங்கிய பின்பு அசையாச்சொத்து வணிகர்/ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கள்/நேர்வுக்கேற்ப தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பால் தீர்மானிக்கப்பட்டவாறு பேணுகைச் செலவீடுகளைச் செலுத்த உடன்படுகிறார். அசையாச்சொத்து வணிகர், நேர்வுக்கேற்ப அடுக்குவீடு/மனைக்கட்டின் உரிமையைமாற்றியளிக்கும் நேரத்தில் அதன் கையுடைமைச் சான்றிதழை, ஒதுக்கீடுபெறுபவருக்குக் கையளிக்க வேண்டும்.

(7.3) **ஒதுக்கீடுபெறுபவர் அடுக்குவீடு/மனைக்கட்டின் உடைமை கொள்ளத் தவறுகை:** பத்தி (7.2)க்கு ஏற்ப அசையாச்சொத்து வணிகரிடமிருந்து எழுத்துருவில் தெரிவிப்பைப் பெற்றதன் பேரில்,

ஒதுக்கீடுபெறுபவர் இந்த உடன்பாட்டில் வகுத்துரைத்தவாறு தேவையான ஈட்டுறுதிகள், பொறுப்புறுதிகள் மற்றும் அத்தகைய வேறு ஆவணமாக்கத்தை நிறைவேற்றுவதன் வாயிலாக, அசையாச்சொத்து வணிகரிடமிருந்து (அடுக்குவீடு / மனைக்கட்டு) உடைமையை எடுத்துக் கொள்ள வேண்டும். மற்றும் அசையாச்சொத்து வணிகர் ஒதுக்கீடுபெறுபவருக்கு (அடுக்குவீடு/ மனைக்கட்டு) உடைமையைக் கொடுக்க வேண்டும். (7.2) ஆம் பத்தியில் வகைசெய்யப்பட்ட காலத்திற்குள் ஒதுக்கீடுபெறுபவர் உடைமைகொள்ளத் தவறும் நேர்வில், அத்தகைய ஒதுக்கீடுபெறுபவர் (7.2)ஆம் பத்தியில் குறித்துரைத்தவாறு பேணுகைச் செலவீடுகளைச் செலுத்தும் கடப்பாடுடையவராகத் தொடர்ந்திருப்பார்.

(7.4) **ஒதுக்கீடுபெறுபவர் உடைமைகொள்ளல்:** கையுடைமைச் சான்றிதழைப் பெற்று (அடுக்குவீடு/மனைக்கட்டு)இன் நேரடியான உடைமையை ஒதுக்கீடுபெறுபவருக்குக் கையளித்த பின்பு, ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கம் அல்லது நேர்வுக்கேற்ப, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பிடம் பொதுப் பரப்பிடங்கள் உள்ளடங்கலாகத் தேவையான ஆவணங்களையும் திட்டங்களையும் உள்ளூர்ச் சட்டங்களுக்கு ஏற்பக் கையளிப்பது அசையாச்சொத்து வணிகரின் பொறுப்பாக அமையும்.

(7.5) **ஒதுக்கீடுபெறுபவர் அறவுசெய்தல் (Cancellation by Allottee)** – ஒதுக்கீடுபெறுபவர், சட்டத்தில் வகைசெய்தவாறு செயல்திட்டத்திலுள்ள தமது ஒதுக்கீட்டை அறவுசெய்யும்/ பின்வாங்கிக்கொள்ளும் உரிமையைக் கொண்டவர் ஆவார்:

ஆனால், ஒதுக்கீடுபெறுபவர், அசையாச்சொத்து வணிகர் பாலான தவறுகை எதுவுமின்றிச் செயல்திட்டத்திலிருந்து அறவுசெய்ய/ பின்வாங்கிக் கொள்ளக் கருதுகிற போது, இதிலுள்ள அசையாச்சொத்து வணிகர் ஒதுக்கீட்டுக்காகச் செலுத்திய முன்பதிவுத் தொகையை மட்டுமே இழப்பதற்கு உரிமைப்பாடு உடையவர் ஆவார். ஒதுக்கீடுபெறுபவரால் செலுத்தப்பட்ட மீதிப் பணத்தொகை அத்தகைய அறவுசெய்த 45 நாட்களுக்குள் ஒதுக்கீடு பெறுபவருக்கு அசையாச்சொத்து வணிகரால் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

(7.6) **சரியீடு (Compensation)** – சட்டத்தின் கீழ் வகைசெய்த முறையில் செயல்திட்டம் வளர்மானம் செய்யப்பட்டு வருகிற அல்லது செய்யப்பட்டிருந்த நிலத்தின் குறைபாடுள்ள உரிமைமூலம் காரணமாக ஒதுக்கீடுபெறுபவருக்கு விளைவித்த ஏதேனும் இழப்பு எனும் நேர்வில், அசையாச்சொத்துவணிகர் ஒதுக்கீடுபெறுபவருக்குச் சரியீடுசெய்ய வேண்டும்; மற்றும் இந்த வகைமுறையின் கீழ் வட்டிக்கும் சரியீட்டுக்குமான உரிமைக்கோரிக்கை, அப்போதைக்குச் செயலாற்றலிலுள்ள சட்டம் எதன் கீழும் வகைசெய்த வரம்பீட்டால் தடைசெய்யப்படுதல் ஆகாது.

ஒரு வலிய மிகப்பெரிய நிகழ்ச்சி நிகழ்ந்தால் தவிர, (i) (7.1)ஆம் பத்தியில் குறித்துரைத்த தேதியளவில் உரியவாறு முடிக்கப்பட்டு, இந்த உடன்பாட்டின் வரையீடுகளுக்கு இணங்கியவாறு, அல்லது (ii) சட்டத்தின் கீழ்ப் பதிவை இடைநீக்குதல் அல்லது பின்னறவுசெய்தல் காரணமாக ஒரு வளர்மானராகத் (as developer) தமது அலுவல்தொழிலைத் தொடராததன் காரணமாக, அல்லது வேறேதேனும் காரணத்தின் பொருட்டு, அசையாச்சொத்துவணிகர் (அடுக்குவீடு/மனைக்கட்டை) கட்டி முடிக்கத் தவறுகிறார் அல்லது உடைமையைக் கொடுக்க இயலாதவராகிறார் என்றால், ஒதுக்கீடுபெறுபவர்களின் கோரிக்கை பேரில், ஒதுக்கீடுபெறுபவர் அவருக்குக் கிடைக்கத்தக்க வேறேதேனும் குறைதீர்வழிக்கு ஊறுபாடின்றிச் செயல்திட்டத்திலிருந்து பின்வாங்கிக்கொள்ள விரும்புகிறார் எனும் நேர்வில், அசையாச்சொத்து வணிகர் (அடுக்குவீடு / மனைக்கட்டு) பொறுத்தமட்டில், இச்சட்டத்தின் கீழ் வகைசெய்த முறையில் சரியீடு உட்பட விதிகளில் குறித்துரைத்த வீதத்தில் வட்டியுடன் அவரால் பெறப்பட்ட மொத்தத் தொகையை அது கொடுபட வேண்டியதாகிற 45 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும் கடப்பாடுடையவர் ஆவார். ஆனால், ஒதுக்கீடுபெறுபவர் செயல்திட்டத்திலிருந்து பின்வாங்கிக்கொள்ள விரும்பவில்லை என்றால், அசையாச்சொத்துவணிகர், காலத்தாழ்வாகும் ஒவ்வொரு மாதத்திற்கும் விதிகளில் வகுத்துரைத்த வீதத்தில் வட்டியை (அடுக்குவீடு/மனைக்கட்டு) உடைமை கையளிக்கப்படும் வரை ஒதுக்கீடுபெறுபவருக்குச் செலுத்த வேண்டும்; அது கொடுபட வேண்டியதாகும் 45 நாட்களுக்கள் ஒதுக்கீடுபெறுபவருக்கு அசையாச்சொத்துவணிகரால் செலுத்தப்பட வேண்டும்.

8. *அசையாச்சொத்துவணிகரின் விவரிப்புரைகள் மற்றும் சார்புறுதிகள் (Representations and Warranties of the Promoter)*.— அசையாச் சொத்துவணிகர் ஈங்கிதனால் பின்வருமாறு ஒதுக்கீடுபெறுபவருக்கு விவரிப்புரையும் சார்புறுதியும் செய்கிறார்:

(i) (அசையாச்சொத்துவணிகர்), மேற்சொன்ன நிலத்தைப் பொறுத்த மட்டில் முழுவுரிமையுள்ள, தெளிவான, சந்தைப்படுத்தத்தக்க உரிமை மூலத்தையும், மேற்சொன்ன நிலத்தில் வளர்மானம்செய்ய வேண்டுறுத்தப்படும் உரிமைகளையும், செயல்திட்டத்திற்காகக் கூறப்பட்ட நிலத்தின் முழுவுரிமையுள்ள, உள்ளபடியான, நேரடியான மற்றும் சட்டமுறையான உடைமையையும் கொண்டிருக்கிறார்;

(ii) அசையாச்சொத்துவணிகர், செயல்திட்டத்தின் வளர்மானத்தை மேற்கொள்ள சட்ட முறையான உரிமைகளையும் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்புகளிடமிருந்து வேண்டுறுத்திய ஒப்புதலளிப்புகளையும் பெற்றிருக்கிறார்;

(iii) மேற்சொன்ன நிலத்தின் அல்லது செயல்திட்டத்தின் பேரில் வில்லங்கங்கள் எவையும் இல்லை;

(நிலத்தின் பேரில் வில்லங்கங்கள் எவையும் இருக்கும் நேர்வில், அத்தகைய நிலத்தில் அல்லது அதன் மீதான உரிமைகள், உரிமைமூலம், நலன் மற்றும் சார்பினரின் பெயர் உள்ளடங்கலாக அத்தகைய வில்லங்கங்களின் விவரங்களைத் தருக) ;

(iv) மேற்சொன்ன நிலம், செயல்திட்டம் அல்லது (அடுக்குவீடு/ மனைக்கட்டு) பொறுத்தமட்டில், ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பு முடிவுறாநிலையில் வழக்கீடுகள் எவையும் இல்லை;

(v) செயல்திட்டம், மேற்சொன்ன நிலம் மற்றும் (அடுக்குவீடு/ மனைக்கட்டு) பொறுத்தமட்டில் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்புகளால் வழங்கப்பட்ட ஒப்புதலளிப்புகள், உரிமங்கள், இசைவாணைச்சீட்டுகள் அனைத்தும் செல்லுநிலையும் நிலைபேறும் உள்ளவை ஆகும், மற்றும் பின்வரும் உரிய சட்டச் செயல்முறையைப் பின்பற்றிப் பெறப்பட்டிருக்கின்றன. மேலும், செயல்திட்டம், மேற்சொன்ன நிலம், கட்டிடம் மற்றும் (அடுக்குவீடு/ மனைக்கட்டு), பொதுப் பரப்பிடங்கள் தொடர்பாகப் பொருந்தத்தக்க சட்டங்களுக்கு எல்லா நேரங்களிலும் அசையாச்சொத்துவணிகர் இணக்கமாக நடத்திருக்கிறார் மற்றும் தொடர்ந்திருப்பார்.

(vi) அசையாச்சொத்துவணிகர் இந்த உடன்பாட்டைச் செய்துகொள்ளும் உரிமை பெற்றிருக்கிறார் மற்றும் இதில் உருவாக்கப்பட்ட ஒதுக்கீடுபெறுபவரின் உரிமை, உரிமைமூலம், நலன் ஆகியவை கேடாகப் பாதிக்கலாகும் ஏதேனும் செயலை அல்லது நிகழ்ச்சியைச் செய்திருக்கவில்லை அல்லது செய்வதை விட்டுவிடாமல் இல்லை.

(vii) இந்த உடன்பாட்டின் கீழ் ஒதுக்கீடுபெறுபவரின் உரிமைகளை எந்த முறையிலும் பாதிக்கும், செயல்திட்டம் மற்றும் மேற்சொன்ன (அடுக்குவீடு/மனைக்கட்டு) உள்ளடங்கிய மேற்சொன்ன நிலம் பொறுத்த மட்டில், அசையாச்சொத்துவணிகர், ஆள் அல்லது சார்பினர் எவருடனும் விற்பனை உடன்பாடு மற்றும்/அல்லது வளர்மான உடன்பாடு அல்லது வேறெதேனும் உடன்பாடு/ஏற்பாடு எதையும் செய்து கொண்டிருக்கவில்லை;

(viii) இந்த உடன்பாட்டில் கருத்துகொள்ளப்பட்ட முறையில் அசையாசச்சொத்துவணிகர் மேற்சொன்ன (அடுக்குவீடு/மனைக்கட்டை) விற்பதிலிருந்து எவ்வகையிலும் கட்டுப்படுத்தப்படவில்லை என்று அசையாச்சொத்துவணிகர் உறுதி செய்கிறார்.

(ix) மாற்றளிப்பு ஒப்பாவணத்தை நிறைவேற்றும் நேரத்தில், அசையாச் சொத்துவணிகர் (அடுக்குவீடு/மனைக்கட்டின்) சட்டமுறையான ஒழிவான (Vacant), அமைதியான, நேரடி உடைமையை ஒதுக்கீடுபெறுபவருக்கும், பொதுப் பரப்பிடத்தை ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கம் அல்லது நேர்வுக்கேற்ப தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பிடமும் கையளிக்க வேண்டும்;

(x) பட்டியல் சொத்து ஏதேனும் இந்துக் கூட்டுக் குடும்பத்தின் (HUF) நுவல்பொருளாக இல்லை மற்றும் அதன்பகுதி எதுவும் இளவர் (Minor) எவராலும் சொந்தம் கொள்ளப்படவில்லை, மற்றும்/அல்லது இளவர் எவரும் அந்தப் பட்டியல் சொத்தின் மீது உரிமை, உரிமைமூலம், உரிமைக்கோரிக்கை எதையும் கொண்டிருக்கவில்லை;

(xi) மேற்சொன்ன செயல்திட்டத்தைப் பொறுத்தமட்டில் அரசுக்குச் செலுத்தத்தக்க கொடுபாடுகள் (Dues), வீதங்கள், செலவீடுகள், வரிகள் மற்றும் பிற பணங்கள், விதிப்புகள், சுமத்தல்கள், முனைமங்கள் (Premiums), இழப்பீடுகள், மற்றும்/அல்லது பிற புறச்செலவினங்கள் எப்படிப்பட்டதாயினும், அவற்றை அசையாச்சொத்துவணிகர் உரியவாறு செலுத்தியிருக்கிறார், முடிப்புச் சான்றிதழ் வழங்கப்படுகிற வரையில் மற்றும் (அனைத்துத்

தனிக்குறிப்பீடுகள், வசதிநலங்கள், வசதி வாய்ப்புகளுடன், ஆயத்தம் செய்துள்ள) பொதுப் பரப்பிடங்களுடன் சேர்த்து அடுக்குவீடு, மனைக்கட்டு அல்லது நேர்வுக்கேற்ப கட்டிடத்தின் உடைமைகொள்வது வரையில் தகுதிறமுள்ள அதிகார அமைப்புகளுக்குச் செலுத்துவதையும் கொடுத்துத் தீர்ப்பதையும் தொடர்ந்து செய்வார்.

(xii) உரிய அரசு அல்லது வேறேதேனும் உள்ளாட்சி அமைப்பு அல்லது அதிகாரஅமைப்பிடமிருந்து அறிவிப்பு எதுவும் அல்லது (மேற்சொன்ன நிலத்தைக் கையகப்படுத்துகை அல்லது வேண்டுறுத்திப் பெறுகை உள்ளடங்கலாக) சட்டமன்றச் செய்சட்டம், அரசு அவசரச்சட்டம், ஆணை, அறிவிக்கை எதுவும் மேற்சொன்ன நிலம் மற்றும்/அல்லது செயல்திட்டம் பொறுத்தமட்டில், அசையாச்சொத்துவணிகரால் பெறப்பட்டிருக்கவில்லை அல்லது அவர் மீது சார்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**9.** *தவறுகைகள் நிகழ்வுகளும் விளைவுகளும்*.—(9.1) வலிய மிகப்பெரிய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, அசையாச்சொத்துவணிகர் பின்வரும் நிகழ்வுகளில் ஒரு தவறுகையர் (Defaulter) எனக் கருதப்படுவார்:–

(i) அசையாச்சொத்துவணிகர் (7.1) ஆம் பத்தியில் குறித்துரைத்த கால அளவுக்குள் ஒதுக்கீடுபெறுபவருக்கு (அடுக்குவீடு/மனைக்கட்டு) ஆயத்த நிலையில்/உடைமை கைக்கொள்ளுவதற்கு வகைசெய்யத் தவறுகிறார், அல்லது அதிகாரஅமைப்பிடம் செயல்திட்டதைப் பதிவுசெய்த நேரத்தில் வெளிப்படுத்திய வரையறுத்த காலஅளவுக்குள் செயல்திட்டத்தை முடிக்கத் தவறுகிறார். இந்தப் பத்தியின் நோக்கத்திற்காக, ஆயத்தநிலையில் உடைமை கைக்கொள்ளல் (Ready to move in possession) என்பது, சார்பினர்களுக்கிடையே உடன்பட்டவாறு, அனைத்துத் தனிக் குறிப்பீடுகள், வசதிநலங்கள், வசதிவாய்ப்புகளின் வகைமுறை உள்ளடங்கலாக எல்லாவற்றைப் பொறுத்தும் முடிக்கப்பட்டுக் குடியிருக்கத்தக்கதும், திட்டமிடும் அதிகாரஅமைப்பால் கையுடைமைச் சான்றிதழ் வழங்கட்டிருப்பதுமான அடுக்குவீடு / மனைக்கட்டு எனப் பொருள்படும்;

(ii) சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் அல்லது ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளின் கீழ் அசையாச் சொத்துவணிகரின் பதிவினுடைய இடைநீக்கம் அல்லது பின்னறவுசெய்தலின் பொருட்டு ஒரு வளர்மானர் (Developer) என்ற நிலையில் அவரது அலுவல்தொழிலைத் தொடராதிருத்தல்.

(9.2) மேலே பட்டியலிட்ட வரைக்கட்டுகளின் கீழ் அசையாச்சொத்து வணிகரால் தவறுகை எதுவும் செய்யப்பட்ட நேர்வில், ஒதுக்கீடுபெறுபவர் பின்வருவனவற்றிற்கு உரிமைப்பாடு உடையராவார்:–

(i) அசையாச் சொத்துவணிகரால் கோரப்பட்டவாறு, அசையாச்சொத்து வணிகருக்கான செலுத்தங்கள் மேற்கொண்டும் செய்வதை நிறுத்திவிடுதல். ஒதுக்கீடுபெறுபவர் செலுத்தங்கள் செய்வதை நிறுத்தி விடுகிறார் என்றால், அசையாச்சொத்துவணிகர் அடுத்தக்கட்ட கட்டுமானத்தை முடிப்பதன் மூலம் நிலைமையைச் சரிசெய்ய வேண்டும்; அதன்பின்பு, ஒதுக்கீடுபெறுபவர் வட்டியில்லாமல் அடுத்த செலுத்தத்தைச் செய்ய வேண்டுறுத்தப்படுவார்; அல்லது

(ii) ஒதுக்கீடுபெறுபவர் உடன்பாட்டை முடிவுறுத்தம் செய்யும் விருப்புரிமையைக் கொண்டிருப்பார். அத்தகைய நேர்வில், அசையாச்சொத்து வணிகர் (அடுக்குவீடு/மனைக்கட்டு) வாங்கிய வகையில், (பணம் செலுத்தப்பட்ட) தலைப்பு வகை எதுவாக இருந்தாலும் அதன் கீழ் ஒதுக்கீடுபெறுபவரால் செலுத்தப்பட்ட பணம் முழுவதும் முடிவுறுத்த அறிவிப்பைப் பெற்ற தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குள் விதிகளில் வகுத்துரைத்த வீதத்தில் வட்டியுடன் சேர்த்துத் திருப்பிச் செலுத்தும் கடப்பாடுடையவர் ஆவார்:

ஆனால் ஓர் ஒதுக்கீடுபெறுபவர் செயல்திட்டத்திலிருந்து பின்வாங்கிக் கொள்ளவோ அல்லது உடன்பாட்டை முடிவுறுத்தவோ விரும்பாதபோது, அசையாச்சொத்துவணிகர் (அடுக்குவீடு/மனைக்கட்டு) உடைமையைக் கையளிக்கும் வரையில் காலத்தாழ்வான ஒவ்வொரு மாதத்திற்கும் விதிகளில் குறித்துரைத்த வீதத்திலான வட்டியை ஒதுக்கீடுபெறுபவருக்குச் செலுத்த வேண்டும் மற்றும் அது கொடுபட வேண்டியதாகும் நாற்பத்தைந்து நாட்களுக்குள் அசையாச்சொத்துவணிகரால் அது செலுத்தப்பட வேண்டும்.

(9.3) ஒதுக்கீடுபெறுவர் பின்வரும் நிகழ்ச்சிகள் நிகழ்வதன்பேரில் ஒரு தவறுகையராகக் கருதப்படவேண்டும்:–

(i) இதற்கு இணைப்பாகவுள்ள (C இணைப்புப்பட்டியல்) செலுத்துகைத் திட்டத்திற்கு ஏற்ப அசையாச்சொத்துவணிகரால் செய்யப்பட்ட .................. அடுத்தடுத்த கோரிக்கைகளின் பொருட்டு அறிவிப்புக்

கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், இதைப் பொறுத்து ஒதுக்கீடுபெறுபவர் செலுத்தங்களைச் செய்யத் தவறுகிற நேர்வில், ஒதுக்கீடுபெறுபவர் விதிகளில் வகுத்துரைத்த வீதத்தில் செலுத்தப்பட்டிராத தொகைகளின் பேரிலான வட்டியை அசையாச்சொத்து வணிகருக்குச் செலுத்தும் கடப்பாடுடையவர் ஆவார்;

(ii) இதைப்பொறுத்து அசையாச்சொத்துவணிகரிடமிருந்து அறிவிப்பைப் பெற்ற பின்பு, ................. அடுத்தடுத்த மாதங்களின் ஒரு காலஅளவுக்கு அப்பாலும் மேலே பட்டியலிட்ட வரைக்கட்டின் கீழ் ஒதுக்கீடுபெறுபவரின் தவறுகை தொடர்ந்திருக்கிற நேர்வில், அசையாச்சொத்துவணிகர், (அடுக்குவீடு/மனைக்கட்டு) ஒதுக்கீட்டை அறவுசெய்வதுடன் பதிவுத் தொகையையும் வட்டிக் கடப்பாடுகளையும் கழித்துக்கொண்ட பின்பு ஒதுக்கீடுபெறுபவருக்குத் தொகையைத் திருப்பித்தர வேண்டும். அதன்பேரில் இந்த உடன்பாடு முடிவுற்றதாக அமையும், ஆனால், அசையாச்சொத்துவணிகர் அத்தகைய உடன்பாட்டின் முடிவுறுத்ததிற்குக் குறைந்தது முப்பது நாட்களுக்கு முன்னர் அத்தகைய முடிவுறுத்தம் பற்றி ஒதுக்கீடுபெறுபவருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

10. *மேற்சொன்ன அடுக்குவீடு/மனைக்கட்டின் உரிமைமாற்றளிப்பு.*— அசையாச்சொத்துவணிகர் உடன்பாட்டின் கீழ்வரும் 1.2 பத்திக்கேற்ப (அடுக்குவீடு/மனைக்கட்டின்) மொத்த விலையை ஒதுக்கீடு பெறுபவரிடமிருந்து பெற்றதன்பேரில், கையுடைமைச் சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஓர் உரிமைமாற்றளிப்பு ஒப்பாவாணத்தை நிறைவேற்றுவதுடன், பொதுப் பரப்பிடங்களில் அளவொத்த வீதப் பிரிக்கமுடியாத பங்குடன் சேர்த்து (அடுக்குவீடு/மனைக்கட்டின்) உரிமைமூலத்தை ஒதுக்கீடுபெறுபவருக்கு மாற்றளிப்புச் செய்ய வேண்டும். எனினும், அறிவிப்பில் சொல்லப்பட்ட காலஅளவுக்குள் கோரப்பட்டவாறு உரிமைமாற்றளிப்புப் ஒப்பாவணத்தை நிறைவேற்றுதல் வகையில் முத்திரைத் தீர்வை மற்றும் / அல்லது பதிவுச் செலவீடுகள், மற்றும் இடைவிளைவான, சட்டமுறையான அனைத்துச் செலவுகளையும் ஒதுக்கீடுபெறுபவர் வைப்பீடு செய்யத் தவறுகிற நேர்வில், ஒதுக்கீடுபெறுபவரால் முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுச் செலவீடுகளின் செலுத்தம் செய்யப்படும் வரையில் அவர் அவருக்கு ஆதரவாகச் செய்யப்பட உள்ள உரிமைமாற்றளிப்பு ஒப்பாவணத்தின் பதிவைநிறுத்திவைப்பதற்கு ஒதுக்கீடுபெறுபவர் அசையாச்சொத்து வணிகருக்கு அதிகாரவுரிமையளிக்கிறார்.

11. *மேற்சொன்ன கட்டிடம்/அடுக்குவீடு/செயல்திட்டத்தைப் பேணிவருதல்.*— கையுடைமைச் சான்றிதழ் வழங்கிய தேதியிலிருந்து உள்ளூர்ச் சட்டங்களுக்கேற்ப ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கம் அல்லது நேர்வுக்கேற்ப தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பால் செயல்திட்டததின் பேணுகை மேற்கொள்ளப்படும் வரையில், அசையாச்சொத்துவணிகர் ஒதுக்கீடு பெறுபவர்களிடமிருந்து தகவான கட்டணங்களின்பேரில் செயல் திட்டத்திலுள்ள இன்றியமையாப் பணிகளுக்கு வகைசெய்வதுடன் அவற்றைப் பேணியும் வரவேண்டும்.

(செயல்திட்டப் பேணுகை, உள்கட்டமைப்பு மற்றும் கருவிகலன் (Equipment) தொடர்பான வேறுஎவையேனும் பிரிவுக்கூறுகளையும் புகுத்திடுக)

12. *குறைபாடு பற்றிய கடப்பாடு (Defect Liability).*— [அடுக்குவீடு/மனைக்கட்டு) மற்றும் பொதுப் பரப்பிடத்தின் உடைமையைக் கையளித்த தேதியிலிருந்து 5 (ஐந்து) ஆண்டுக் காலஅளவுக்குள், ஏதேனும் கட்டமைப்புக் குறைபாடு அல்லது வேலைத்திறம், தரம் அல்லது பணிகளின் வகைமுறை அல்லது அசையாச்சொத்துவணிகரின் வேறேதேனும் கடமைப் பொறுப்புகளிலுள்ள ஏதேனும் குறைபாடு, அத்தகைய வளர்மானம் தொடர்பான விற்பனை உடன்பாட்டுக்கு ஏற்ப அசையாச்சொத்துவணிகரின் கவனத்திற்குக் கொணரப்படுகிற நேர்வில், அத்தகைய குறைபாடுகளை மேற்கொண்டும் கட்டணம் ஏதும் இல்லாமல் முப்பது நாட்களுக்குள் சீர்ப்படுத்துவது அசையாச்சொத்துவணிகரின் கடமையாகும். மேலும், அத்தகைய நேரத்திற்குள் அத்தகைய குறைபாடுகளை அசையாச்சொத்துவணிகர் சீரமைக்கத் தவறுகிற நிகழ்வில், குறையுற்ற ஒதுக்கீடுபெறுபவர், சட்டத்தின் கீழ் வகைசெய்தவறான முறையில் உரிய சரியீட்டைப்பெற உரிமைப்பாடு உடையவர் ஆவார் என்று உடன்பாடு கொள்ளப்படுகிறது.

13. *மொத்தப் பேணுகைச் செலவீடுகளைச் செலுத்துவதற்கு உட்பட்டுப் பொதுப் பரப்பிடங்களையும் வசதிவாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்ள ஒதுக்கீடுபெறுபவரின் உரிமை.*— தீர்மானிக்கப்பட்டவாறு அல்லது அதன்பின்பு பணியமர்த்தப்பட்ட பேணுகை முகமை அல்லது ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கம் (அல்லது அதனால் பணியமர்த்தப்பட்ட பேணுகை முகமை)யால்

விலைப்பட்டியிட்டவாறு மொத்தப் பேணுகைச் செலவீடுகளையும் காலத்தில் செலுத்துவதற்கும், அவ்வப்போது பேணுகை முகமை அல்லது ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கம் அல்லது நேர்வுக்கேற்ப, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பால் குறித்துரைக்கப்பட்ட வரையீடுகளையும் வரைக்கட்டுகளையும் பொறுத்தமட்டில் ஒதுக்கீடுபெறுபவர் அவரது கடமைப்பொறுப்புகள் அனைத்தும் அவரால் நிகழ்த்தப்படுவதற்கும் உட்பட்டு, ஒதுக்கீடுபெறுபவர் பொதுப் பரப்பிடங்களைப் பயன்படுத்துவதற்கு அவருக்கு உரிமையுள்ளது எனும் குறித்த வகைப் புரிதலின் பேரில் (அடுக்குவீடு/ மனைக்கட்டை) வாங்க அவர் ஈங்கிதனால் உடன்படுகிறார்.

14. *பழுதுநீக்குவதற்காக அடுக்குவீட்டில் நுழையும் உரிமை.*— அசையாச்சொத்துவணிகர்/பேணுகை முகமை/ஒதுக்கீடு பெறுபவர்கள் சங்கமானது பொதுப் பரப்பிடங்கள், ஊர்திக்கொட்டில்/மேல்மூடிய நிறுத்துமிடம் மற்றும் ஊர்தி நிறுத்துமிடத் திறந்தவெளிகளில் தேவைப்படும் பேணுகைப் பணிகளுக்கு வகைசெய்வதற்காக, வரையறையின்றி எளிதாகச் சென்றுவரும் உரிமை கொண்டிருப்பார்கள். பொருட்படுத்தத்தக்க குறைபாடு எதையும் சரிசெய்யும் நோக்கில், சூழ்நிலைகள் பிறவாறு வேண்டுறுத்தினாலன்றி, உரிய அறிவிப்புக்குப் பின்பும், வழக்கமான வேலை நேரங்களின் போதும், ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கம் மற்றும் அல்லது பேணுகை முகமை அடுக்கு வீடு / மனைக்கட்டு அல்லது அதன் பகுதி எதிலும் நுழைவதற்கான இசைவைத் தர ஒதுக்கீடுபெறுபவர் உடன்படுகிறார்.

*15. பயன்பாடு (Usage), - அடித்தளம் மற்றும் பணிச்சேவைப்பரப்பிடங்களின் பயன்பாடு.*— ........................................................................ (செயல்திட்டத்தின் பெயர்)க்குள் பணிச்சேவைப்பரப்பிடங்குள் எவையேனுமிருப்பின், அவை அமைவிடம் கொண்டவாறான, அடித்தளப்பகுதி(கள்) மற்றும் வரம்பீடில்லாத மின் துணைநிலையம், மின்மாற்றி, டி.ஜி.தொகுப்பு அறைகள் நிலத்தடி நீர்த்தொட்டிகள், நீரேற்று அறைகள், பேணுகை மற்றும் பணி அறைகள் தீயணைப்புக்குழாய்கள் மற்றும் கருவிகலன்கள் முதலியன உள்ளடங்கலாக மட்டும் வரையறுக்கப்படாமல் நிறுத்துமிடத் திறந்தவெளிகள் மற்றும் பணிப்பரப்பிடங்கள் போன்ற அத்தகைய நோக்கங்களுக்காகவும் ஒப்பளித்த திட்டங்களுக்கு ஏற்ப இசைவுபெற்ற வேறு பயன்பாடுகளுக்காகவும் தனித்துக்குறியிடப்படவேண்டும்.

ஒதுக்கீடுபெறுபவர் நிறுத்துமிடத் திறந்தவெளிகள் என தனித்துக்குறியிட்டவை அல்லாத வேறு பணிப் பரப்பிடங்களையும் அடித்தளப் பகுதிகளையும் எவ்வகையிலும் எந்த முறையிலும் பயன்படுத்த இசைவு தரப்படமாட்டார். மேலும் பேணுகைப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒதுக்கீடுபெறுபவர்களால் அமைக்கப்பட்ட ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கத்தின் பயன்பாட்டுக்காக அவை ஒதுக்கீடு செய்யப்படும்.

*16. பொதுவாக இணங்கிநடத்தல்.— (16.1)* **அடுக்குவீடு பொறுத்து:**

(16.1.1) மேலுள்ள 12-ஆம் பத்திக்கு உட்பட்டு, ஒதுக்கீடுபெறுபவர் உடைமை மேற்கொண்ட பின்பு, அவரது சொந்தச்செலவில் பழுதுநீக்கி நல்ல நிலையில் அடுக்கு வீட்டைப் பேணிவரும் முழுப் பொறுப்புள்ளவர் ஆவார், மற்றும் கட்டிடத்திற்குள் அல்லது கட்டிடத்திற்கு, அல்லது (அடுக்குவீடு/மனைக்கட்டு), அல்லது மாடிப்படிகள், மின்தூக்கிகள், பொதுவழிகள், தாழ்வாரங்கள், சுற்றுவட்டப் பரப்பிடங்கள், வாயில்முகப்பு அல்லது மதில் சுவருக்கு, எவையேனும் சட்டங்கள் அல்லது ஏதேனும் அதிகாரஅமைப்பின் விதிகளுக்கு மீறுகையாக எதையும் செய்யவோ அல்லது செய்விக்க இடங்கொடுக்கவோ கூடாது அல்லது அடுக்குவீட்டுக்கு மாற்றம் அல்லது மாற்றமைப்பு அல்லது சேர்மானங்கள் செய்யக்கூடாது. மேலும், அடுக்குவீடு, அதன் சுவர்கள் (மற்றும் தடுப்புகள், கழிவுநீர்க்குழாய்கள், வடிகுழாய்கள், குழாய் மற்றும் அதற்கு அடுத்துள்ளவை அல்லது அதற்குச் சொந்தமானவைகளை நல்ல மற்றும் குடியிருக்கத்தக்க நிலையில் பேணிக்காக்க வேண்டும், பழுதுநீக்கியும் பொருத்தமான மற்றும் உரிய நிலையிலும் பேணிவர வேண்டும். கட்டிடத்தின் தாங்கி (Support), காப்பிடம் (Shelter) முதலியன எவ்வழியிலும் சேதம் அல்லது கேடுறுத்தம் செய்யப்படவில்லை என உறுதிப்படுத்த வேண்டும்.

(16.1.2) ஒதுக்கீடுபெறுபவர், கட்டிடத்தின் முகப்பு/முகப்புத்தோற்றம் அல்லது செயல்திட்டத்தின் புறத்தோ கட்டிடங்களுக்குள்ளோ அல்லது பொதுப் பரப்பிடங்களில் எவ்விடத்திலுமோ வழிகாட்டிப் பலகை, பெயர்ப்பலகை, நியோன்விளக்கு, பலரறி பொருள் (Publicity Material), விளம்பரப் பொருள் முதலிய எதையும் அவர் வைக்கமாட்டார் என மேற்கொண்டும் பொறுப்பேற்கிறார், உறுதியளிக்கிறார் மற்றும்

பொறுப்புறுதியளிக்கிறார். ஒதுக்கீடுபெறுபவர் வெளிப்புற நிறத் திட்டமுறையை அல்லது பலகணிகளின் வெளிப்புற நிறத்தை மாற்றமாட்டார் அல்லது வெளிப்புற முகப்புத்தோற்றம் அல்லது வடிவமைப்பில் மாற்றம் எதையும் செய்யக்கூடாது. (மேற்கொண்டும் ஒதுக்கீடுபெறுபவர் அடுக்குவீட்டில் இடர்விளைவிக்கும் அல்லது எளிதில் தீப்பற்றும் பண்டங்கள் எதையும் சேகரித்து வைத்தல்கூடாது. அல்லது கட்டிடத்தின் பொது வழிகள் அல்லது மாடிப்படிகளில் கனமான பொருள் எதையும் வைத்தல்கூடாது. ஒதுக்கீடுபெறுபவர் அடுக்குவீட்டின் வெளிப்புற மற்றும் சுமைதாங்கும் சுவர் உள்ளடங்கலாக, சுவர் எதையும் அகற்றவும் மாட்டார்.

(16.1.3) ஒதுக்கீடுபெறுபவர், அசையாச்சொத்து வணிகரால் மற்றும் அதன் பின்பு ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கம் மற்றும்/அல்லது ஒதுக்கீடுபெறுபவர்கள் சங்கத்தால் பணியமர்த்தப்பட்ட பேணுகை முகமையால் நிறுவப்பட்ட மின் அமைப்புகளுக்கு இணக்கமான வகையில் அதன் மின் சுமையைத் திட்டமிடுதலும் பகிர்ந்தளித்தலும் வேண்டும். ஒதுக்கீடுபெறுபவர் மேற்கூறிய வரைக்கட்டுகளில் எதையும் மீறுவதால் எழுகின்ற இழப்பு அல்லது சேதங்கள் எவற்றிற்கும் பொறுப்பாக்கத்தக்கவர் ஆவார்.

(16.2) **மனைக்கட்டுகளைப் பொறுத்து:**

(16.2.1) மேலுள்ள 12-ஆம் பிரிவுக்கூறுக்கு உட்பட்டு, ஒதுக்கீடுபெறுபவர் உடைமை மேற்கொண்ட பின்பு, அவரது சொந்தச் செலவில் மனைக்கட்டைப் பேணிவரும் முழுப் பொறுப்புள்ளவர் ஆவார், மற்றும் மனைக்கட்டு அல்லது சுற்றுச்சுவர்கள், சாலைகள், பொதுப் பரப்பிடங்கள், சுற்றுவட்டப் பரப்பிடங்களுக்கு, எவையேனும் சட்டங்கள் அல்லது ஏதேனும் அதிகாரஅமைப்பின் விதிகளுக்கு மீறுகையாக எதையும் செய்யவோ அல்லது செய்விக்க இடங்கொடுக்கவோ கூடாது; மற்றும் மனைக்கட்டு, கழிவுநீர்க்குழாய்கள், வடிகுழாய்கள், குழாய் மற்றும் அதற்கு அடுத்துள்ளவை, அல்லது அதற்குச் சொந்தமானவைகளைப் பழுதுநீக்கி நல்ல நிலையில் பேணிக்காக்க வேண்டும், மேலும் உரிய நிலையில் அதைப் பேணிவரவும் வேண்டும்.

(16.2.2) ஒதுக்கீடுபெறுபவா், இடர்விளைவிக்கும் அல்லது எளிதில் தீப்பற்றும் பண்டங்கள் எவற்றையும் மனைக்கட்டில் சேகரித்து வைக்கமாட்டார் என்று மேற்கொண்டும் பொறுப்பேற்கிறார், உறுதிப்படுத்துகிறார் மற்றும் பொறுப்புறுதியளிக்கிறாா. ஒதுக்கீடுபெறுபவர் மேற்கூறிய வரைக்கட்டுகளில் எதையும் மீறுவதால் எழுகிற இழப்பு அல்லது சேதங்கள் எவற்றிற்கும் பொறுப்பாக்கத்தக்கவர் ஆவார்.

17. *சார்பினர்கள் சட்டங்கள், அறிவிக்கைகள் முதலியவற்றிற்கு இணக்கமாக நடத்தல்.*— சார்பினர்கள், செயல்திட்டத்திற்குப் பொருந்தத்தக்க சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைவிதிகள், அறிவிக்கைகள் அனைத்தையும் முழுமையான அறிவுடன் ஓர் (அடுக்குவீடு/மனைக்கட்டின்) ஒதுக்கீட்டுக்கான இந்த உடன்பாட்டைச் செய்துகொள்கிறார்கள்.

18. *கூடுதல் கட்டுமானங்கள்.*— இச்சட்டத்தில் வகைசெய்தவாறு தவிர, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பால்/அமைப்புகளால் கட்டிடத் திட்டம், அமைப்புவிவரத் திட்டம், ஒப்பளிக்கப்பட்ட திட்டம் மற்றும் தனிக்குறிப்பீடுகள், வசதிநலன்கள் மற்றும் வசதிவாய்ப்புகள் ஒப்புதலளிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட பின்பு, செயல்திட்டத்தில் எவ்விடத்திலும் சேர்மானங்களைச் செய்யவோ அல்லது கூடுதலான கட்டமைப்புகளைச் செய்யவோ அசையாச்சொத்துவணிகர் உரிமை எதையும் கொண்டிருக்கவில்லை என அவர் பொறுப்பேற்கிறார்.

19. *அசையாச்சொத்துவணிகர் அடைமானம் வைத்தல் அல்லது பொருட்பிணைப்பொறுப்பை உருவாக்குதல் கூடாது.*— அசையாச் சொத்துவணிகர் இந்த உடன்பாட்டை நிறைவேற்றிய பின்பு, (அடுக்குவீடு/ மனைக்கட்டு/கட்டிடம்) பேரில் அவர் அடைமானம் வைக்கவோ அல்லது ஒரு பொருட்பிணைப்பொறுப்பை உருவாக்கவோ கூடாது; மற்றும் அத்தகைய அடைமானம் அல்லது பொருட்பிணைப்பொறுப்பு செய்யப்படுகிறது அல்லது உருவாக்கப்படுகிறது என்றால், அப்போது, அப்போதைக்குச் செயலாற்றலிலுள்ள வேறு சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய அடைமானம் அல்லது பொருட்பிணைப்பொறுப்பு அத்தகைய (அடுக்குவீடு/மனைக்கட்டு/கட்டிடத்தை) எடுத்துக்கொண்டிருக்கிற அல்லது எடுத்துக்கொள்ள உடன்பட்டிருக்கிற ஒதுக்கீடுபெறுபவரின் உரிமையையும் நலனையும் பாதிக்காது.

20. *புதுச்சேரி அடுக்குவீடு உடைமையுரிமைச் சட்டம்.*— அசையாச்சொத்து வணிகர், 1987-ஆம் ஆண்டு புதுச்சேரி அடுக்குவீடு உடைமையுரிமைச் சட்டத்தின் (சட்டம் 8/1987) வகைமுறைகளுக்கு இணங்கியவாறு செயல்திட்டம் நிறைவுடன் இருக்கிறது என உறுதிப்படுத்தியிருக்கிறார்.

அசையாச் சொத்து வணிகர், புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்குப் பொருந்தத்தக்க பல்வேறு சட்டங்கள்/ஒழுங்குமுறை விதிகளுக்கு இணக்கமாக இருப்பதைக் காட்டுதல்.

21. *கட்டுறுத்தும் செயல்விளைவு (Binding Effect).*—முதலாவதாக, ஒதுக்கீடு பெறுபவர் (இணைப்புப்பட்டியல் C) செலுத்துகைத் திட்டத்தில் விதிக்கப்பட்டவாறு கொடுபடவேண்டிய செலுத்தங்களுடன் சேர்த்து, அனைத்து இணைப்புப்பட்டியல்களுடன் ஒதுக்கீடுபெறுபவரால் பெறப்பட்ட தேதியிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் ஒப்படைக்கிற வரையிலும், இரண்டாவதாக, அசையாச்சொத்துவணிகரால் தெரியப்படுத்தியவாறும் தெரியப்படுத்தியபோதும் ...................... (சார்-பதிவாளரின் தொடர்புடைய அலுவலரின் முகவரியைக் குறிப்பிடுக) தொடர்புடைய சார்-பதிவாளரின் அலுவலகத்தின் முன்பு அதைப் பதிவுசெய்வதற்காக ஒதுக்கீடுபெறுபவர் முன்னிலையாகிறார் எனும் வரையிலும், அசையாச்சொத்துவணிகரால் இந்த உடன்பாடு ஒதுக்கீடுபெறுபவருக்கு மேலனுப்பப்படுதல் என்பது, அசையாச்சொத்துவணிகர் அல்லது ஒதுக்கீடுபெறுபவர் பால் சார்த்தத்தக்க ஒரு கட்டுறுத்தும் கடமைப்பொறுப்பை உருவாக்காது. ஒதுக்கீடுபெறுபவர்(கள்) இந்த உடன்பாட்டைப் பெற்ற தேதியிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் அதை நிறைவேற்றி அசையாச்சொத்துவணிகரிடம் ஒப்படைக்கவோ மற்றும் அல்லது அசையாச்சொத்துவணிகரால் தெரியப்படுத்தியவாறும் தெரியப்படுத்திய போதும் அதைப் பதிவு செய்வதற்காகச் சார்-பதிவாளரின் முன்பு முன்னிலையாகவோ தவறுகிறார் என்றால், அப்போது, அசையாச்சொத்துவணிகர் அக்குறைபாட்டைச் சீர்செய்ய ஒதுக்கீடுபெறுபவருக்கு ஓர் அறிவிப்பைச் சார்வுசெய்ய வேண்டும்; ஒதுக்கீடுபெறுபவரால் அவ்வாறு பெறப்பட்ட 30 (முப்பது) நாட்களுக்குள் அது சீர்செய்யப்படவில்லை என்றால் ஒதுக்கீடுபெறுபவரின் விண்ணப்பம் அறவு செய்யப்பட்டதாகப் பாவிக்கப்படும், மேலும், முன்பதிவுத் தொகை உள்ளடங்கலாக அதனுடன் இணைவாக ஒதுக்கீடுபெறுபவரால் வைப்பீடு

செய்யப்பட்ட தொகைகள் அனைத்தும் வட்டி எதுவும் அல்லது எவ்வகைப்பட்டதாயினும் சரியீடு எதுவும் இன்றி ஒதுக்கீடுபெறுபவருக்குத் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும்.

*22. முழுமையான உடன்பாடு (Entire Agreement).*—இந்த உடன்பாடு, இதன் நுவல்பொருளைப் பொறுத்து, அதன் இணைப்புப்பட்டியல்களுடன் சேர்த்து, சார்பினர்களுக்கிடையே முழுமையான உடன்பாடாக அமைகிறது; மேலும் மேற்சொன்ன அடுக்குவீடு/மனைக்கட்டு நேர்வுக்கேற்ப கட்டிடம் பொறுத்து, சார்பினர்களுக்கு இடையே எவையேனும் புரிதல்கள் (Understandings), வேறு எவையேனும் உடன்பாடுகள், ஒதுக்கீட்டுக்கடிதம், கடிதத்தொடர்புகள், ஏற்பாடுகள், எழுத்துருவிலோ அல்லது வாய்மொழியாகவோ இருப்பின் அவை அனைத்தையும் மேலறவு செய்கிறது.

23. *திருத்துகைக்கு உரிமை (Right to Amend).*—இந்த உடன்பாடு சார்பினர்களின் எழுத்துவழி இசைவளிப்பு வாயிலாக மட்டுமே திருத்துகைசெய்யப்படலாம்.

24. *இந்த உடன்பாட்டின் வகைமுறைகள் ஒதுக்கீடுபெறுபவர்/பிந்தைய ஒதுக்கீடுபெறுபவர்கள் பேரில் பொருந்தத்தக்கவை ஆதல்.*— (அடுக்குவீடு/மனைக்கட்டு) மற்றும் செயல்திட்டம் பொறுத்தமட்டில் இதில் அடங்கியுள்ள வகைமுறைகள், இதன்கீழ் எழுகின்ற கடமைப்பொறுப்புகள் அனைத்தும், (அடுக்குவீடு/மனைக்கட்டை)ப் பிந்தைய ஒதுக்கீடு பெறுபவர்களுக்கு எதிராகவும் அவர்களாலும் சமநிலையில் பொருந்தத்தக்கவை மற்றும் செயலுறுத்தத்தக்கவை ஆகும். ஏதேனும் மாற்றளிப்பு எனும் நேர்வில், மேற்கூறிய கடமைப்பொறுப்புகள் அனைத்தும், அதன் ஏனைய உட்கருத்துகள் மற்றும் நோக்கங்கள் அனைத்தின் பொருட்டும் (அடுக்குவீடு/மனைக்கட்டுடன்) சேர்ந்து செல்லுதலும் வேண்டும்.

25. *கைதுறப்பு, செயலுறுத்துவதற்கு ஒரு வரம்பீடு ஆகாது (Waiver not a limitation to enforce).*—

(25.1) அசையாச்சொத்துவணிகர், இந்த உடன்பாட்டில் விரித்துரைத்தவாறு அவருடைய உரிமைகளுக்கு ஊறுபாடு இல்லாமல், அவரது ஒற்றை விருப்புரிமை மற்றும் உளத்தேர்வின் பேரில், காலந்தாழ்ந்த செலுத்தத்திற்கான வட்டி செலுத்துவதைக் கைதுறத்தல் உள்ளடங்கலாக

(இணைப்புபட்டியல் C) செலுத்துகைத் திட்டத்திற்கு ஏற்ப ஒதுக்கீடுபெறுபவர் செலுத்தங்களைச் செய்யாத மீறுகையை விட்டுக் கொடுக்கலாம். ஓர் ஒதுக்கீடுபெறுபவர் எனும் நேர்வில் அசையாச்சொத்துவணிகரால் உளத்தேர்வு செலுத்தப்படுதல், வேறு ஒதுக்கீடுபெறுபவர்கள் நேர்விலும் அத்தகைய உளத்தேர்வைச் செலுத்த அசையாச்சொத்துவணிகரின் பேரில் ஒரு முற்கோள் (precedent) மற்றும்/அல்லது கட்டுறுத்தல் ஆகும் எனப் பொருள்கோள்செய்யக் கூடாது என்பது தெளிவுறுத்தம் செய்யப்படுகிறது மற்றும் ஒதுக்கீடுபெறுபவரால் அவ்வாறு உடன்பாடு கொள்ளப்படுகிறது.

(25.2) இதன் வகைமுறைகளை எந்த நேரத்திலும் அல்லது எந்தக் காலஅளவு நேரத்திலும் செயலுறுத்துவது பொருட்டுச் சார்பினர்களின் பேரில் சார்த்தப்படும் தவறுகை, தனித்தனியே மற்றும் கூட்டாக ஒவ்வொரு வகைமுறையையும் செயலுறுத்துவதான வகைமுறைகள் எவற்றையும் அல்லது அதன்பின்பு உரிமை எதையும் கைதுறத்தல் என்பதாகப் பொருள்கோள் செய்யப்படக் கூடாது.

26. *வேறுவேறாகப்பிரித்தல் (Severability)*.—இந்த உடன்பாட்டின் வகைமுறை எதுவும், இச்சட்டம் அல்லது அதன்கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளின் கீழ் வெறிதாகி விழலாகிறது (null and void), அல்லது செயலுறுத்தத்தக்கதாக இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது என்றால், உடன்பாட்டின் அத்தகைய வகைமுறைகள், இந்த உடன்பாட்டின் நோக்கத்துடன் தகவானமுறையில் முரணாகும் அந்த அளவுக்கும், சட்டம் அல்லது அதன்கீழ்ச் செய்த, நேர்வுக்கேற்ப, பொருந்தத்தக்க சட்டத்துடன் இணக்கமாக்கத் தேவைப்படும் அளவுக்கும், திருத்துகை செய்யப்பட்டன அல்லது அடித்து நீக்கப்பட்டன எனக் கொள்ளப்படவேண்டும் மற்றும் இந்த உடன்பாட்டின் எஞ்சிய வகைமுறைகள், இந்த உடன்பாட்டின் நிறைவேற்றுகை நேரத்தில் பொருந்தத்தக்கவாறு, செல்லத்தக்கதாகும் மற்றும் செயலுறுத்தத்தக்கதாகும் எனக் கொள்ளப்படவேண்டும்.

27. *உடன்பாட்டில் சுட்டுகைசெய்த இடத்திலெல்லாம் அளவொத்த பங்கைக் கணக்கிடும் முறை*.— இந்த உடன்பாட்டில் ஒதுக்கீடுபெறுபவரும் செயல்திட்டத்தில் பிற ஒதுக்கீடுபெறுபவரும் (பெறுபவர்களும்) பொதுவில் செலுத்தம் எதையும் செய்ய வேண்டும் என்று வரைக்கட்டு விதிக்கப்பட்டிருக்கிற இடத்திலெல்லாம், அது, (அடுக்குவீடு/மனைக்கட்டின்)

விரிப்புமூடிய பரப்பிடமானது, செயல்திட்டத்தில் (அடுக்குவீடுகள்/ மனைக்கட்டுகள்) அனைத்தின் மொத்த விரிப்புமூடிய பரப்பிடத்துடன் கொண்டிருக்கும் அளவொத்த வீத முறையில் கணக்கிடப்பட வேண்டும்.

28. *மேற்கொண்டும் செயலுறுதிகள் (Further Assurances)*.— இந்த உடன்பாட்டின் அல்லது இதில் சிந்திக்கப்பட்ட ஏதேனும் நடைபாட்டின் வகைமுறையைச் செயல்விளைவாக்கும், அல்லது இதன்கீழ் அல்லது அத்தகைய நடைபாடு எதையும் அடியொற்றி உருவாக்கம் அல்லது மாற்றல் செய்யப்பட வேண்டிய உரிமையை உறுதிப்படுத்தும் அல்லது முழுநிறைவு செய்யும் பொருட்டுத் தகவான முறையில் வேண்டுறுத்தப்படலாகுமாறு, இதில் குறித்தவகையில் வகைசெய்யப்பட்ட முறையாவணங்களுக்கும் செய்கைப் பாடுகளுக்கும் (instruments and actions) கூடுதலாக, இரு சார்பினர்களும் அத்தகைய முறையாவணங்களை நிறைவேற்றவும், ஒப்புகைசெய்யவும் மற்றவரிடம் ஒப்படைக்கவும், அத்தகைய செய்கைப்பாடுகளை மேற்கொள்ளவும் அவர்கள் இருவரும் உடன்படுகிறார்கள்.

29. *நிறைவேற்றும் இடம் (Place of Execution)*.— இந்த உடன்பாட்டின் நிறைவேற்றமானது, அசையாச்சொத்து வணிகருக்கும் ஒதுக்கீடு பெறுபவருக்கும் இடையே ஒருவருக்கொருவர் உடன்பாடு கொள்ளலாகும் அசையாச்சொத்துவணிகர் அலுவலகத்தில் அல்லது வேறு ஏதோவொரு இடத்தில் அதன் அதிகாரம்பெற்ற கையொப்பக்காரர் வாயிலாக அசையாச்சொத்துவணிகரால் அது நிறைவேற்றப்படுவதன் பேரிலும், ஒதுக்கீடுபெறுபவராலும் மற்றும் அசையாச்சொத்துவணிகராலும் உரியவாறு ....................................-ல் உடன்பாடு நிறைவேற்றப்படுகிற பின்பு அல்லது அதே சமயத்தில் மேற்கூறிய உடன்பாட்டின் நிறைவேற்றம் .....................................-ல் (சார் பதிவாளரின் தொடர்புடைய அலுவலரின் முகவரியைக் குறிப்பிடுக) சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படுவதன் பேரிலும் மட்டுமே முடிவுற்றதாகும். இக்காரணத்தால், இந்த உடன்பாடு ......................................-ல் நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படும்.

30. *அறிவிப்புகள் (Notices)*.— இந்த உடன்பாட்டின் மூலம் சிந்திக்கப்பட்டவாறு ஒதுக்கீடு பெறுபவர் மற்றும் அசையாச்சொத்துவணிகர் பேரில் சார்வுசெய்யப்பட வேண்டிய அனைத்து அறிவிப்புகளும்,

ஒதுக்கீடுபெறுபவர் அல்லது அசையாச்சொத்துவணிகருக்கு அடியில் குறித்துரைத்த அவரவருக்குரிய முகவரிகளுக்குப் பதிவஞ்சலில் அனுப்பப்பட்டன என்றால் மட்டுமே, அவை உரியவாறு சார்வு செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படும்.

.................................................. ஒதுக்கீடுபெறுபவர் பெயர்

.................................................. (ஒதுக்கீடு பெறுபவர் முகவரி)

.................................................. அசையாச்சொத்துவணிகர் பெயர்

.................................................. அசையாச்சொத்துவணிகர் முகவரி)

இந்த உடன்பாடு நிறைவேற்றத்திற்குப் பிந்திய நிலையில் மேலுள்ள முகவரியில் மாற்றம் எதுவும் இருக்கிறது என்றால், ஒதுக்கீடுபெறுபவரும் அசையாச்சொத்துவணிகரும் ஒருவருக்கொருவர் பதிவஞ்சல் மூலம் தகவலளிப்பது அவரவரது கடமையாகும். இது தவறுகையில் மேலுள்ள முகவரிக்கு அஞ்சலனுப்பிய அனைத்துக் கடிதத்தொடர்புகளும் கடிதங்களும் அசையாச் சொத்துவணிகர் அல்லது ஒதுக்கீடுபெறுபவரால் பெறப்பட்டிருப்பதாகவே கொள்ளப்படும்.

31. *கூட்டு ஒதுக்கீடுபெறுபவர்கள் (Joint Allottees)*.— கூட்டு ஒதுக்கீடு பெறுபவர்கள் இருக்கும் நேர்வில், அனைத்துக் கடிதத்தொடர்புகளும், எந்த ஒதுக்கீடுபெறுபவரின் பெயர் முதலிலுள்ளதோ அந்த ஒதுக்கீடுபெறுபவருக்கு மற்றும் அவரால் கொடுக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்; அது, அனைத்து உட்கருத்துகள் மற்றும் நோக்கங்களின் பொருட்டு, அனைத்து ஒதுக்கீடுபெறுபவர்களின் பேரில் முறைப்படி சார்வு செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

32. *காப்புரைகள் (Savings)*.—அடுக்குவீடு, மனைக்கட்டு அல்லது கட்டிடத்தின் விற்பனைக்காக இந்த உடன்பாட்டின் நிறைவேற்றம் மற்றும் பதிவுக்கு முன்னர், அத்தகைய அடுக்குவீடு, மனைக்கட்டு அல்லது நேர்வுக்கேற்ப, கட்டிடத்தைப் பொறுத்தமட்டில் ஒதுக்கீடுபெறுபவரால் கையொப்பமிடப்பட்ட விண்ணப்பக் கடிதம், ஒதுக்கீட்டுக் கடிதம், உடன்பாடு

அல்லது வேறேதேனும் ஆவணம் அனைத்தும், விற்பனை உடன்பாட்டின் கீழ் அல்லது சட்டம் அல்லது அதன் கீழ்ச் செய்த விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகளின் கீழ் ஒதுக்கீடுபெறுபவருக்குள்ள உரிமைகளையும் நலன்களையும் வரம்பிடுவதாகப் பொருள்கோள் செய்யப்படக்கூடாது.

33. *ஆளுகைசெய்யும் சட்டம் (Governing Law)*.— இந்த உடன்பாட்டின் கீழ் அல்லது அதிலிருந்து எழும் சார்பினர்களின் உரிமைகளும் கடமைகளும், அப்போதைக்குச் செயலாற்றலிலுள்ள பொருந்தத்தக்க வேறு இந்தியச் சட்டங்கள் உள்ளடங்கலாக, இச்சட்டம் அல்லது அதன்கீழ்ச் செய்த விதிகள் அல்லது ஒழுங்குமுறைவிதிகளுக்கு இணங்கியவாறு பொருள் கொள்ளப்படவும் செயலுறுத்தப்படவும் வேண்டும்.

34. *பூசல் பற்றிய தீர்மானம் (Dispute Resolution)*.—உடன்பாட்டு வரையீடுகளின் பொருள்கோளும் செல்லுந்தன்மையும் மற்றும் சார்பினர்கள் ஒவ்வொருவருடைய உரிமைகளும் கடமைப்பொறுப்புகளும் உள்ளடங்கலாக இந்த உடன்பாட்டின் வரையீடுகள் மற்றும் வரைக்கட்டுகளிலிருந்து எழுகிற அல்லது அவற்றைப் பற்றிக்கொண்டிருக்கிற அல்லது அவற்றிற்குத் தொடர்புடைய பூசல்கள் அனைத்தும் அல்லது எவையும், ஒருவருக்கொருவர் கலந்தாய்வு மூலம் இணக்கமாகத் தீர்வேற்பாடுகொள்ள வேண்டும்; அது தவறினால், சட்டத்தின் கீழ்ப் பணியமர்த்தப்பட்ட நீதித்தீர்ப்பு அலுவலர் வாயிலாகத் தீர்வேற்பாடு செய்யப்பட வேண்டும்.

(சார்பினர்களுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஏற்ப வேறு வரையீடுகள் மற்றும் வரைக்கட்டுகள் எவற்றையும் புகுத்துக. எனினும், அத்தகைய கூடுதலான வரையீடுகளும் வரைக்கட்டுகளும், மேலே விரித்துரைத்த வரையீடுகள் மற்றும் வரைக்கட்டுகள் அல்லது சட்டம் மற்றும் அதன்கீழ்ச் செய்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளைக் குன்றச் செய்யாத வகையில், அல்லது அவற்றிற்கு முரணாகாத வகையில் இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துக).

இதில் இதன்மேல் பெயர்சுட்டிய சார்பினர்கள் மேற்குறிப்பிட்டுள்ள சான்றுரைக்கு அவரவருடைய கையொப்பமிட்டிருக்கிறார்கள், மற்றும் ...............................-ல் (மாநகரம் / நகரம் - பெயர்) மேலே முதலில் எழுதப்பட்ட நாளன்று அத்தகையது எனக் கையொப்பமிட்டுச் சான்றுறுதிசெய்யும் சான்றுரைஞர் முன்னிலையில் இந்த விற்பனை உடன்பாட்டில் கையொப்பமிட்டிருக்கிறார்கள்.

உள்ளே பெயர் சுட்டப்பட்டவரால் கையொப்பமிட்டு ஒப்படைக்கப்பட்டது.

ஒதுக்கீடுபெறுநர் (கூட்டாக வாங்குநர்கள் உட்பட)

1. கையொப்பம் :

பெயர் :

முகவரி :

நிழற்படம்ஒட்டுக மற்றும் அதன் குறுக்கே கையொப்பமிடுக.

நிழற்படம்ஒட்டுக மற்றும் அதன்குறுக்கே கையொப்பமிடுக.

2. கையொப்பம் :

பெயர் :

முகவரி :

நிழற்படம்ஒட்டுக மற்றும் அதன் குறுக்கே கையொப்பமிடுக.

உள்ளே பெயர் சுட்டப்பட்டவரால் கையொப்பமிட்டு ஒப்படைக்கப்பட்டது.

அசையாச்சொத்துவணிகர்:

1. கையொப்பம் (அதிகாரமுறை கையொப்பமிடுபவர்) :

பெயர் :

முகவரி :

....................................-இல் .................................... அன்று கீழ்க்கண்ட சான்றுரைஞர்கள் (Witness) முன்னிலையில் :

1. கையொப்பம் :

பெயர் :

முகவரி :

2. கையொப்பம் :

பெயர் :

முகவரி :

**இணைப்புப் பட்டியல் "A":** (அடுக்குவீடு/மனைக்கட்டு) மற்றும் ஊர்திக்கொட்டில்/மேல்மூடிய வாகனம் நிறுத்துமிடம் (பொருந்தத்தக்கது என்றால்), அனைத்து நான்கு திசை எல்லைகளுடன் சேர்த்து விவரிப்பைப் புகுத்துக.

**இணைப்புப்பட்டியல் "B":** அடுக்குவீட்டின் தளத்திட்டம் மற்றும் குறித்தொதுக்கிய மகிழ்வுந்து (car) வெளியிடம் அல்லது (அடுக்குவீடு) அல்லது (மனைக்கட்டு வளர்மானச்) செயல்திட்டத்தின் அமைப்புவிவரத் திட்டம்.

**இணைப்புப்பட்டியல் 'C':** ஒதுக்கீடுபெறுநரின் பணச்செலுத்துகைத் திட்டம்.

**இணைப்புப்பட்டியல் "D":** (அடுக்குவீடு/மனைக்கட்டின் பகுதியாக உள்ள) தனிக்குறிப்பீடுகள், வசதிநலங்கள், வசதிவாய்ப்புகள்.

**இணைப்புப்பட்டியல் "E":** (செயல்திட்டத்தின் பகுதியாக உள்ள) தனிக்குறிப்பீடுகள், வசதிநலங்கள், வசதிவாய்ப்புகள்.

**இணைப்புப்பட்டியல் "F":** ...................................................................... திட்டமிடும் அதிகாரஅமைப்பால் வழங்கப்பட்ட கட்டிடத் திட்டம்/ அமைப்புவிவரத் திட்டம்.

**இணைப்புபட்டியல் "G":** .................................................... திட்டமிடும் அதிகாரஅமைப்பால் ஒப்புதலளிக்கப்பட்ட செயல்திட்டத்தின் கட்டிடத்திட்டம்/ அமைப்புவிவரத் திட்டம்.

**இணைப்புபட்டியல் "H":** புதுச்சேரி அசையாச்சொத்துவாணிக ஒழுங்குமுறை அதிகாரஅமைப்பினால் வழங்கப்பட்ட செயல்திட்டப் பதிவுச் சான்றிதழ்.

**இணைப்புப்பட்டியல் "I":** செயல்திட்டத்தின் சட்டப்படியான உரிமைமூல ஒப்பாவணம் (Legal Title Deed).

(விற்பனைக்கான இந்த உடன்பாட்டின் 'இணைப்புப்பட்டியல்கள்' சார்பினர்களுக்கு இடையே உடன்பட்டவாறு இருக்க வேண்டும்)

---

**எஸ். தம்மு கணபதி,**
அரசு துணைச்செயலாளர் (வீட்டு வசதி).

---

online publication at **"https://styandptg.py.gov.in"**
*Published by* The Director, Government Press
*Printed at:* Government Central Press, Puducherry.
*Posted at:* Puducherry HPO on every Tuesday